# திருக்கோயில்

OFFICE OF THE STATE EDITOR
32 | ஜூ/73
14 MAR 1973
GAZETTEER UNIT, MADRAS

என் கடன்




மாலை 15] பரிதாபி — மாசி, பங்குனி — மார்ச்சு, 1973 [மணி 6

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசின்



குளித்தலைத் திரு. கடம்பவனேசுவரர் கோயிலில், தைப்பூச விழா நிகழ்ச்சியிற் கலந்துகொண்ட அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களுக்குத் திரு. எம். கந்தசாமி B.A., B.L., M.L.A. அவர்கள் வரவேற்றுச் சிறப்பித்தல்.

## பொருளடக்கம்


1. சைவ சித்தாந்தம்
2. நல்லச் சிற்றம்பலமும் தில்லைச்சிற்றம்பலமும்
3. உயர்வற உயர்நலம் உடையவன்
4. பக்தி நெறி
5. இறைவனின் இயல்பு
6. மூவுலகளந்த சேவடி போற்றி
7. திருமால் அடியார் சிறப்புநலங்கள்
8. இறைவனின் ஐவகை நிலைகள்
9. சம்மந்தரும் பௌத்தமும்
10. செய்திச் சுருக்கம்
11. மதிப்புரைகள்
12. சிவபூசை
13. காஞ்சியில் திருமால் கோயில்கள்
14. ஆடத்தெரியாத கடவுள்
15. திருக்கழுக்குன்றத் தலபுராணம்



## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொள்ளலாம்.

அல்லது. அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் [illegible]




மாலை 15] பரிதாபி — மாசி, பங்குனி — மார்ச்சு 1973 [மணி 6

# சைவ சித்தாந்தம்*

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.,

## முன்னுரை :

சிவபிரானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம், சைவம் எனப்படும். அச் சைவத்தின் சித்தாந்தம் அல்லது கொள்கையே, பொதுவாகச் சைவசித்தாந்தம் என வழங்கப்படும். எனினும் சைவம் என்பதும், சைவசித்தாந்தம் என்பதும், தனித்தனிப் பொருட் குறிப்புடையன ஆகும். சைவம் என்பது இமயம் முதல் குமரி வரையில் இந்திய நாடு முழுவதிலும் பரவியுள்ளது. ஆயினும், காசுமீரச் சைவம் என்றும், கன்னடநாட்டு வீர சைவம் என்றும் பெயர்கள் வழங்கக் காண்கின்றோம். அதுபோல, நம் தமிழ்நாட்டுக்கே தனிச் சிறப்பாக உரிய சைவக் கொள்கையே, சைவசித்தாந்தம் என வழங்கி வருகின்றது. வசுகுப்தர் கல்லடர் சோமானந்தர் அபிநவகுப்தர் முதலிய சான்றோர்களால், காசுமீர நாட்டில் பரப்பப்பெற்றது, காசுமீரச் சைவம். பசவேசுவரர் சென்னபசவேசுவரர் சித்தராமையர் அல்லமாப்பிரபு முதலிய அருளாளர்களால் வளர்க்கப் பெற்றது, கன்னடநாட்டு வீரசைவம். அங்ஙனமே அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் என்னும் சமயாசிரியர்கள் நால்வராலும், மெய்கண்டார் அருள்நந்திசிவம் மறைஞானசம்பந்தர் உமாபதி சிவம் என்னும் சந்தான ஆசிரியர்களாலும், அவர்தம் வழிவந்த மற்றும் பற்பல அருட்பெருஞ் சான்றோர்களாலும், பரப்பி வளர்க்கப் பெற்றதே சைவசித்தாந்தம் எனப்படும்.

## சைவசித்தாந்தத்தின் சிறப்பு :

இத்தகைய சைவசித்தாந்தச் செந்நெறியின் சிறப்பினையும், அருமை பெருமைகளையும் நம்முன்னோர்கள் தம் நூல்களில் பலவகைகளில் விதந்து குறிப்பிட்டுள்ளனர். ''சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்திக்கும்'', ''தற்சிவம் கண்டுளோர் சைவசித்தாந்தரே'', ''சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே'' என்பனபோல வரும் திருமூலர் திருமந்திரத் தொடர்கள், சைவ சித்தாந்தத்தின் சிறப்பினைக் குறிப்பிட்டு உணர்த்துதல் காணலாம்.

---

* சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின் 67-ஆம் ஆண்டு நிறைவுவிழா, திருநெல்வேலியில், தருமையாதீனத்தின் அருளாதரவில் நடைபெற்றபோது, நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (24.12.72).

—ஆசிரியர்

148707
JL
Q2m21,N59TK

சிவப்பிரகாசம் என்னும் நூலில், ஆசிரியர் உமாபதிசிவம், "சைவசித்தாந்தமானது புறச் சமயத்தவர்க்கு இருளாயிருக்கும். அகச் சமயத்தவர்க்கு ஒளியாய் விளங்கும். அளவை நெறிக்கு அளவையாகத் திகழும். இறைவனை யும் உயிர்களையும், பொன்னும் பணியும்போல் அபேதம், இருள்ஒளிபோல் பேதம், சொற் பொருள்போல் பேதாபேதம் என்று கூறும் பிற சமயங்கள் போலாமல், இறைவன் உயிர் களுடன் உடலும் உயிரும் போல் ஒன்றுகவும், கண்ணும் சூரியனும்போல் வேருகவும், கண் ணெளியும் உயிரறிவும் போல் உடனுகவும் இயைந்து நிற்றலை இனிது உணர்த்தும். வேதாந்த நூல்களின் பிழிவாகவும் தெளி வாகவும் திகழும்'' என்கின்ருர்.

"புறச் சமயத்தவர்க்கு இருளாய், அகச் சமயத்து ஒளியாய்ப், புகல் அளவைக்கு அள வாகிப், பொற்பணிபோல் அபேதப் பிறப்பில தாய், இருள் வெளிபோற் பேதமும், சொற் பொருள்போல் பேதாபேதமும் இன்றிப், பெரு நூல் சொன்ன அறத்திறனல் விளைவதாய், உடலுயிர்-கண்அருக்கன்-அறிவொளி போல் பிறிவரும் அத்துவிதம் ஆகும் சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கலுற்ரும்'' என்பது சிவப்பிரகாசம் (7).

மற்றும் இச் சைவசித்தாந்தமானது "உல காயதம் முதலாகச் சிவாத்துவைதம் ஈருக உள்ள பல்வேறு மதங்கள் கூறும் கொள்கைகளை எல்லாம் கடந்தது. வேதத் தலை தருபொரு ளாய் விளங்குவது. ஆயுந்தொறும் அறிஞர் களுக்கு ஆரா இன்பம் அளிப்பது. உள்ளதே தொழிற்படும் என்னும் கொள்கை (சற்காரிய வாத) நெறியினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது'' என்றும், சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையின் சிறப்புகளை ஆசிரியர் உமாபதிசிவம் தொகுத்துக் கூறியருள்கின்ருர்.

"இலவுல காய தாதி
நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவினர் அளவ ளாவாக்
கொள்கைய தாகி, வேதத்
தலைதரு பொருளாய், இன்பாய்த்,
தாவில்சற் காரி யத்தாய்,
மலைவறும் உணர்வாற் பெத்த
முத்திகள் மதித்தாம் அன்றே''

—சிவப்பிரகாசம், 100

(1) சைவசித்தாந்தக் கொள்கை நெறி யினைச் "சித்தாந்தசைவம்'' என்றும் பெரி யோர்கள் வழங்குவர். இது நம் தமிழகத்திற் கும், தமிழ்மொழிக்கும், தமிழ் மக்களுக்குமே உரிய, பழமையும் பெருமையும் மிக்க சிறப்பு நெறியாகும். "சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, தென்னிந்தியர் (திராவிடர்) களின் பேரறிவின் பெருவிளைவாகும். அது மிக விரிவானதும், செல்வாக்கு மிக்கதும், மிகப் பெரிய மாட்சிமை வாய்ந்ததுமாகும். இதனைத் தென்னிந்தியாவிற்கே, குறிப்பாகத் தமிழர்க்கே யுரிய சமயம் எனலாம் (1). ஏனெனில், இதனு டைய முதன்மையான அடிப்படை மேற் கோட் பெருநூல்கள் அனைத்தும், தமிழிலேயே தமிழகத்துச் சான்ருேர் பெருமக்களால், ஒழுங் காக வகுத்து வரையறை செய்து வைக்கப்பட் டுள்ளன. (2) "சைவத் திருமுறைகள் பன்னி ரண்டும், மெய்கண்ட நூல்கள் பதினுன்கும், அவற்றிற்கு மாறுபடாமல் அவற்றைத் தழுவிச் செல்லும் ஏனைய பிற நூல்களுமே, சைவ சித்தாந்தத்தின் அடிப்படை முதன்மை நூல் களாக விளங்குகின்றன.

"திருவள்ளுவர் திருக்குறள் என்னும் தமிழ் வேதமே பசுவாகவும், திருமூலர் திருமந்திரம் என்னும் தமிழாகமமே அப்பசுவின் பாலாகவும், அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் என் னும் நால்வர் பாடிய திருமுறைகளே அப்பா லின் நெய்யாகவும், மெய்கண்டார் அருள்நந்தி சிவம் மறைஞானசம்பந்தர் உமாபதிசிவம்

---

(1) "The Saiva Siddhanta philosophy is the choicest product of the Dravidian intellect. It is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religons of india. It is peculiarly the South-Indian and Tamil Religion."

—Dr. G. U. Pope

(2) "The fact must be born in mind that in Tamil alone exist systematic, authoritative works on the Saiva Siddhanta whereas in Sanskrit either in the Vedic or in the post-Vedic period not even a single systematic work on the philosophy is to be met with, even though its principal tenets are found scattered with much that is rubbish, in the Upanishads and in the Sankhya, the Yoga, the Nyaya, the Vaiseshika and the Vedanta works"

—Maraimalai Adigal

N73·15·b.



என்னும் சந்தான ஆசிரியர்கள் இயற்றிய நூல்களே அந்நெய்யின் சுவையாகவும் அமையச் சிறந்து விளங்குவது, சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை.'' இவ்வாற்ருல் சைவசித்தாந்தம் நம் தமிழ்நாட்டிற்குரிய தமிழ் நெறியேயாதல் தெளியற்பாலது.

(2) சைவசித்தாந்தத் தத்துவ ஆராய்ச்சி, காரணகாரிய அடிப்படையில் (Logical), அறிவுநெறிக்கு ஏற்ப (Rational) அமைந்தது; சிந்திப் பரியதாய்ச் சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவதாய்த் திகழ்வது; பலவகை ஐய வினக்களுக்கும் நல முற விடையளிப்பது. துணிபொருள், ஏது, காட்டு, இணைத்தல், முடித்தல் (பிரதிஞ்ஞை-ஏது-திருட்டாந்தம்-உபநயம்- நிகமனம்) என்னும் ஐவகை யுறுப்புகள் அமையச் சான்றுகள் காட்டி, மெய்ப்பிக்கப்பட்ட கொள்கையே சித்தாந்தம் எனப்படும் முறைமைக்கு ஏற்பத், தருக்கநெறி முறைகள் பிறழாது ஆராய்ந்து காட்டி விளக்கிச் செல்வது. இதற்குப் பின் வரும் சிவஞானபோதப் பேருரைப் பகுதி, சிறந்த எடுத்துக் காட்டாகும்:

> ''முதல்வன் ஐந்தொழில் செய்தல் தன் பொருட்டோ? பிறர் பொருட்டோ? வீணே? தன்பொருட்டெனின், —வரம்பிலின்ப முடைய முதல்வனுக்கு இச்செய்கையான் வரக்கடவதோர் பயனில்லை. உயிர்களின் பொருட்டெனின், உயிர்களும் அவனும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ? பொன்னும் பணியும்போல் அபேதமாயின், அது தன்பொருட்டேயாம். இருளும் வெளியும் போற் பேதமாயின், அவ்வுயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்தற்கு ஒருவாற்ருனும் இயைபில்லை. சொல்லும் பொருளும்போற் பேதாபேதமெனின், அபேதமும் பேதமுமாமென்றல் சமணர் கூறும் அநேகாந்தவாதமாம். சொல்லும் பொருளும் வேறேயாயினுஞ் சொல்வந் தெழலும்பொருள்தோன்றுதல் பற்றிஅபேதமென்பார் மதத்தை ஒருவாற்ருன் உடம்பட்டுப் பேதாபேதமென்னுந் துணையேயன்றி, ஒரு பொருட்கு இரண்டு தன்மை கோடல் பொருந்தாமையின், அது போலியேயாம். இங்ஙனமாகலின், பிறர் பொருட்டெனப்படு பொருந்தாது.
>
> இனி அவ்வாறன்றி வீணெனின்,' பித்தர் செய்யுந் தொழிலோடொக்கும். பித்தரேயன்றி, அறிவான்முதிர்ந்த அரையர் முதலியோரும் வேட்டையாடுதல் சூதாடுதல் உயிர்த்தல் இமைத்தல் ஆவித்தல் தும்முதல் முதலிய வீண் தொழில் செய்யக்காண்டலின், முதல்வனும் அவ்வாறு கொன்னேசெய்தல் அமையுமெனின், வேட்டையாடுதல் புலி முதலிய விலங்குகள் மிக்கு நாடுநலியாமைப் பொருட்டாதல், தமக்கு மடிமை வாராமை முதலியவற்றின் பொருட்டாதல், உணவின் பொருட்டாதல், யாதானுமொரு பயன்குறித்தன்றிச் செய்யாமையானும்; சூதாடுதல் வஞ்சனையாற் பகைவரை வெல்லுவதற்கு உபாயமறிதற் பொருட்டாதல், பணயம்பேசிப் பொருளீட்டற் பொருட்டாதல், யாதானுமொருபயன்கருதியன்றிச் செய்யாமையானும்; உயிர்த்தல் உயிர்நிலையின் பொருட்டாகலானும், இமைத்தல் விழியைப் பாதுகாத்தற் பொருட்டாகலானும், ஆவித்தல் தும்முதல் முதலாயின தங்குறிப்பினன்றிக் காரணத்தான் நிகழ்தலானும், இளஞ்சிருர் செய்யுஞ் சிறுதேருருட்டல் சிற்றிலிழைத்தல் முதலிய விளையாடற்ருெழில்வன்மை முதலியன சோபான முறையாற் பயிலுதற் பொருட்டு இரு முதுகுரவர் முதலியோராற் செலுத்தப்பட்டு நிகழ்தலின், அவை அப் பெரும் பயனுடையவாய், அவ்விளமைப் பருவ மாத்திரையின் மகிழ்ச்சிமீதூர்தலாகிய அற்பபயனும் உடையவாகலானும், அவையெல்லாம் வீண்டொழிலன்மையின், வீண்டொழிலெல்லாம் பித்தர் முதலியோர் செய்யுந் தொழிலேயாம். இங்ஙனமாகலின், ஐந்தொழில் செய்வோன் முதல்வனென்றல் இலக்கண வழுவாமென்று ஆசங்கை நிகழ்ந்தவழி, அதனை நீக்கி வேருயினுங் கலப்பினுல் அவையேயாம் இயைபுடைமையின், உயிர்களின் பொருட்டே முதல்வன் ஐந்தொழில் செய்வன்.''...

இவ்வுரைப் பகுதியால், சைவ சித்தாந்தம் தருக்க நெறிமுறை பிறழாது செல்லும் தன்மையினை, இனிது உணரலாம்.

(3) இனி சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கை வெறும் நம்பிக்கையை மட்டும்

தழுவி, குருட்டியற் போக்கில் அமைந்ததன்று. அஃது இக்கால அறிவியல் ஆய்வுநெறிகளுக்கு இயைய, அமைந்து விளங்குவது. சிவஞான போதத்தின் இரண்டாஞ் சூத்திரப் பேருரையின்கண், விரிவாக விளக்கப்படும் கருத்துக்கள் அனைத்தும், இந்நாளைய அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் போற்றத் தக்கனவாகத் திகழ்கின்றன. நிலமுதல் நாதம் ஈருகிய 36 தத்துவங்களைப் பற்றிய சைவசித்தாந்த ஆராய்ச்சிக் கருத்துக்கள், வெறும் உன்னனங்கள் அல்லாமல், காரணகாரியத் தொடர்புடன் அறிவியல் நெறிக்கு ஏற்ப அமைந்துள்ளன (3) என்று, அறிஞர்கள் வியந்து புகழ்துள்ளனர்.

1. உள்ளது அழியாது, இல்லது தோன்ருது.
2. செய்வோனை இன்றிச் செய்வினை இல்லை.
3. சடத்தில் சித்தும், சித்திற் சடமும் தோன்ரு;
4. செய்பொருள் வேறு, செயப்படு பொருள்வேறு; இரண்டும் ஒன்ருகமாட்டா.
5. சூனியத்திலிருந்து ஒன்றும் தோன்ற இயலாது.
6. சுட்டியுணரப் பெறும் பொருள்கள் அனைத்தும் அழியும்.
7. நித்தப்பொருள் சுட்டியுணரப்படாது.
8. சடப்பொருள்கள் உருவம் மாறும் தன்மையன.
9. உருமாறுதலால் ஒருபொருளும் அழிவதில்லை.
10. நுண்வடிவில் உள்ளதாய், பருவடிவில் இல்லாத ஒன்றே தோன்றும்.
11. காரணப் பொருளின் தன்மையே காரியத்தில் உளதாகும்.
12. தனிப்பொருள் கூட்டுப் பொருள் ஆகாது.
13. பொருள்களின் ஆற்றல் அழிவதில்லை.
14. உற்பத்தியாதற்கு முன்னும் காரியம் உள்ளது.
15. மாறுபட்ட இரண்டு தன்மை ஒருபொருட்கு இயற்கையன்று.
16. அவயவப்பகுப்புடைமை காரியப் பாட்டிற்கு ஏதுவாகும்.
17. அருவமும் உருவமும் தம்முள் மாறுகோள் அன்று.
18. பலவாய் ஏகதேசமாய் அநித்தமாய் உள்ளது காலம்.
19. தூலமாம் உருவினுக்குச் சூக்குமம் முதல்
20. சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப். படுவன எல்லாம் தோன்றிநின்று அழியும்.
21. ஒலிக்கும் ஒளிக்கும் உருவம் உண்டு.
22. இயற்கைத் தன்மை என்றும் மாருது.
23. இயற்கையின் விதிகள் எங்கும் என்றும் ஒரே வகையாக இயங்கும்.
24. பருப்பொருளாக இருப்பன நுண்பொருளாக மாறும்.
25. பருப்பொருளிலும் நுண்பொருளுக்கு ஆற்றல் மிகுதி,
26. எண்ணங்களுக்கு ஆற்றலும் பயனும் உண்டு.
27. எண்ணங்களுக்கு ஏற்பப் பயன் நிகழும்.
28. இடம் எல்லையற்றது.
29. காலம் முடிவில்லாதது.
30. மனம் என்பது ஒரு சடப்பொருளே.
31, ஒருபொருளின் தோற்றத்திற்கு முதல்– துணை-நிமித்தம் என மூன்று காரணங்கள் உண்டு.
32. உள்பொருள் காணப்படவேண்டும் என்ற நியதி இல்லை.
33. காணப்படாத அருவப் பொருளுக்கும் உருவம் உண்டு.

என்பன போன்ற, எத்தனையோ பல அறிவியல் உண்மைகளைச் சைவசித்தாந்தம் தகவுற விளக்கிச் செல்கின்றது. சைவசித்தாந்தம் கூறும் ''சார்ந்ததன் வண்ணமாம் தன்மை'' பற்றிப் பேராசிரியர் என்றி டிரம்மாண்டு (Prof Henry Drummond) ''ஆன்மிக உலகில் இயற்கையின் சட்டம்'' (Natural Law in the Spiritual World) என்னும் தம்முடைய நூலில் விளக்கியுள்ளார்.

---

(3) ''The unique position of Saiva Siddhanta in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic account of the process of cosmic evolution which attempts to comprehend the universe as a sum total of 36 categories. This exposition is no mere metaphysical speculation but is a **purely logical account on scientific principles''**

**—Theos-Bernard**

''ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐயனே யென்றுன் அருள்வழி இருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாதனே உனைப் பிரிவுரு அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காயமா யத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர் பிரானே
திருப்பெருந்துறை மேவிய சிவனே.''

எனத் திருவாசகத்தில் மணிவாசகர்பாடுவதற்கேற்ப, மக்களில் தலைவர்கள்போலத் தேவர்களிலும் தலைவர்கள் உள்ளனர் என்றும், அவர்கள் இறையருள் ஆற்றலால் உலகங்களை முத்தொழிற்படுத்துவர் என்றும், சர் ஆலிவர் லாட்ஜ் என்னும் பேரறிஞர், ''மனிதனும் பேருலகமும்'' (Man and the Universe) என்னும் நூலில் விளக்குகின்றார்.

''எருவிடும் வாசற் கிருவிரல் மேலே
கருவிடும் வாசற் கிருவிரல் கீழே
உருவிடும் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடும் சோதி கலந்துநின் றனே''

என்று, சைவ சித்தாந்தப் பெருஞ்சான்றோராகிய திருமூலர் முதலிய அருளாளர்கள் கூறுவது போலவே, வில்லியம்ஜேம்ஸ் என்னும் அமெரிக்க நாட்டுத் தத்துவ உளநூற் பேறிஞர், கதிரொளி முடிச்சு (Solar Plexus) என்னும் மூல அடி முனையை இயக்கிப் பயன்படுத்தும் முறைபற்றி விவரிக்கின்றார். எட்மண்ட் கர்னி, மயர்ஸ், பாட்மோர், எட்வர்ட் கேயர்ட் முதலிய அறிவியற் பேரறிஞர்கள், பாவனையின் பயன்களையும், உருவ வழிபாட்டின் இன்றியமையாமையையும் பெரிதும் வலியுறுத்தி உள்ளனர். சார்லஸ் ஜான்ஸ்டன், தியோஃபைல் பாஸ்கல் முதலிய எத்தனையோ பல அறிவியலறிஞர்கள், முற்பிறவி பிற்பிறவிகள் உண்டு என்பதனைக் கண்டறிந்து மெய்ப்பிக்கின்றனர். நடராச வடிவத்தின் நலனை வியந்து, இந்நாளில் எல்லா நாட்டினரும் புகழ்ந்து போற்றுகின்றனர். இங்ஙனமே பெண்கூறும் ஆண்கூறுமாக ஒருசேரப் பிரிவின்றி இயைந்து நிற்கும் அம்மையப்பர் (அர்த்தநாரீசுவரர்) பற்றிய தத்துவ நுட்பம், அனைவராலும் ஏற்றுப் போற்றப்படுகின்றது. நமதுசோமாஸ்கந்தவடிவம், தந்தை—மைந்தன்—தூயஆவி என்னும் கிறித்துவசமயத் திரித்துவக் கொள்கைக்கு (Trinity) ஏற்றதாகத் திகழ்கின்றது. ஆலமர் செல்வர் ஆகிய தட்சிணாமூர்த்தியின் திருவுருவம், பிரம்மஞான சபையினரால் (Theosophists) ஏற்றுத் தழுவிக் கொள்ளப்பட்டுள்ளது. இன்னோரன்ன செய்திகள் பலவும், நம்முடைய சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, அறிவியல் நெறியோடு முரண்படாமல், இணைந்து பிணைந்து செல்லும் இயல்பினைத் தெளிவுறுத்துவனவாகும். (4)

(4) நம்முடைய தமிழ்நெறி விளக்கமாகிய சைவசித்தாந்தக் கொள்கையானது, குறுகிய நோக்கும் போக்கும் கொண்டதாகாமல், விரிந்து பரந்த பெரு நோக்குடையதாய், உலகளாவிய (Universal Religion) சமயமாகும். ''ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே'' எனத் திருஞானசம்பந்தரும், ''ஆதி பகவன் முதற்றே உலகு'' எனத் திருவள்ளுவரும், ''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு'' என நக்கீரரும், ''உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்'' ''மன்றுளார் அடியார் அவர் வான் புகழ் நின்றதெங்கும் நிலவி உலகெலாம்'' எனச் சேக்கிழார் பெருமானும், பிறரும் அருளிச் செய்திருத்தல், அவர்தம் விரிந்து பரந்த உலகப் பெருநோக்கினை வெளிப்படுத்தும். சைவசித்தாந்த சமயமானது, எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து ஒதுக்காமல், எத்தகைய பிணக்கும் இன்றி, எல்லாச் சமயங்களையும் ஏற்றபெற்றி தழுவிப் போற்றிக் கொள்ளும் மாட்சிமை மிக்கதாகும்.

''ஓது சமயங்கள், பொருள் உணரும்
நூல்கள், ஒன்றோடொன்று ஒவ்வாமல்
உள பலவும்; இவற்றுள் யாது சமயம்?
பொருள்நூல் யாது? இங்கு என்னில், இது
ஆகும் அது அல்லது எனும் பிணக்கது
இன்றி, நீதியினல் இவையெல்லாம் காண
நின்றது யாது ஒரு சமயம்? அது சமயம்.
பொருள் நூல்; ஆதலின் இவையெல்லாம்
அருமறை ஆகமத்தே அடங்கியிடும்;
அவையிரண்டும் அரன் அடிக்கீழ்
அடங்கும்''

---

(4) ''The recent developments of western philosophy and physical science go every inch to prove the truth and value of all the fundamental doctrines that are peculiar only to the Saiva Siddhanta and not to any other religion or philosophy, ancient or modern.''

—Maraimalai Adigal.

எனவரும் சிவஞானசித்தியார் (8:13) செய்யுளால், இவ்வுண்மை செவ்விதில் தெளியப்படும். சைவசித்தாந்த சமயமானது, எந்தச் சமயத்தினையும் இகழாமல், ஏற்றபெற்றி சோபான முறையில் தழுவிப் போற்றி நிற்கும் தன்மையினை, ''முத்தியை முற்றவைத்தார் முறைமுறை நெறிகள் வைத்தார்'' எனவரும் திருநாவுக்கரசர் திருமொழியாலும் உணரலாம். மற்றும் நம் சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்'' என்று அருளிச் செய்ததும்; அதன் நுண்பொருட் கருத்தினை ஆசிரியர் சேக்கிழார் பெருமான், ''மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டிற்கு அப்பால், முதல்வனுர் அடிச்சார்ந்த முறைமை யோரும், நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும் நற்றெண்டர் காலத்து முன்னும் பின்னும், சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந்தோரும், செப்பிய அப்பாலும் அடிச்சார்ந்தார் தாமே'' என விளக்கியிருப்பதும் இங்கு நாம் கருதியுணர்ந்து இன்புறற்பாலனவாகும்.

ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே
—திருமூலர்

''வேறுபடு சமயமெலாம்
புகுந்து பார்க்கின்
விளங்கு பரம் பொருளே! நின்
விளையாட் டல்லால்,
மாறுபடும் கருத்தில்லை;
முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல்,
வயங்கிற்று அம்மா!''
—தாயுமானவர்

(5) உலகிற் பல தத்துவக் கொள்கைகள் மக்கட் சமுதாய வாழ்வின் நடைமுறைக்கு ஏற்ப அமையாமல் இருப்பதுண்டு. சமயங்கள் பெரும்பாலும் இம்மை வாழ்வியலைத் தழுவாமல், மறுமைப் பயனியலையே எதிர்நோக்கி மருள்நோக்கு உடையனவாக (Unwordly & other worldly, Pessimistic) அமைந்துள்ளன என்று, அறிஞர்கள் பலர் குறை கூறுவதுண்டு. சைவசித்தாந்தம் அத்தகைய குறையுடையது அன்று. ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம், வைகலும் எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை'' எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரம், இங்கு நாம் எண்ணி எண்ணி மகிழ்ந்து பெருமிதம் கொள்ளுவதற்குரிய சிறப்புடையதாகும். சைவசித்தாந்தம் எனும் நமது தமிழ்நாட்டுத் தமிழ்நெறிப் பண்பாட்டுக் கொள்கையானது, இம்மை வாழ்க்கை நெறிக்குப் பெரிதும் இயைந்து நிற்பதொன்றேயாகும். நமது முன்னைத் தமிழ்ப் பெருஞ் சான்றோர்களின் பண்பாட்டு வாழ்க்கை நெறியே, சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையாக முகிழ்த்து அரும்பி மலர்ந்து மணம் கமழ்ந்து விளங்குகின்றது.

சைவசித்தாந்தப் பெருஞ்சான்றோராகிய அருள்நந்திசிவம், சமய தத்துவக் கொள்கைகள் மக்களின் நடைமுறை வாழ்வில் பிரிவற ஒன்றிச் செயற்படுத்தப் பெறுதல் வேண்டும் என்னும் கோட்பாடு உடையவர். சமயம் வேறு, வாழ்க்கை வேறு என்று இல்லாமல், ''சமயமே வாழ்க்கை, வாழ்க்கையே சமயம்'' என்னும் நிலையில் அமைதல் வேண்டும் என்பது, அவர்தம் அருள் உள்ளம். ஆதலின் சமயவாழ்வில் தலைப்பட விரும்பும் தக்கோர் அனைவரும், பின்வரும் பதினுறு இயல்புகளை இயல்பாக உடையவராதல் வேண்டும் எனக் குறிப்பிட்டருளுகின்ருர்.

1. உயர்ந்தாரோடு பொருந்த நடத்தல்
2. யாவரிடத்தும் அன்பாகப் பழகுதல்.
3. எளியாரிடத்தும் சிற்றுயிர்கள் மாட்டும் இரக்கம் கொள்ளுதல்.
5. யாவர் இடத்தும் இன்முகம் காட்டி இன்சொற் கூறி நலம் புரியும் தன்மை.
6. எல்லோரையும் அன்பினுல் இனிய தொடர்புடையவர்களாகச் செய்து கொள்ளும் பண்பு.
7. நல்ல பண்புகள் பலவும் கொண்டு விளங்குதல்.
8. ஐம்பொறியடக்கல், நல்லன கடைப் பிடித்தொழுகுதல்
9. தக்கோர்க்குத் தக்கபடி இயன்றன கொடுத்து உதவி புரியும் இயல்பு.
10. அறிவும் அகவையும் அநுபவமும் முதலியவற்ருல் மூத்தவர்களிடம் பணிவுதோன்ற ஒழுகுதல்.
11. எவர்மாட்டும் செருக்கின்றி நயமாகக் கலந்து இனிது அளவளாவுதல்.
12. பிறன் மனைவிழையாமை, பிறன் பொருள் வெஃகாமை முதலிய நற் பண்புகளைப் பெற்றுத் திகழும் பற்றற்ற உணர்வு.

13. உண்மை கடைப்பிடித்து வாழ்தல்.
14. மறந்தும் தீநெறிப்படராது அற நெறியே போற்றி அடங்கி வாழ்தல்.
15. தக்கது இது தகாதது இது, என்று பகுத்தறிந்து வாழவல்ல திறமுடைமை.
16. சான்றோர்களையும், சான்றோர்களின் கொள்கைகளையும் போற்றித் தழுவி, வாழ்விற் பணியாற்றுதல்.

"ஒழுக்கம்அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனல்
இரங்குவான் பணி அறங்கள்"

—சித்தியார், 2:23.

## பிற சிறப்புகள் :

(6) சமயங்கள் முற்போக்குணர்வுக்குத் தடைசெய்வன என்றும், சீர்திருத்தச் செயல்களை எதிர்ப்பன என்றும், மக்கள் வாழ்வியலைப் பலவகைக் கட்டுப்பாடுகளால் முடக்கிவிடுவன என்றும், ஒருசிலர் குறைகூறுவது உண்டு. சைவசித்தாந்தம் அத்தகைய குறைபாடுகளை உடையதன்று.

"தொன்மையவாம் எனும் எவையும்
நன்ருகா; இன்று
தோன்றுவன எனும்எவையும் தீதாகா"

என உமாபதிசிவம், தமது சிவப்பிரகாசம் எனும் நூலில் முழங்கியிருத்தல், சைவசித்தாந்தசமயம் முற்போக்குணர்வுக்குத் தடைசெய்வதோ, சீர்திருத்தச் செயல்களை எதிர்ப்பதோ அன்று என்பதனைத் தெளிவுறுத்தும்.

"எந்நிலையில் நின்ருலும்
எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள்
மறவாமை பொருள்"

எனச் சேக்கிழார் பெருமான், பெரியபுராணத்தில் அருளிச் செய்திருத்தல் ஒன்றே, சைவ சித்தாந்தம் எத்தகைய விரிவான சிறந்த நல்ல பெருநோக்குடைய சமயம் என்பதற்குச் சான்று பகரும்:

"யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு
கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"

என்பனபோல வரும் அருளுரைகள், சைவசித்தாந்தம் எத்தகைய இனிய எளிய நன்னெறி என்பதனை நன்கினிது புலப்படுத்தும். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" "எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைசிவம் என்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு" என்பன போல வரும் திருமொழிகள் பலவும், இங்கு நாம் சிந்தித்து மகிழத்தக்கன.

## எல்லோருக்கும் ஏற்றது :

(7) "சைவசித்தாந்தம் எல்லாச் சமயங்களையும் ஏற்றபெற்றி இசைந்து ஏற்பது; எதனையும் இகழ்ந்து ஒதுக்காமல், இனிது அணைத்துத் தன்னுட் பொதிந்து கொள்வது; உலகம் முழுவதற்கும் ஏற்புடைய மனிதகுலச் சமயமாகத் திகழ்வது; வேறு பிற எந்தச் சமயத்தின் வளர்ச்சியையும் அஃது எதிர்க்கக் கருதுவதில்லை. ஏனெனில் பிற எல்லாச் சமயங்களையும் தன்னோடு அணைத்துத் தழுவிப் போற்றிக் கொள்வதில், அதற்கு இடர்ப்பாடு ஏதுமில்லை. ஒவ்வொருவருடைய உள்ளத்திற்கும் நிறைவு அளிக்கத்தக்க வகையில், அது சால்புமிக்கு விளங்குகின்றது. பல்வேறு மனித இயல்பிற்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்புடையதாகச் சைவசித்தாந்தம் தன்னை ஆக்கக் கொள்ளவல்லதாக உள்ளது. நுண்பொருள் தத்துவ அறிஞர்களுக்குரிய ஆன்மிக அருவக் கூறும், கவிதையுணர்வும் கற்பனைத்திறனும் மிக்கவர்களுக்குரிய நடைமுறைப் பருவடிவக் கூறும், அமைதியை நாடும் தனிமை விரும்பிகளுக்குரிய சாந்திநலம் மிக்க சிந்தனைக்கூறும், ஒருசேர வாய்ந்ததாகத் தலை சிறந்து விளங்குகின்றது" எனப் பொது வகையில் இந்துமதம் பற்றிச் சர்மானியர் வில்லியம்ஸ் என்னும் பேரறிஞர் கூறுவது, நம்முடைய சைவசித்தாந்தத்திற்கும் சாலப் பொருந்தும் எனலாம். (5)

---

(5) "A characteristic of Saiva Siddhanta is its receptivity and all-comprehensiveness. It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religions within its all-embracing arms and ever-widening fold.

And in real truth, Saiva Siddhanta has something to offer which is suited to all minds. Its very strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies. It has highly spiritual and abstract side suited to the metaphysical philosophy, 'its practical and concrete side suited to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seclusion."

—Sir Monier Williams.

முடிவுரை :

இத்தகைய பல பெருஞ் சிறப்புக்களை யுடைய நம்முடைய சைவசித்தாந்தத்தத்துவக் கொள்கையானது, ஆயுந்தொறும் அறிஞர் களுக்கு ஆராப் பெருவிருந்தாக அமைந்து விளங்குகின்றது. ''ஆர் அறிவார் இந்த அகல மும் நீளமும்'' எனத் திருமூலர் பாடுவதுபோல, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியின் அகலமும் நீளமும் ஆழமும் ஆய்ந்து இன்புற விழைவோர் அனைவரும், சைவத்திருமுறைகளையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும் புறக்கணித்து ஒதுக்காமல், விரும்பிக் கற்று மகிழும் கடப்பாடு உடைய வராவர். இம்மை வாழ்வில் இதனின் மிக்க இன்பப்பேறு பிறிதொன்றில்லை எனத் துணிந்து கூறலாம். ஜான்மில்ட்டன் என்னும் ஆங்கிலப் பெருங்கவிஞர் பாடுவது போல,

''எத்தகை இன்ப ஊற்றுய்
இறையருள் நூல்கள் உள்ள!
அத்தகை யவற்றை அந்தோ,
அறிவிலார் கடினம் என்பர்!
வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல் இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா
விருந்தென மிளிரும் நன்றே'' (6)

என்று நாமும் நமது சைவசித்தாந்தம் பற்றிப் பாடி மகிழலாம். கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானியாகிய தேல்சு என்பார், தாம் ஒரு விலங் காக அல்லாமல் மனிதனாகவும், பெண்ணாக அல்லாமல் ஆணாகவும், கானகனாக அல்லாமல் கிரேக்கனாகவும் பிறந்ததற்குப் பெருமிதம் கொண்டு மகிழ்கின்றார். அதுபோல, நாமும் ''நரர்பயில் தேயம் தன்னில் நான்மறை பயிலா நாட்டில் விரவுதல் ஒழிந்து'' தமிழராகவும், சைவராகவும், சைவசித்தாந்தச் செந்நெறி யாளராகவும் பிறக்கப் பெற்றமை குறித்துப் பெருமிதம் கொண்டு மகிழலாம்.

''மனிதனாய், ஆணாய்க், கிரேக்கனாய்ப்
பிறந்த
மாட்சிமைக்கு, அறிஞர்தாம் ஒருவர்
நனிமிக மகிழ்ந்தார்; நலம்மிகு தமிழன்,
நற்சைவன், சைவசித் தாந்தி
என இவண் பிறந்த இனியநற் பேற்றை
எண்ணிநாம் இறையருள் வழுத்தித்
துனியறு சைவச் செந்தமிழ் வளர்க்கும்
தொண்டுகள் புரிந்துநன் றுய்வாம்''(7)

சிவத்திரு. மறைமலையடிகள், அருட்டிரு. ஞானி யாரடிகள், திரு ஜே. எம். நல்லசாமிபிள்ளை, அட்டாவதானம் கலியாண சுந்தர யதீந்திரர், திரு. வி. கலியாணசுந்தரனார், பேராசிரியர் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, நாவலர். திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், சைவப்பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. மயிலைகிழார் இளமுருகனார், பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார், கோவைகிழார் திரு. சி. எம். இராமச்சந்திரன்செட்டியார், செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் திரு. த. வே உமாமகேசு வரம் பிள்ளை முதலிய எத்தனையோ பற்பல தமிழ்ப் பெருஞ்சான்றோர்களால், செவ்விதிற் போற்றி வளர்க்கப் பெற்ற நம் சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாசம், இன்னும் பல்லாண்டு கள் நீடினிது வளர்ந்து நிலைபெற்றுச், சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கச் சிறப்புறத் தொண்டாற்றி வருமாறு, எல்லாம் வல்ல சிவ பிரான் திருவருள் துணை புரிவதாக! வாழ்க சைவம்! வளர்க சைவசித்தாந்தம்!

—ஆசிரியர்

---

''How charming is divine philosophy !
Not harsh and crabbed as dull fools suppose,
But musical as is Apollo, slute,
And a perpetual feast of nectar'd sweets
Where no crude surfeit reigns.''

—John Milton, Comus.

''The three blessings for which I am grateful to Fortune are: first that I was born a human being and not one of the brutes; second that I was born a man and not a woman; third that I was born a Greek and not a barbarian.''

—Thales, in Diogenes Laertes' Thales,

# நல்லச் சிற்றம்பலமும், தில்லைச் சிற்றம்பலமும்

"ஆராய்ச்சிப் பேரறிஞர்"
திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள்.

தில்லைச் சிற்றம்பலம் எல்லோருக்கும் தெரியும். நலலச் சிற்றம்பலம் பலருக்குத் தெரியாது. தெரிந்த சிற்றம்பலத்தையும் தெரியாத சிற்றம்பலத்தையும் முதன் முதலாக அறிமுகப் படுத்துகிறவர் ஐயடிகள் காடவர்கோன் நாயனர். ஐயடிகள் காடவர்கோன் சைவநாயன்மார் அறுபத்துமூவரில் ஒருவர். இவர் காடவர் குலத்தில், அதாவது பல்லவ அரசர் குலத்தில் பிறந்து செல்வச் சூழலில் வாழ்ந்தவர். ஐயடிகள் காடவர் கோன் பல்லவ அரசர் என்பதை நம்பியாண்டார் நம்பி தெளிவாகக் கூறுகிருர்.

"சத்தித் தடக்கைக் குமரன்
நற்ருதைதன் தானமெல்லாம்
முத்திப் பதமொரோர் வெண்பா
மொழிந்து, முடியரசாம்
அத்திற்கும் மும்மை நன்ருல், அரற்கா
ஐயமேற்ற லென்னும்
பத்திக்கடல் ஐயடிகள்
ஆகின்ற நம் பல்லவனே"

(திருத்தொண்டர் திருவந்தாதி 56)

பக்திக் கடலாகிய ஐயடிகள் காடவர்கோன் இயற்றிய க்ஷேத்திரத் திருவெண்பா இருபத்து நான்கு செய்யுள்களையுடையது இது, பதினேராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது. க்ஷேத்திரத் திருவெண்பாவின் முதற்செய்யுளில் நல்லச் சிற்றம்பலமும் தில்லைச்சிற்றம்பலமும் கூறப்படுகின்றன.

'ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்ருரும்
கோடுகின்ருர், மூப்பும் குறுகிற்று—
நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணுமுன்
நன்னெஞ்சே
தில்லைச் சிற்றம்பலமே சேர்."

ஐயடிகள் காடவர்கோன், தன் நெஞ்சை விளித்து, நல்லச் சிற்றம்பலத்தைச் சேராமல் தில்லைச் சிற்றம்பலத்தைச் சேர்வாயாக என்று கூறுகிருர். நல்லச் சிற்றம்பலம் என்ருல் என்ன? நல்ல + சிறு + அம்பலம் = நல்லச் சிற்றம்பலம். அம்பலம் = பொது இடம். சிறு அம்பலம் = சிறிய பொது இடம். நல்லச்சிற்றம்பலம் என்ருல் நல்லதாகிய சிறிய அம்பலம் என்பது. இங்கு நல்ல எனனும் சொல், தீய, கெட்ட என்னும் பொருளில் உள்ளது. கொடிய பாம்பு நல்லபாம்பு என்று பெயர் கூறப்படுவது போல. ஆகவே நல்லச் சிற்றம்பலம் என்பது துன்பத்தைக் கொடுக்கிற சிறிய இடம் என்பது பொருள். அதாவது நரகம். நல்ல என்னும் சொல்லுக்குக் கரிய, கறுமையான என்னும் பொருளும் கூற லாம். திராவிட இன மொழிகளைச் சேர்ந்த தெலுங்கு மொழியில் நல்ல என்னும் சொல்லுக்குக் கரிய என்னும் பொருள் உண்டு. ஆகவே நல்லச் சிற்றம்பலம் என்ருல் கருமையான (இருண்ட) சிறிய அம்பலம் என்று பொருள் கூறலாம்.

தில்லைச் சிற்றம்பலம் என்பது ஒளிமயமான ஞான அம்பலம். தில்லை—தில்லைமரம் உள்ள ஊர். சித் + அம்பலம் = சிற்றம்பலம். அதாவது ஞானமாகிய அம்பலம். ஞானத்தை அறிவுக்கும் வெளிச்சத்துக்கும் உவமை கூறுவர்.

இருளானதும், பிறப்பு இறப்பாகிய துன்பத்தைக் கொடுப்பதுமாகிய நல்லச் சிற்றம்பலத்தையடையாமல், பிறப்பு இறப்பு என்னும் துன்பத்தைப் போக்கிப் பிறவா இறவா நிலையாகிய அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டைத்தருவதாகிய தில்லைச்சிற்றம்பலத்தைச் சேர்க என்பது இதன் கருத்து.

**கருவரங்கமும் திருவரங்கமும் :**

வைண சமயத்திலும் இதே கருத்து கூறப் படுகிறது. பொய்கையாழ்வார் தம்முடைய முதல் திருவந்தாதியில், ஐயடிகள் காடவர் கோன் கூறிய இதே கருத்தைக் கூறுகிருர். ஐயடிகள் கூறிய 'நல்லச்சிற்றம்பலம் தில்லைச் சிற்றம்பலம்' என்னும் சொற்றொடருக்குமாருகப் பொய்கையாழ்வார் 'கருவரங்கம், திருவரங்கம்' என்று கூறுகிருர். ஆழ்வார் கூறும் செய்யுள் இது.

''ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர்
வண்ணனை நான்
இன்று மறப்பனே ஏழைகாள் — அன்று
கருவரங்கத்துள் கிடந்து கைதொழுதேன்
கண்டேன்
திருவரங்கம் மேயான் திசை.
(முதல் திருவந்தாதி—6)


அரங்கம் என்பதும் அம்பலம் என்பதும் ஒன்றே. திருவரங்கமும் திருச்சிற்றம்பலமும் ஒன்றே. ஒளிமயமான இடம் என்பது பொருள். திருச்சிற்றம்வபலத்துச் சிவபெருமானும், திரு வரங்கத்து நாராயணரும் இருவரும் ஒருவரே. அதாவது, முழுமுதற் கடவுள் என்பது. நாயனர் கூறுகிற நல்லச்சிற்றம்பலமும், ஆழ்வார் கூறுகிற கருவரங்கமும் ஒரே கருத்தை விளக்குகின்றன. இந்த முறையில் இருவருடைய செய்யுட்களும், பொருள் அறிவதற்கு ஒன்றுக்கொன்று உதவி யாக இருக்கின்றன. ஆழ்வார் கூறுகிற கரு வரங்கமும் திருவரங்கமும், நாயனர் கூறுகிற நல்லச் சிற்றம்பலமும் தில்லைச் சிற்றம்பலமும் ஒரே பொருள்உள்ளவை. நாராயணனும் சிவபெருமானும் ஒருவரே.

பொன் திகழும் மேனிப் புரிசடையம்
புண்ணியனும்
நின்று உலகம்தாய நெடுமாலும்—என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேனும், ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன்.

---

* ("நல் + அச்சு + இற்று + அம்பலமே நண்ணுமுன்'' எனச் சொற்களைப் பிரித்து, "நல்ல அச்சு ஆகிய உடம்பு அழிந்து, சுடுகாடு அல்லது மயானம் எனப்படும் அம்பலத்தை நாம் அடைய நேர்வதற்கு முன்னரே; அஃதாவது நாம் இறந்து படுவதற்கு முன்னரே'' என்றும் பொருள் கொள்ளலாம். அச்சு—உடல். அம்பலம்—சுடுகாடு.)

—ஆசிரியர்



திருவரங்கம் அரங்கநாதசுவாமிகோயிலில் நடைபெற்ற பாவை விழாவில், திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், B.A., B.L., திரு. கே. இராசவேலு, M.A., B.L., துணையாணையர் திரு. எஸ். சூரியராஜ், B.A.,B.L., ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

# "உயர்வற உயர்நலம் உடையவன்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

## முன்னுரை:

நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியானது, அடியார்களுக்கு அமிழ்தமாய்த் திகழ்வது. தமிழ்வேதம் என்னும் பெருமை சான்றது. கடல் போன்று விரிந்து பரந்து, சிறந்த பொருள்நலங்கள் செறிந்தது. தொட்டனைத் தூறும் மணற்கேணி போலச் சிந்திக்குந்தொறும் சிறந்த பல கருத்துக்களைச் சுரந்து தருவது. திருவாய்மொழியின் சிறப்பிற்கு, அதன் தொடக்கப்பாடலே அரும் பெருஞ் சான்முக அமைந்து திகழ்கின்றது. ஆதலின் அதுபற்றி இங்கு ஒரு சிறிது இயன்ற வரை ஆராய்வோம்:

''உயர்வற உயர்நலம்
உடையவன் யவன் அவன்
மயர்வற மதிநலம்
அருளினன் யவன் அவன்
அயர்வறும் அமரர்கள்
அதிபதி யவன் அவன்
துயர் அறு சுடர்அடி
தொழுதெழென் மனனே''

''என்னுடைய மனமே! தன்னைக் காட்டிலும் உயர்ந்ததொன்று இல்லையாம்படி, மிகவும் உயர்ந்துகொண்டே செல்கின்ற நற்பண்புகளையுடையவன் யாவனோ, அவன் என்னிடத்தில் உள்ள அறிவின்மைகள் யாவும் நீங்க, ஞானத்தையும் பக்தியையும் எனக்குக் கொடுத்தருளினன். அங்ஙனம் கொடுத்தருளியவன் யாவனோ, அவன் மறதி என்பது சிறிதும் இல்லாத நித்திய சூரிகளுக்குத் தலைவன். அத்தகைய தலைவன் யாவனோ, அவனுடைய, துன்பங்களை யெல்லாம் நீக்குகின்ற. ஒளிபொருந்திய திருவடிகளை வணங்கிப் பிறவிப் பெருங் கடலின்று மேலே எழுந்து உய்வாயாக!'' என்பது, இதன் திரண்ட சாரமான பொருள் ஆகும்.

(1) உயர்வுஅற உயர்நலம்: தன்னினும் உயர்ந்தது ஒன்றுமில்லை என்னும்படி உயர்ந்து கொண்டே செல்லும் நற்பண்புகள்; உயர்ந்தவை என்று மதிக்கப்பெற்றிருக்கும் மற்றைப் பொருள்களின் உயர்வு, சூரியனின் முன்னே மின்மினி போலவும், மகாமேரு மலையின்முன் ஒரு சிறிய கடுகு போலவும், தன்முன்னே உண்மையன்று என்னும்படியும், தன்னுடைய தொன்றே உயர்ந்ததாய் நிலைபேறுடையதாகும் படியும் உயர்ந்துள்ள நற்பண்புகள்; ஏனையோரெல்லாம் வருந்தி முயன்று அடையவேண்டியுள்ள உயர்வுபோல அன்றி, இயல்பாகவே தன்கண் அமைந்துள்ள மிக உயர்ந்த பண்பு நலங்கள்.

(2) இறைவனுக்கு அடிமைப்படுதல் இரு வகைப்படும். ஒன்று இறைவனின் குண நலங்களுக்கு வியந்து அடிமைப்படுதல். மற்றொன்று இயல்பாகவே என்றும் அடிமைப் பட்டிருத்தல். முன்னையதினும் பின்னையதே சிறப்புடையது. ஆழ்வார் இறைவன்பால் இயல்பாகவே அடிமைப்பட்டிருப்பவராயினும், தம்மை இறைவன்தன் திருக்குணங்களினாலேயே பெரிதும் கவர்ந்து ஆட்கொண்டருளினன் ஆதலால், அக்குணங்களின் சிறப்பினையே இங்கு முதற்கண் வியந்து பேசுகின்றார்.

(3) ''எம்பெருமானுக்குக் குணமில்லை வீபூதியில்லை என்று கூறுகின்ற சிற்றறிவினர்களின் கழுத்தைப் பிடிப்பதுபோல, ஆழ்வார் தம்முடைய திருவாய் மொழியின் தொடக்கத்திலேயே 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்று அருளிச் செய்திருக்கும் அழகு என்னே! என்னே!'' என்று கூரத்தாழ்வார் இவ்வடியினைப் பலகாற் கூறி வியந்து மகிழ்ந்து உருகிப் போவாராம்!

(4) 'உயர்வற உயர் குணம்' என்னுமல் 'நலம்' என்றது, இறைவனின் திருக்குணங்கள் எல்லாமே பெருநுகர்ச்சி பயப்பது; நன்மையே உருவெடுத்து நிற்பது என்பது உணர்த்தும்,

(5) மயர்வு: அஞ்ஞானம், அறியாமை. அடியோடே சிறிதும் அறிவில்லாமை, ஒன்றை வேறென்ருக அறிதல், இதுவோ அதுவோ என்று மயங்கிஅறிதல், அறிந்ததனை மறந்தொழிதல் என்பன பலவும் அஞ்ஞானம் எனப்படும். இனி, உடலையே உயிராக நினைத்தல் (தேகாத்ம ஞானம்), பிற தெய்வங்களுக்குத் தன்னை அடிமையாக நினைத்தல் (அந்யதாஞானம்), தனக்குத் தானே யுரியவனுகவும், ஆத்மாவோடு அநுபவிக்கின்ற இன்பமே இன்பமாகவும் கொள்ளுதல் (விபரீதஞானம்) என்பனவும், அஞ்ஞானம் எனப்படும்.

(6) மதிநலம்: மதியும் நலமும் என உம்மைத்தொகை. மதி-ஞானம். நலம்-பக்தி. இனி இதனை "நலம் மதி" எனக்கொண்டு, நல்ல ஞானம் எனவும் பொருள் கொள்ளுவர். அதாவது துளசிச்செடி முளைக்கும்போதே நறுமணத்துடன் முளைக்குமாறு போலவும், கருங்காலி முதலிய மரங்கள் முளைக்கும்போதே வயிரம் பற்றி முளைக்குமாறு போலவும், பக்தியின் உருவத்தை அடைந்த ஞானம்! இவ்வாறு கூரத்தாழ்வான் திருக்குமாரர் ஆகிய பட்டர் அருளிச் செய்வார்.

(7) அருளினன்: ஒரு காரணமும் இன்றி, என்னுடைய தகுதியின்மை நோக்கித் தவிராமல், இத்தலையில் நினைவு இல்லாமல் இருக்கவும், தானே தன் தலையளியால் எளிவந்து அருளினன்.

(8) இறைவன் திருவருள் புரிவதற்கு முன்னர், ஆழ்வார் தம்மை இல்லாத பொருளுக்குச் சமமாகவே கருதியிருந்தவராகலின், 'எனக்கு அருளினன்' என்று கூருமல், பொதுவாக 'அருளினன்' என்ற அளவே குறிப்பிட்டார்.

(9) இனி, இறைவனின் அருளியல்பினைத் தாம் அறிந்து கொள்ளவோ, அதனைப் பெறுவதற்கு விரும்பவோ, சிறிதும் முற்படாமல் இருந்தும்கூட, மார்பின் கடுப்பாலே பாலைத் தரையிற் பீச்சிவிடுவாரைப்போல, இறைவன் தானுகவே வலிந்து வந்து தம்பால் அருள் செய்து கொண்டு நின்ருன் ஆதலின், 'அருளினன்' என்ருர் எனினும் ஆம்.

(10) அயர்வு: மறதி. 'அயர்வு அறும் அமரர்கள்' இருவகையினர், எப்போதும் மறதியின்றிக்கே இருப்பவர்கள் (நித்தியர்கள்). மறதியிலிருந்து பின்பு நீங்கினவர்கள் (முக்தர்கள்).

(11) அமரர்கள்: இச்சொல் 'மரணம் இல்லாதவர்கள்' என்னும் இயல்பான பொதுப் பொருளில் வரவில்லை. பகவானுடைய அருளனுபவம் தடைப்படுமேயானுல், அப்பொழுது தங்களை உள்ளவர்களாகக் கருதாதவர்கள் என்பது குறிக்க வந்தது.

(12) 'அமரர்' என்னும் சொல்லே பன்மையை யுணர்த்தப்போதுமாயினும் 'அமரர்கள்' என விகுதிமேல் விகுதியிட்டுக் கூறியது, அவர்களின் அளவற்ற பெருமைகளையும் நம்மனேர்க்கு நினைவூட்டி யுணர்த்துதற் பொருட்டு.

(13) அதிபதி: என்றது, இத்தகைய சிறந்த அமரர்க்கும்கூட, யானைக்குக் குதிரை வைத்தாற்போலப், பிடிகொடுக்குமாறு போன்று காட்டிப் பிடிகொடாமலே அப்பாற்பட்டு நிற்பவன் எம்பெருமான் என்பதனை யுணர்த்துவதற்கு.

(14) துயர் அறு சுடர் அடி: எல்லா உயிர்களின் எல்லாத் துன்பங்களையும் போக்குதலையே என்றும் தமக்கு இயல்பாகவுடைய திருவடிகள் என்னும் கருத்தில் இத்தொடர்க்குத் 'துயர் அறுக்கும் சுடர் அடி' என இராமாநுசர்க்கு முன்பிருந்த முதலிகள், பொருள் கொண்டு வந்தனர்,

(15) ஆனுல், எம்பெருமானுர் ஆகிய இராமாநுசர், அடியார்கள் துயர் தீரவே, பகவான் தான் துயர்தீர்ந்தவனுகின்ருன், எம்பெருமான் 'பரதுக்க துக்கியாதலால், அவன் பிறர்படும் துயர்கள் கண்டு, தான் துயர்படுபவன் ஆகின்ருன், அடியார்களின் துன்ப நீக்கத்தினையே, தன்னுடைய துன்ப நீக்கமாகக் கொள்ளும் இயல்பினன் இறைவன் எனக்கூறி 'துயர் அறும் சுடர் அடி' எனப் பொருள் விளக்குவராம்.

(16) சுடர் அடி: அன்பர்கள் இறைவனிடத்தில் விரும்புவது திருவடிகளை. பால் உண்ணும் குழந்தைகள் தம்முடைய தாயின் மார்பிலே வாயை வைக்குமாறு போன்று, இவரும் "தேனே மலரும் திருப்பாதம்" என்று போற்றப்படும் திருவடிகளிலே ஈடுபடுகின்ருர்.

இறைவனைக் காட்டிலும், அவனுடைய திருவடிகளே அன்பர்களுக்கு மிகவும் சிறந்தவை. "நின்னிற் சிறந்த நின் தாளிணையவை" என்பது பரிபாடல்.

(17) இப்பாடலில் 'உயர்வற உயர்நலம் உடையவன்' 'அயர்வறும் அமரர்கள் அதிபதி' என்றதனுல், அடையப்படும் இறைவனின் இயல்பு (பேற்றின் சிறப்பு) கூறப்பட்டது; 'மயர்வற' என்றதனுல், பேற்றுக்குத்தடை கழிந்தபடி கூறிற்று; 'அருளினன்' என்றதனுல் இறைவனே பேறுதருபவன் என்று சொல்லிற்று. "தொழுதெழு" என்றதனுல் பேற்றுக்குக் காரணமான தொண்டின் திறம் உணர்த்திற்று. "என்மனனே" என்றதனுல் தூய மனமுடையவனே பேற்றுக்கு உரியவன் என்று சுட்டிற்று.

(18) நான்கு வேதங்களின் சுருக்கம் திருமந்திரம்; திருமந்திரத்தின் சுருக்கம் அகர எழுத்து. அதுபோல நான்கு வேதங்களின் சுருக்கம் திருவாய்மொழி. திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களின் சுருக்கம் முதல் திருப்பதிகம்; அதனுடைய சுருக்கம் முதல் மூன்று பாசுரங்கள்; அவற்றின் சுருக்கம் முதற் பாசுரம். இம்முதற் பாசுரத்தினுடைய சுருக்கம் 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்னும் முதல்அடி. இவ்வாற்ருல் திருவாய்மொழியின் முதல் திருப்பாடல் ஆகிய இச்செய்யுளின் சிறப்பினை யாவரும் இனிதுணரலாம்.

★



குளித்தலை திரு. கடம்பவனேசுவரர் கோயிலில் நிகழ்ந்த தைப்பூச விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் நிறைகுடச் சிறப்புடன் வரவேற்கப் பெறுதல்.

# பக்தி நெறி

முன்னுரை :

மனிதன் பலவகை உணர்ச்சிகளின் நிலைக் களமாகத் திகழ்பவன். கடலில் மாறி மாறி எழும் அலைகள் எண்ணற்றனவாதல் போல, மனித மனத்தில் உருத்தெழுந்து வீசும் உணர்ச்சிகளாகிய அலைகளுக்கு ஓர் அளவே யில்லை.

"கடலின் திரையது போல்வரு
கலக்க மலம்அறுத்துஎன்
உடலும் உயிரும் புகுந்து
ஒழியா வண்ணம் நிறைந்தான்......"

என்று இறைவனைப் பாடிப் பரவுகின்றார் மணிவாசகர். இங்ஙனம் மனித மனக் கடலில் எழும் உணர்ச்சியலைகள் அளவில் அடங்காவாயினும், உளவியல் நூலார் அவற்றுள் சிலவற்றை மிகவும் முதன்மையானவையான, உந்துதல்கள் அல்லது இயல்பூக்கங்கள் (Instincts) எனச் சிறந்தெடுத்துக் குறிப்பிடுவர். உணவுதேடல், சேர்ந்து வாழ்தல், காதல்புரிதல், மகவுவளர்த்தல், தற்காத்துக்கோடல், வேண்டுவன திரட்டுதல், முதலிய எத்தனையோ பல இயல்பூக்கங்கள், பொதுவாக எல்லா உயிர்கள் மாட்டும் இயல்பாக அமைந்து விளங்குகின்றன. அவைகளுள் மனிதர்களுக்கே சிறப்பாக உரிய இயல்பூக்கங்கள் சில உண்டு. அவைகளுள் தலையாய ஒன்று, பக்தி (Religious instinct) என்பது. மனிதனை மனிதனுக்கி, வையத்து வாழ்வாங்கு வாழவைத்து, அவனை வானுறையும் தெய்வத்துள் சேர்த்து வைக்க உதவுவது பக்தியே எனலாம்.

"முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்டான்".

என மணிவாசகர் பாடுதலால், பக்தி நெறியின் சிறப்பினை யாவரும் இனிதறியலாம். பாகவத புராணம், நாரத பக்தி சூத்திரம் முதலிய நூல்கள், பக்தியினைப் பின் வருமாறு ஒன்பது வகைப்படுத்தி விளக்கிக் கூறுகின்றன. அவைகள் வருமாறு :

1. **பாதனம்** — கோயில்கள் எடுப்பித்தல், திருநந்தவனம் அமைத்தல் முதலிய திருப்பணிகள் செய்தல்.
2. **சிரவணம்** — இறைவனின் வரலாறும் பெருமையும் பற்றிக் கூறும் நூல்களைத் தக்கவர்கள் சொல்லக்கேட்டு மகிழ்தல்.
3. **கீர்த்தனம்** — இறைவனின் திருநாமங்களை உச்சரித்தல், இசையுடன் பாடல்களைப் பாடிப் பணிதல்.
4. **அர்ச்சனம்** — நீராட்டிப் பூச்சூட்டி நிவேதனம் படைத்துப் பூசித்துப் போற்றுதல்.
5. **ஸ்துதி** — இறைவனைப் புகழ்ந்து தோத்திரப் பாடல்களை இயற்றுதல் அல்லது தனித்தோ பலருடன் சேர்ந்தோ பாடுதல்.
9. **வசனம்** — இறைவனின் அருட்பெருமைகளை எடுத்துப் பலருக்கும் கூறி விளக்குதல்.
7. **வந்தனம்** — இறைவனை எட்டுறுப்பு, ஆறுறுப்பு, ஐந்துறுப்பு முதலிய வகைகளிற் பணிந்து வணங்குதல்.
8. **ஸ்மரணம்** — இறைவனை எப்பொழும் மறவாமல் இருத்தல்.
9. **தியானம்** — சுகாசனம் முதலிய நிலைகளில் அமர்ந்து, மனத்தை ஒரு முகப்படுத்தி, அன்பு செலுத்தி இறைவனை நினைந்து வழிபடுதல்.

பக்தியுணர்வு என்பது, சிறப்பாகக் கடவுளை நோக்கியே நிகழ்வதாகக் கொள்ளப்படினும், கடவுளுண்மையை மறுப்பவர்கள் மாட்டும், "உறவேல் ஒழிக்க ஒழியாது" என்று ஆண்டாள் அருளிச் செய்தவாறு போல, அஃது அழியாமல் அமைந்தே இருக்கும். ஏனெனில் கடவுளுண்மையை மறுப்பவர்களும் கூடக் கடவுளின் இயல்பாகப் போற்றப்பெறும் அன்பு அறிவு இரக்கம் நீதி தியாகம் முதலிய குணங்களையுடையவர்களாயும், போற்றுபவர்களாயும் விளங்குகின்றனர். அவர்கள் மாட்டும் நாட்டுப்பற்று — மொழிப்பற்று — குறிக்கோட்பற்று என்பன உள்ளன. அவற்றிற்காகத் தொண்டாற்றல் உயிர் அளித்தல் முதலிய சிறந்த பல பண்பும் செயலும் நிகழ்வதற்குக் காரணமாக அமைவது பக்தியுணர்ச்சியேயாகும். இப்பண்பு நலங்களை வெறுத்து மறுத்துரைக்க வல்லவர்களே, இறைமறுப்பாளர்கள் ஆவர்(1). அத்தகையோர் எவரும் இவ்வுலகில் இரார். அதுபற்றியே "மனிதன், தீர்க்க இயலாதவகையில் பக்தியுணர்ச்சி (நோய்) உள்ளவனாகவே இருக்கின்றான்" (Man is incurably religious) என அறிஞர் ஒருவர் (Prof. J. B. Pratt) குறிப்பிடுகின்றார். புத்தர் பெருமான் இறைவனைப் பற்றித் தெளிவாக ஏதும் கூறிற்றிலராயினும், மக்கள் அவரையே இறைநிலையில் வைத்துப் போற்றத் தலைப் பட்டமை, இவ்வுண்மையினையே வலியுறுத்தும் (2). எனவே மனித குலத்தினரால் அன்பு அறிவு இரக்கம் நீதி தியாகம் 'தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலும் பெற்றிமை' முதலிய உயரிய பண்புநலங்கள் போற்றப்படும் வகையில், பக்தி நெறியும் உணர்ச்சியும் இவ்வுலகில் அழியாமல் நிலைபெற்று வளர்ந்தோங்கியே வரும் எனலாம்.

— ஆசிரியர்.

---

(1) "He alone is the atheist to whom the predicates of the Divine Being, e. g., Love, Wisdom, Justice, Sacrifice are nothing."— Feuerbach, Essence of Christianity, P. 21.

(2) "The religious instinct of man requires a god, and so in the pratical religion of Buddha he himself was deified, in spite of his own caution"

—Dr. S. Radakrishnan



திருவரங்கம் அரங்கநாதசுவாமிகோவிலில் நடைபெற்ற பாவை விழா நிகழ்ச்சியில், துணையாணையர் திரு. எஸ். சூர்பராஜ் B.A., B.L., அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல். (8—1—73)

# இறைவனின் இயல்பு

"திருமால்நெறிச் செல்வர்"
**வித்துவான். திரு. கி. வேங்கடசாமி ரெட்டியார் அவர்கள்,**
**வி. பூதூர், வளவனூர்**

அறிவு, ஆற்றல்களில் நம்மினும் மேற்பட்ட பொருள் ஒன்று உண்டு ஒன்பது அறிவால் அமைந்த சான்றோர் பலரும் ஒப்பமுடிந்த உண்மை. அப்பொருளையே நம்மை இயக்குவிக்கும் ஈசன் என்பர். அவன், உயர்ந்த எல்லாக் குணங்களாலும், நிறைந்தவன்; அவனை ஒப்பவரோ மிக்கவரோ எங்கும் கிடையாது. இதனாலேயே அவனை "ஈடும்எடுப்புமில் ஈசன்" "ஒத்தார்மிக்காரை இலையாய மாமாயன்" எனப்பெரியோர் விதந்து கூறுவாராயினர்.

அவ்வீசனை "அளவுடை ஐம்புலன்கள் அறியாவகை அருவாகி நிற்கும்—வளரொளி யீசன்" என்றவாற்றால், இவ்விருள் தருமா ஞாலத்தில் புலன்வயப்பட்ட நம்மனோரின் ஊனக் கண்களால் காண இயலாது. ஆயினும் "மிக்கஞான மூர்த்தியாய வேத விளக்கினை என்—தக்கஞானக் கண்களாலே கண்டு தழுவுவனே" என்றவாற்றால், முன்னோர்கள் அவனது இன்னருளால் ஞானக்கண் கொண்டு அவ்வீசனைக் கண்டு, அவன் நிலையை ஒருவாறுணர்த்த, அதன்மூலம் "இருக்குவாய் முனிக் கணங்கள் ஏத்த யானும் ஏத்தினேன்" "இரைத்துநல்ல மேன்மக்கள் ஏத்த யானும் ஏத்தினேன்" என மயர்வற மதிநலம் அருளப் பெற்ற மாண்புமிக்க ஆழ்வார்கள் அவனை ஏத்தினமையை மேற்காட்டிய அவர்களது அருளிச் செயலே நன்கு விளக்கும். அருவாகிய அவ்வீசன் அடியார்கட்கு எளியனாகி, "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே, தமருகந்தது எப்பேர் மற்றப்பேர்—தமருகந்து, எவ்வண்ணம் சிந்தித்து இமையாது இருப்பாரே, அவ்வண்ணம் ஆழியானாம்" என்பது போல, அடியார்கள் விரும்பிய திருவுருவங்களையும் திருநாமங்களையும் தன்னதாகக் கொள்வன்.

ஆகவே, தனக்கென்று ஓர் உருவமும் ஒரு நாமமும் இல்லாத அத்தனிப்பெரு முதல்வன், "கரந்த சில் இடந்தொறும் இடந் திகழ்பொருள் தொறும் கரந்தெங்கும் பரந்துளன்" என்பது போலத் தான் இன்றி ஓரிடமும் ஒரு பொருளும் இல்லை எனுமாறு எங்கும் கலந்து நிற்பன். இது பற்றி அவ்வீசன் "விஷ்ணு" அல்லது "இறைவன்" எனப்படுவன். விஷ்ணு—எங்கும் வியாபித்துள்ளவன். இறைவன்—எங்கும் தங்கியுள்ளவன். அவ்விறைவனது முழுத்தன்மையையும், எல்லா இயல்புகளையும் நம்மனோராலும், அன்றி அறிவிற் சிறந்த பெரியோராலும் முழுதும் உணர இயலாது; இதுபற்றியே, நாம் கண்கூடாகக் கடலைக்கண்டாலும் அக்கடலின் அகலம், நீளம், ஆழம் ஆகிய இயல்புகளை முழுதும் காண இயலாத அக்கடலை ஒத்தவன் என்பது தோன்ற அவன் "கடல்வண்ணன்" எனப்படுவன். உலகைக் "காக்கும் இயல்வினன்" என்பது பற்றி, நமக்கு ஆதாரமான நீரை ஒத்தவன் என்பது தோன்ற அவன் 'நீர்வண்ணன்' எனப்படுவன். அடியார்களின் தாபம்தீர அவ்வடியர்பால் கைம்மாறுவேண்டானாய்க் கருணை புரிதல் பற்றி, கைம்மாறு நோக்காத காரை ஒத்தவன் என்பது தோன்றக் 'கார்வண்ணன்' எனவும் படுவன்.

ஒவ்வொரு குணங்களை நோக்கி, ஒவ்வொரு உவமையினை, நாம் ஏதோ போலியாக அவற்குக் கூறலாமேயன்றி, எல்லாக் குணங்களானும் நிறைந்த உவமம் ஒன்றைப் போலியாகவேனும் யாரானும் கண்டு கூற இயலாது. ஆயினும் இறைவனுக்கு மற்றும் பலவகை நிறங்கள் உள்ளனவாகப் பெரியோர்கள் குறிப்பிடுவர்.

"பாலினீர்மை செம்பொனீர்மை
பாசியின் பசும்புறம்
போலுநீர்மை பொற்புடைத் தடத்து
வண்டு விண்டுலாம்
நீலநீர்மை என்றிவை நிறைந்த
காலம் நான்குமாய்
மாலினீர்மை வையகம் மறைத்த
தென்ன நீர்மையே"

எனவரும் திருச்சந்த விருத்தப் பாடல் இங்கு நாம் நினைத்தற்குரியது.

இந்நிற வேறுபாடும் மக்களின் மனவேறுபாட்டைக் கருதியே அவரவர்களுக்குத் தக்கவாறும், அவ்வக்காலங்கட் கேற்பவும் இறைவனாற் கொள்ளப்படுகின்றது, என்பதைக் கீழ்வரும் திருநெடுந்தாண்டகச் செய்யுளால் தெளியலாம்.

"திருவடிவிற் கருநெடுமால்
சேய னென்றும்,
திரேதைக்கண் வளையுருவாய்த்
திகழ்ந்தா னென்றும்,
பெருவடிவிற் கடலமுதம்
கொண்ட காலம்
பெருமானைக் கருநீல
வண்ணன் தன்னை
ஒருவடிவத் தோர்உருவென்று
உணரலா காது
ஊழிதோ றூழிநின்
றேத்தி னல்லால்
கருவடிவிற் செங்கண்ண
வண்ணன் தன்னைக்
கட்டுரையே யாரொருவர்
காண்கிற் பாரே? "

—திருமங்கையாழ்வார்.

கிருதயுகத்தில் மக்களெல்லோரும் சத்துவ குணம் உள்ளவராகையாலே அதற்கேற்ற நிறமான பால்போன்ற வெண்ணிறத்தையும், திரேதாயுகத்தில் இராஜச குணமுள்ளவராகையாலே அதற்கேற்ற நிறமான பொன்போன்ற செந்நிறத்தையும், துவாபரயுகத்தில் இராஜசமும் தாமசமும் கலந்ததாகையாலே அவைகட்கேற்றபடி கலப்பு நிறமான பாசியின் பசும்புறம் போன்ற பச்சை நிறத்தையும், கலியுகத்தில் தன்னை விரும்புவார் ஒருவரும் இல்லாமையாலே தனது இயற்கையான கருநிறத்தையும் கொண்டிருப்பவன் இறைவன் என்பது இதனாற் போதருகின்றது. கலியுகத்தில் தம்மை விரும்புவார் ஒருவருமில்லாமையாலே தனது இயற்கையான கருநிறத்தைக் கொண்டிருப்பவன் என்பதைக் காட்டிலும், கலியுகத்தில் தாமசகுணம் உள்ளவராகையாலே அதற்கேற்ற நிறமான கருநிறத்தை இறைவன் கொள்வன் என்றலும் பொருந்தும்.

எனினும், இறைவன் தனக்கென ஒரு தன்மையும் ஒரு நிறமும் உளனல்லன் என்பதும், அடியார்கள் இட்ட வழக்காகவே அவன் உளனென்பதும், இதுவே அவ்விறைவனது இயல்பென்பதும் அருளாளர்களாற் கூறப் பெற்றுள்ளது.

"நிறம் வெளிது செய்து பசிது கரிதென்று
இறையுருவம் யாமறியோம் எண்ணில் —
நிறைவுடைய
நாமங்கை தானும் நலம்புகழ வல்லளே
பூமங்கை கேள்வன் பொலிவு."

என்ற மூன்றும் திருவந்தாதி (56) பாசுரத்தால், "இறைவனுடைய நிறங்களைப்பற்றி நாம் அறியோம்; அறிவின் மிக்காளான நாமங்கை (சரசுவதி) தன்னாலும் அந்நலம் புகழமுடியாது" என்று கூறுகின்றார் பேயாழ்வார். ஆதலின் அதைப் பற்றி நம்மன்னோர் எங்ஙனம் சிந்திக்க இயலும்? இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களது அருளிச் செயல்களைக் கொண்டு இவற்றை இங்ஙனம் ஒருவாறு உணரலாமேயன்றிப் பிற ஞானங்களால், 'இவ்விறைநிலை' உணர்வரிது என்று தெரிந்து, நாம் அவ்விறைவனின் இயல்பை நன்குணர்ந்து தெளிந்து, மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குவோமாக.

# மூவுலகளந்த சேவடி போற்றி

திரு. நா. வேணுகோபால் நாயகர், B.A., B.L.,

செயலாளர், ஸ்ரீ வைஷ்ணவ சங்கம், சென்னை

திருமால் நெறி "விசிட்டாத்துவைத மதம்'' எனப்படும். அதாவது பிரபஞ்சம், சித்து (உயிர்த்தத்துவம்), அசித்து (உயிரற்ற பொருள்கள்) ஈசுவரன் என்ற முப்பிரிவுடன் இணைந்து, இயங்குகின்றது என்பதை விளக்குகிறது. விசிட்டாத்வைத மதத்தின் இந்த அடிப்படையான கொள்கையை உலகோர் உணர்தரும் பொருட்டு, இறைவன் எடுத்தருளியது, வாமன — திரிவிக்கிரம அவதாரமாகும்:

எம்பெருமானுடைய அவதாரங்கள் பத்து என்பது கணக்கு. ஆனால் கல்கி அவதாரம் நீங்கலாக, இதுவரை இறைவன் எடுத்தருளிய அவதாரங்கள் ஒன்பதுதான், இந்த ஒன்பதில் மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, அவதாரங்களை முன்னைய நான்காகவும், பரசுராம, இராம, பலராம, கிருஷ்ண அவதாரங்களைப் பின்னைய நான்காகவும் கொண்டால், நடு நாயகமாக அமைந்துள்ளது வாமன—திரிவிக்கிரம அவதாரமே.

அசுரச்சக்கரவர்த்தியான மாவலி, வேள்வி இயற்றி எல்லோருக்கும் தானம் வழங்கினர், இதனைப் போற்றுத தேவர்கள், திருமாலிடம் சென்று முறையிட்டனர். திருமாலும் வாமன (குள்ளன்) வடிவில் சென்று மாவலியிடம் மூவடி மண்ணை வேள்வி செய்வதற்கு எனக் கேட்டுப் பெற்றார். பிறகு நெடிய உருவு கொண்டு, ஒரு அடியால் பூமியையும், மற்றைய ஓர் அடியால் ஆகாயத்தையும் அளந்து கொண்டு, மூன்றாவது அடிக்கான இடத்தைக் கேட்டார். மாவலிச் சக்கரவர்த்தி தன்னிடம் வேறு ஒன்றும் இல்லாததால், தன் சிரசைத் தாழ்த்தினர். அச்சிரசின் மீது திருமால் திருவடியை வைத்து, மாவலியைப் பாதாளம் அனுப்பினர். தேவர்கள் மிகவும் மகிழ்ந்து கொண்டாடிக் கூத்தாடினர். இவ்வாறு கதை அமைந்துள்ளது. நடுநாயகமாக அமைந்துள்ள இந்த வாமன— திரிவிக்கிரம அவதாரத்தின் உட்பொருளையும் மேன்மையையும் இங்கு ஒரு சிறிது ஆராயலாம்.

இக்கதைப்படி, மாவலி செய்த தவறு என்ன? அவன் கொடுங்கோலனா? அவன் வேள்வி இயற்றித் தானம் செய்தல்லவா விளங்கினான்: இத்தகைய நிலையில் தேவர்கள் ஏன் தலைதெறிக்கத் திருமாலிடம் ஓடிச் சென்று முறையிட வேண்டும்? அவனுக்கு எதிராக! தேவர்கள் உயர்ந்தவர்கள் ஆயிற்றே அவர்கள் மாவலிமீது ஏன் கோள் சொன்னார்கள். ஏதோ ஒரு அவசியமான, விலக்க வேண்டிய கோளாறை, அதாவது தவறை மாவலியிடம் காணத்தான் செய்தார்கள் தேவர்கள். அதை அவர்கள் தேவாதி தேவனை திருமாலிடம், தேவ ரகசியமாகவே விண்ணப்பித்தார்கள்; இவர்கள் வேண்டுகோளைத் திருச்செவி சார்த்திய இறைவனும், அக்குறையை நீக்குவதாக ஒப்புக் கொண்டான்.

கம்பநாட்டாழ்வாரும், தமது இராம காதைப் பாடலில் தேவர்கள் இரகசியமாகக் கூறிய இக்குறையைத் தாமும் வெளிப்படையாகக் கூறாமல், கம்ப சூத்திரமாகவே காட்டுகிறார்:

> ஆய(து) அறிந்தனர், வானவர்: அந்நாள்
> மாயனை வந்து வணங்கி, இரந்தார்:
> தீயவன் வெந்தொழில் தீர்: என நின்றார்:
> நாயகனும், அது செய்ய நயந்தான்:

இத்த வாக்குறுதியின்படி, இறைவனும் குறள் உருவில், மாவலியிடம் சென்று தானும் வேள்வி செய்வதாகவும், அதற்கு மூன்று அடி மண் தேவை என்று கேட்டான்: மாவலியும், இறைவனின் உட்கருத்தைத் தெரிந்து கொள்ளாமல் இசைந்துவிட்டான்;

மாவலியிடம் கேட்டுப்பெற்ற வேண்டுகோளைச் செயற்படுத்த முனைந்த இறைவன் தன் உட்கருத்துப்படிச் செயற்படலானான். அதாவது, பிரபஞ்சத்தில் என்றும் நிலைத்து உள்ளவை, அசித்து, சித்து, ஈசுவரன் என்னும் மூன்றே. அசித்து சித்து இவை இரண்டையுமே எண்ணி இருந்தவன் மாவலி. அசித்து சித்து என்பதால் ஆனதே எல்லா உலகமும் என்று மாவலி எண்ணிக்கொண்டு, அவைகளை வென்று தன் ஆட்சியில் அடக்கிவிட்டதாக நினைத்திருந்தான் அவன். இவைகளுக்குத் தானே தலைவன் என்று எண்ணிக் கொண்டு; அவைகளைத் தானமாகப் பிறருக்கெல்லாம் வழங்கலானான்: இதற்கு மாறாக, அசித்து சித்து ஈசுவரன் என்ற முப்பிரிவால் ஆனது உலகம் என்றும், அசித்து சித்து அனைத்தும் ஈசுவரனான தனக்கே அடக்கம் என்றும், மாவலிக்கு அறிவுச் சுடர் கொளுத்தத் திருவுள்ளம் பற்றினான் இறைவன்.

மாவலியும் இதை உடனே உணர்ந்து கொண்டான். தன் தவறைத் திருத்திக் கொள்ள முற்பட்டான். அசித்துச் சொரூபமான எல்லா உயிரில் உலகப் பொருள்களையும் இறைவன் திருவடியிலே மாவலி சமர்ப்பிக்க, அதை முதலாவதாகத் தன் திருவடியில் ஏற்றுக்கொண்டான் இறைவன். தன் ஆட்சியில் இருப்பதாக எண்ணிக்கொண்ட சித்து சொரூபமான சகல உயிர்த் தத்துவங்களையும், இறைவனுடையதே என ஒப்புக் கொண்டு மாவலி சமர்ப்பிக்க, அதையும் இறைவன் இரண்டாவதாகத் தன் திருவடியில் ஏற்றுக் கொண்டான்.

மூன்றாவது தத்துவமான ஈசுவரன், தன் ஆளுகையில் இல்லை என்றும், அதைத் தானமாகத் தருவதற்கு இயலாமையையும், தெரிவித்துத் தலைகுனிந்தான் மாவலி. இறைவனும் தானே ஈசுவரன் என்று தன் முழுவடிவமும் காட்டித் தன்னை வணங்கித் தலைகுனிந்த மாவலியின் தலையில். தன் திருவடியைப் பொறித்து, அவனையும் ஆட்கொண்டான். இங்ஙனம் இறைவன் திருமுன்னிலையில் தான் மிகத் தாழ்ந்தவன் என்று மாவலி உணர்ந்ததையே, எல்லாவற்றிற்கும் கீழதான (அடிப்) பாதாளம் சேர்ந்தான் எனக் கொள்ளவேணும். எப்பொழுதும் நிலைபெற்றுள்ள இத் தத்துவத் திரய (முப்பொருள்) உண்மையை உணர்ந்து போற்றிய மாவலியும், நிலைபெற்று நீடுவாழ் பவனாகத் திகழ்கின்றான் என்பது மரபு.

இவ்விதமான விசிட்டாத்துவைதக் கொள்கையை நிலை நாட்ட வந்தருளிய வாமனனைப் பரகாலரும் தம் சங்கமுகத் தமிழ்மாலையில்,

> "ஒரு குறளாய், இரு நிலம் மூவடி மண் வேண்டி,
> உலகு அனைத்தும் ஈர்அடியால் ஒடுக்கி, ஒன்றும்
> தருக என மாவலியைச் சிறையில் வைத்த
> தாடாளன் தாள் அணைவீர்"

எனப் பணிந்தருள்கிறார். மேலும் இந்த வாமன—திரிவிக்கிரம அவதார மேன்மையை உணர்ந்து மோகித்த பரகாலரான திருமங்கை மன்னன்,

> முன்னம் குறள் உருவாய்
> மூவடி மண் கொண்டளந்த
> மன்னன் சரிதைக்கே மாலாகிப்
> பொன் பயந்தேன்!

என்று நாயகி (தலைவி) பாவத்தை (உணர்ச்சியை) அடைந்து வெளியிட்டுள்ளார்.

பக்தி சாரரான திருமழிசையாழ்வாரும், திருவிக்கிரம அவதாரத்தின் செழும் பொருளை மனத்துட்கொண்டு,

> "அறிந்தறிந்து வாமனன் அடியிணை வணங்கினால்
> செறிந்து எழுந்த ஞானமொடு செல்வமும் சிறந்திடும்!

எனப்பாடுகிறார். திருப்பாவையில் போற்றிப் பாசுரம் அருளுகையில் ஆண்டாளும், இந்தத் திரிவிக்கிரம வைபவத்திற்கு முதன்மை இடம் தந்து,

"அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி!"

என மங்களாசாசனம் புரிந்தருளினாள்!

முதலில் குறள் உருக்கொண்டு வந்து, பிறகு திடீரென்று நெடிய மாலாக நிமிர்ந்து, மாவலியினிடமிருந்து எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்ட இறைவன், தவருன காரியம் செய்ய வில்லை என்று விளக்கவே, வில்லிபுத்தூர் விளக்கான ஆண்டாளும், ''ஓங்கி உலகளந்த உத்தமன்'' என மகுடமிட்டருளினுள். சமணரும், துறவியுமான இளங்கோவடிகளும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில், திருமாலைப் பாட முனைகையில், திரிவிக்கிரம அவதாரத்திற்கு முதல் இடம் தந்தது மட்டுமல்லாமல், இத் திரிவிக்கிரம அவதாரத்தில் தவறு ஒன்றும் செய்யப்படவில்லை என்று தீர்ப்புக் கூறும் வகையில்,

''மூவுலகும், ஈர் அடியால்
முறை திறம்பா வகை முடியத்
தாவிய சேவடி! ''

என்று முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமப் பெருங்கவிஞர் ஆகிய இளங்கோ வடிகள் பெரிதும் புகழ்ந்து போற்றியுள்ளார்.

இதில், ''முறைதிறம்பா வகை முடியத் தாவிய சேவடி'' எனவரும் தொடர், பெரிதும் சிந்திக்கத்தக்கது. அம்மட்டோ! உலகப் பெருங்கவிஞராகிய ஆசிரியர் திருவள்ளுவரும், தமது பொதுமறையாகிய திருக்குறளில், ''மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅயது எல்லாம் ஒருங்கு'' என விதந்தெடுத்துச் சிறப்பித் வாமன திரிவிக்கிரமாவதாரத் தினைக் குறிப்பிட்டுரைத்துப் போற்றியுரைத் திருப்பது, இங்கு நாம் நினைந்து நினைந்து இன்புறுதற்கு உரியதாகும்.

★

---



மலேசியா அமைச்சர் மாண்புமிகு திரு. சம்பந்தம் அவர்கள், சென்னை அருள்மிகு காளிகாம்பாள் கமடேசுவரர் ஆலயத்திற்கு வருகைதந்து வழிபட்டபோது, வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல். (24—1—73)

# திருமால் அடியார் சிறப்புநலங்கள்

திருவுடன் கூடிய மால் ஆகிய திருமாலை யே, முழுமுதற் பரம் பொருளாகக் கொண்டு வழிபடும் அடியவர்களே, திருமால் அடியார்கள் அல்லது ஸ்ரீவைஷ்ணவர்கள் எனப்படுவர். அடியவர்கள் பக்தர்கள் எனவும் வழங்கப்படுவர். பக்தியுடையவர் பக்தர் எனப்பெறுதல் பொருத்தமேயாயினும், 'பத்தர்' எனவும் வழங்கும். அதன்படி பத்துவகையான இயல்புகள் அல்லது செயல்களையுடையவர்கள் 'பத்தர்' எனப் பெயர்பெறுவர். 'பத்துக்கொலாம் அடியார் செய்கைதானே' என்னும் அருள்மொழி இதனை அறிவிக்கும். ''பத்துடை அடியவர்க்கு எளியவன், பிறர்களுக்கு அரிய வித்தகன்'' எனவரும் நம்மாழ்வார் திருப்பாடல் தொடரும், இவ்வுண்மையினை வலியுறுத்தும். இதனால் திருமால் அடியவர்களுக்கு உரிய இலக்கணங்கள் அல்லது சிறந்த பண்புநலங்கள் பத்து என்பது, தெளியப்படுகின்றது. அப்பத்துவகைப் பண்புநலங்களாவன பின்வருவன ஆகும்:

1. இறைவனைத் தவிர வேறு பொருள்களில் உள்ள பற்றுக்கள் யாவற்றையும் அறவே விடுதல்.

2. எல்லா உயிர்களையும் எக்காலத்திலும் பாதுகாக்கும் இறைவனைத் தவிர, வேறொருவரும் தமக்குத் தஞ்சம் அல்லர் எனத் தெளிந்து, அவனையே துணையாகப் பற்றுதல்.

3. இறைவன் சரம சுலோகத்தில் 'என்னையே உபாயமாகப் பற்று' எனக் கட்டளையிட்டிருத்தலால், அவனையே உறுதியாகப் பற்றியுள்ள தமக்கு வீடுபேறு தவருமற் கிடைக்கும் என நம்பித் துணிந்திருத்தல்.

4. இங்ஙனம் வீடுபேறு தப்பாமற் கிடைக்கும் என்று நம்பித் துணிந்திருந்தாலும், அதனை அடைதற்கு ஆர்வம் மிகுந்து விரைந்து முயலுதல்.

5. வீடுபேறு அடைதலில் மனம் விரைந்து நிற்பினும், உலகத்தில் வாழும் நாட்களில் இறைவன் உவந்து கோயில் கொண்டிருக்கும் திவ்விய தேசங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு, அவ்வத் திவ்விய தேசங்களில் விளங்கும் எம்பெருமான்களின் சிறந்த குணநலன்களை அனுபவித்துக்கொண்டு, மன மொழி மெய்களினால் தொண்டு செய்து வருதலையே தமக்குப் பொழுது போக்காகக் கொள்ளுதல்.

6. ஞானம் அநுட்டானம் இவை நன்றாகவே யுடைய திருமாலடியவர்களைக் காணின் ''தீயில் தாமரை மலர்ந்தன்ன'' இவ்வுலகிலும், இத்துணைச் சிறப்பு வாய்ந்தார் சிலர் உளரோ? என அவர்கள் பெருமையைப் பாராட்டி, அவர்களிடம் அழுக்காறு ஒழிந்து, அவர்கள் தாழ்ந்த குலத்தினராக இருப்பினும், அவர்கள் பாற் கலந்து உவகையுடன் அன்பு பாராட்டுதல்.

7. தள்ளத் தக்கன இவை, கொள்ளத் தக்கன இவை எனத் தெள்ளிதின் விளக்கும் திருமந்திரத்திலும், அதை விரித்துச் சொல்லும் துவயத்திலும் ஊன்றி நிற்றல்.

8. ஆசாரியாபிமானம் ஒழியக் கதியில்லை, ஆசாரியாபிமானமே உத்தாரகம் என்றுணர்ந்து தன்னை ஏற்றுப் பணி கொள்ளும் ஆசாரியன் பால் மிக்க அன்பு பாராட்டுதல்.

9. இரும்பைப் பொன்னுக்குவாரைப் போன்று, இழிந்த தன்னை ஏற்று உபதேசத்தினால் திருத்தி உய்வித்த ஆசாரியனிடத்திலும், இத்தகைய ஆசாரியனிடம் தன்னைக் கொண்டு போய்ச் சேர்த்த ஈசுவரனிடத்திலும் நன்றியுடையவனாய் இருத்தல்.

10. சித்து அசித்து ஈசுவரன் என்று மூன்றையும் பொருளாகக் கொண்டுள்ள ஞானமும், உலகப் பொருள்களில் பற்றற்ற தன்மையும்,

இவை இரண்டும் நமக்கு வாய்த்துள்ளன என்று இறுமாப்புக் கொள்ளாமையாகிய சாந்தியும், அமையப்பெற்ற திருமால் அடியார்கள் ஆகிய பாகவதரோடு கூடிவாழ்தல்.

''புறம்புண்டான பற்றுக்களை அடைய வாசனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சம் என்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே பிரவணனாய்க் குணாநுபவ கைங்கரியங்களே போது போக்காகையும், இப்படி இருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏற்றம் அறிந்து உகந்திருக்கையும், திருமந்திரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசார்ய பிரேமம் கனத்திருத்கையும், ஆசார்யன் பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் கிருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞாநமும் விரத்தியும் சாந்தியும் உடையராய் இருக்கும் பரம சாத்விகரோடே சகவாசம் பண்ணுகையும் ஸ்ரீவைஷ்ணவ அதிகாரிக்கு அவச்ய அபேக்ஷிதம்''.

எனப் பிள்ளைலோகாசாரியர் என்னும் வைணவப் பெருஞ்சான்றோர் அருளிச் செய்திருத்தல் கொண்டு, திருமால் அடியவர்கட்கு உரிய சிறப்புநலங்கள் ஆகிய பத்து இலக்கணங்களையும், நாம் செவ்விதின் தெளியலாம்.

— ஆசிரியர்

★



மலேசியா அமைச்சர் மாண்புமிகு திரு. சம்பந்தம் அவர்கள், சென்னை அருள்மிகு காளிகாம்பாள் கமடேசுவரர் ஆலயத்திற்கு வருகைதந்து வழிபட்டபோது, வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல். (24—1—73)

# இறைவனின் ஐவகை நிலைகள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

இறைவனின் நிலை பரத்தும், வியூகம், விபவம், அந்தரியாமித்துவம், அர்ச்சாவதாரம் என்று ஐந்து வகைகளாக விளங்கும். அவை கள் பின்வருவன ஆகும்,

(1) பரத்துவம் என்பது, 'நலம் அந்தம் இல்லதோர் நாடு' எனப்படும் வைகுந்தம் ஆகிய நித்திய விபூதியிலே, உலகியல் வாழ்வி னின்று விடுபட்டுப் பகவத் அநுபவமே போது போககாக இருக்கும் முக்தர்களுக்கும், வினை காரணமாக ஒருநாளும் உலகில் வந்து பிறவாத பெருநிலையிலுள்ள அனந்தன் கருடன் முதலிய நித்தியர்களுக்கும் போக்கியனாக இறைவன் எழுந்தருளியிருக்கும் நிலை.

(2) வியூகம் என்பது, படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களைப் புரியவும், உலக மக்களுக்கு நன்மையை உண்டாக்கித் தீமைகளைப் போக்கிப் பாதுகாத்தருளவும், வீடு பேறு பெற விரும்பி முயலும் முமுட்சுக்கள் உலகியல் வாழ்வை விடுவித்துக் கொண்டு தன்னை வந்து அடைவதற்கு ஏதுவான அரு ளைப் புரியவும், வாசுதேவன் சங்கருடணன் பிரத்தியும்நன் அநிருத்தன் என்பவர்களாகத் திருப்பாற் கடலில் விளங்கும் நிலை.

(3) விபவம் ஆவது எல்லாப் பொருள்க ளாகவும் வந்து தோன்றுதல். மச்சம் கூர்மம் வராகம் நரசிங்கம் வாமனன் இராமன் கிருஷ்ணன் முதலிய அவதாரங்களே விபவம் என வழங்கப்பெறும். "எந்நின்ற யோனியு மாய்ப் பிறந்தாய் இமையோர்கள் தலைவா", "பிறப்பில் பல்பிறவிப் பெருமான்", "மீனோ டாமைகேழல் அரி குறளாய் முன்னும் இராம னாய்த் தானாய்ப் பின்னும் இராமனாய்த் தாமோ தரனாய்க் கற்கியும் ஆனான்" என்றெல்லாம் இதனை ஆழ்வார்கள் போற்றியுள்ளமை காண லாம். "பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே" என்பது பரிபாடல்.

(4) அந்தரியாமித்துவம் ஆவது, எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் உட் கலந்து நின்று இயக்கி நிற்பவனாகத் திகழும் நிலை. "உடல் மிசை உயிர் எனக் கரந்தெங்கும் பரந்துளன்" "கரந்தசில் இடந்தொறும், இடந்திகழ் பொருள்தொறும் கரந்து எங்கும் பரந்துளன் இவையுண்ட கரனே" முதலிய திருப்பாசுரங்கள் இந்நிலையைக் குறிப்பன வாகும்.

(5) அர்ச்சாவதாரம் என்பது, கோயில் களிலும் இல்லங்களிலும் ஒரு வடிவத்தின்கண் எழுந்தருளி, அன்பர்கள் உவக்கும் கல் செம்பு முதலிய உபாதானப் பொருள்களே தனக்குத் திருமேனியாகவும், அவர்கள் விரும்பும் திருநாமங்களே தனக்குத் திருநாமமாகவும், அவர்கள் புரியும் பாவனையே தனது வண்ண மாகவும் நிற்கும் நிலை. "பின்னானார் வணங்கும் சோதி" என்று சிறப்பிக்கப் பெற்றதும், இறைவன் தன்குணநிறைவுடன் திகழ்வதும், ஆழ்வார்கள் பல இடங்களிலும் பிரபத்தி பண்ணியதும், அர்ச்சாவதாரமேயாகும். பரத் துவ நிலையில், இறைவனின் ஒளி பகல் விளக் குப் போல மிகவும் மழுங்கியிருக்கும். அர்ச்சாவ தாரத்திலோ, அஃது இருட்டறையில் விளக்குப் போல மிகவும் பிரகாசம் பெற்றுத் திகழும். மேலும், தனது குண நிறைவையும் உரிமை யியல்பையும் குலைத்துக் கொண்டு, தன்னை விரும்பாதவர்களையும் தான் விரும்பிப் பேணிக் காத்து நிற்கும் நிலை அர்ச்சாவதாரம் ஆகும்.

"தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருகந்தது எப்பேர் மற்று அப்பேர்—
தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே,
அவ்வண்ணம் ஆழியான் ஆம்"
—பொய்கையார்.

இறைவனாகிய திருமாலுக்குரிய பரத்துவம் வியூகம் விபவம் அந்தரியாமித்துவம் அர்ச்சை என்னும் இந்த ஐவகை நிலைகளைப் பற்றிய குறிப்புகள், பழந்தமிழ்ச் சங்க இலக் கியங்களிலும்கூட, ஆங்காங்கே பயின்று காணப்படுகின்றன.

(1) "மூவேழ் உலகமும் உலகினுள் மன்பதும், மாயோய் நின்வயிற் பரந்தவை யுரைத்தேம்" (பரிபாடல், 3): "அறுபொருள் இவன் என்றே அமரர்கணம் தொழுதேத்தே, உறுபசி ஒன்றின்றியே உலகு அடைய உண்ட னையே" (சிலம்பு: ஆய்ச்) என்பன போல் வனவற்றால் பரத்துவ நிலை சுட்டப்பெற்றது.

(2) "பாடிமிழ் பரப்பகத்து அரவணை அசைஇய ஆடுகொள் நேமியாற் பரவுதும்" எனக் கலித்தொகையும் (105), "செங்கட் காரி, கருங்கண் வெள்ளை, பொன்கட் பச்சை பைங்கண் மால்" என முறையே வாசு தேவன் சங்கருடணன் பிரத்தியும்நன் அநிருத் தன் என்பவர்களைக் குறிப்பிடும் பரிபாடற் பகுதியும் (3), போல்வனவற்றால் வியூகநிலை விளக்கப்பெற்றது,

(3) "வென்வேற் கவுரியர் தொன்முது கோடி முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த பல்வீழ் ஆலம்" (அகம் 70) எனவும்; "பால்நிற உருவிற் பனைக்கொடியோனும், நீல் நிற உருவின் நேமியோனும் என்று இருபெருந் தெய்வமும்" (புறம் 58) எனவும்; "வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர் மரஞ்செல மிதித்த மாஅல் போல" (அகம் 59) எனவும், "கெடா அத் தீயின் உருகெழு செல்லூர்க் கடாஅ யானைக் குழூஉச்சமம் ததைய மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்" (அகம் 220) எனவும்; "புருவத்துக் கருவல் கந்தத்தால் தாங்கி இவ்வுலகம் தந்து அடிப்படுத்ததை" (பரி. 4) எனவும் வருவனவற்றால், விபவநிலை விவரிக்கப்பெற்றது.

(4) "வடுவில் கொள்கையின் உயர்ந் தோர் ஆய்ந்த கெடுவில் கேள்வியுள் நடு ஆகு தலும்" எனவரும் பரிபாடற் பகுதி (2.25) போல்வனவற்றால், உயிர்தொறும் உயிர் தொறும் உட்கலந்துறையும் அந்தரியாமித்துவ நிலை அறிவிக்கப்பெற்றது.

(5) "நீலமேகம் நெடும்பொற் குன்றத்துப், பால்விரிந்து அகலாது படிந்தது போல, ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற் பாயற் பள்ளிப் பலர் தொழுதேத்த, விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித் திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்; வீங்குநீர் அருவி வேங் கடம் என்னும் ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை, விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி, இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து, மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு நன்னிற மேகம் நின்றது போலப், பகையணங்கு அழியும் பால்வெண் சங்கமும், தகைபெறும் தாமரைக் கையின் ஏந்தி, நலங் கிளர் ஆரம் மார்பிற் பூண்டு, பொலம்பூ ஆடையிற் பொலிந்து தோன்றிய செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும் (சிலப்பு, 11) எனவும், "காந்தளஞ் சிலம்பிற் களிறு படிந் தாங்குப் பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்" (பெரும்பாண். 372) எனவும் வருவனவற்றால் அர்ச்சைநிலையின் சிறப்பு அறிவுறுத்தப்பெற்றது.

பரத்துவ நிலை நித்யர் முக்தர்களின் அநுபவத்திற்காக; வியூகநிலை பிரமன் இந்திரன் முதலானோருடைய கூக்குரல் கேட்கைக்காக; இராமன் கிருஷ்ணன் முதலான விபவாவதாரங் கள் அவ்வக்காலத்தில் வாழ்ந்திருந்தவர்களுக் காக; அந்தரியாமியாய் இருப்பது, பிரகலா தாழ்வான் போல்வார்க்கும் கர்மடர்களுக்கும் ஆகும். "அடியோமுக்கே எம்பெருமான் அல்லீரோ நீர்" எனத் திருமங்கையாழ்வார் பணித்தருளியபடி அர்ச்சாவதார நிலை ஒன்றே, நம்போன்ற அடியார்களை உய்விக்க அமைந் தது எனலாம்.

அந்தர்யாமித்துவம், தரையிற் பதிந்து மறைந்து கிடக்கும் நீர்(பூகத சலம்) போன்றது. பரத்துவம், அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கின்ற நீர் (ஆவரண சலம்) போன்றது. வியூகம், எளிதிற் கிட்ட இயலாத திருப்பாற் கடல் போன்றது; விபவம், முன்பே பாய்ந்து வடிந்தொழிந்த பெருக்காறு போன்றது; அர்ச்சாவதாரம், நீர்விடாய் கொண்டவன் எளிதிற் சென்று இறங்கி, வேண்டும் அளவும் பருகலாம்படி தேங்கியுள்ள மடுக்கள் போன்றது.

வேதத்துக்குப் பரத்துவத்தில் நோக்கு; பாஞ்சராத்திரத்திற்கு வியூகத்தில் நோக்கு; இதிகாசபுராணங்களுக்கு விபவத்தில் நோக்கு. மிருதிகளுக்கு அந்தரியாமித்துவத்தில் நோக்கு; திவ்வியப் பிரபந்தங்களுக்கு அர்ச்சையில் நோக்கு.

திருமாலுக்குரிய இவ்வைவகை நிலைகளை யும் பற்றித் தம்முடைய திருப்பாசுரம் ஒன்றில், நம்மாழ்வார் ஒருசேரக் குறிப்பிட்டுப் பின் வருமாறு அருளிச் செய்திருக்கின்றார்.

"விண்மீது இருப்பாய்; மலைமேல்
நிற்பாய்; கடல் சேர்ப்பாய்;
மண்மீது உழல்வாய்; இவற்றுள்
எங்கும் மறைந்துறைவாய்;
எண்மீது இயன்ற புற
அண்டத்தாய்; எனது ஆவி
உண்மீது ஆடி உருக்
காட்டாதே ஒளிப்பாயோ?"

எனவரும் திருப்பாசுரத்தில், விண்மீது இருப்பாய் என்றது பரத்துவம்; கடற்சேர்ப் பாய் என்றது வியூகம்; மண்மீது உழல்வாய் என்றது விபவம்; எங்கும் மறைந்துறைவாய் என்றது அந்தரியாமித்துவம்; மலைமேல் நிற் பாய் என்றது அர்ச்சை ஆகும்.

—ஆசிரிய

# சம்பந்தரும் பௌத்தமும்

டாக்டர் திரு. சோ. ந. கந்தசாமி M.A., M. Litt., Ph.D.

(தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

சமண பௌத்த புறச்சமயங்களின் போதனைப் போர்வையில் முடங்கிக் கிடந்த தமிழ் மக்களின் கூனலை நிமிர்க்கத் தோன்றிய கோளரிதான், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர். கங்கைக் கரையில் பிறந்த புறச் சமயங்களைக் காவிரிக் கரையில் பிறந்த சிவஞானச்செல்வர் வேரோடு வீழ்த்தித் தென்னாடுடைய சிவநெறியை எந்நாடும் ஏற்க நிலை நிறுத்திச் சைவமும் தமிழும் செழித்துத் தழைக்க அயராது உழைத்த அருளாளர் ஆவர். சாக்கியத்தையும் சமணத்தையும் தாக்கக் கூடிய தகுதியடைத்த தறுகண்மை மிக்க மைந்தனைச் சிவபாத இருதயரும் பகவதி அம்மையாரும் தவம் செய்து பெற்றனர், என்பதைச் சேக்கிழார் வாக்கினை நோக்கி உணரலாம்.

வேதங்களையும் வேள்விகளையும் உயிர்க் கொலையினையும் வருணப் பாகுபாடுகளையும் சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் சாதிக்கொரு நீதியையும் மறுப்பதற்காகவும்; கருணையும் கனிவும், அன்பும், அருளும் அமைதியும், சீலமும், நீதியும், நேர்மையும் உலகெங்கும் பரப்புதற்காகவுமே தோன்றிய பௌத்த சமயத்தை இந்திய நாட்டிலே, இந்தத் தமிழகத்திலே தாக்கக் கூடிய அறிவுரனும் தடுத்து நிறுத்தக் கூடிய ஆன்மீக பலமும் படைத்த அருளாளர்களை ஞானசம்பந்தருக்கு முன் இந்தத் தமிழகம் ஏன் தரவில்லை, சிந்திக்க வேண்டும்.

## வரலாற்றுப் பின்னணி :

கி.பி. 6,7-ஆம் நூற்றாண்டு வரலாற்றினை உன்னிப்பாக உற்றுநோக்கின் உண்மைகள் சில புலப்படும். சிறந்த சிவநேசச் செல்வனாகிய அர்ஷன் புத்தனைப் போற்றிப் புகழ்வதை நாகாநந்தம் என்ற நாடகத்தாலும், அவன் அவைக்கு வந்திருந்த யுவான்சுவான் என்ற சீன வழிப்போக்கன் குறிப்பாலும் உணர்கிறோம். இதே காலத்தில் சமணனாக வாழ்ந்து மத்த விலாசப் பிரகசனம் என்னும் நாடகம் யாத்துப் பௌத்தத்தைப் பழித்துரைத்துப் பின் சைவனாக மாறிய மகேந்திரவர்மனின் கல்வெட்டில் திருமாலின் அவதாரங்களில் ஒன்றாகப் புத்தன் போற்றப்படுவதை மறக்க முடியுமா? தசகுமார சரிதம் பாடிய வைணவப் புலவன், புத்தனைத் திருமாலாகப் போற்றியது எதற்கு? 'கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்' எனப் பாராட்டப் படும் இராசசிம்மபல்லவன், சீனவாணிபர் வழிபட நாகைப்பட்டினத்தில் புத்தவிகாரம் அமைத்துக் கொடுத்த அன்புச்செயலை எண்ணிப் பார்க்க வேண்டும். சிவபிரானை ஏத்தி இறைஞ்சி மங்கலப்பாடல் வரைந்து மிருச்சகடிகம் எழுதிய சூத்திரகனின், நூல் பௌத்தத்தின் புகழ்பாடும் நுட்பம் என்ன? தேவாரத் திருமுறைகளைத் தொகுத்துத் திருநெறிய தமிழ் பரவ வகை செய்த சிவபாதசேகரனாகிய இராசராசசோழன் நாகையில் இராசராசப்பெரும் பள்ளி அமைத்துப் பள்ளிச் சந்தங்கள் வழங்கிய வாய்மையை 'லெய்டன் பட்டயம்' விளம்பும் வரலாற்றுண்மையை மறக்க முடியுமா? கங்கைகொண்ட சோழேச்சுரம் அமைத்துச் செம்மேனி எம்மானைச் சேவித்த இராசேந்திரன் கூட நாகையில் இராசேந்திரப் பெரும்பள்ளி என்ற—பௌத்தக் கோயில் எடுப்பித்துப் பள்ளிச்சந்தமாக அளித்த நிலபுலன்கள் ஏராளம். நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வேற்றுச்சமயம் இந்த நாட்டினை ஆட்சிபுரிந்தது என்றால் அதில் ஏதோ மாட்சி இருக்கிறது என்பதுதான் பொருள். ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆழமாக வேரூன்றி

✠ திருவிடை மருதூர்த் திருமுறைக் கருத்தரங்கத்தில் ஆற்றிய சொற்பொழிவைத் தழுவிய கட்டுரை.

விட்ட சமயம் வீழ்ச்சி அடைகிறது என்ருல், சமயத் தலைவர்கள் சமயம் சேர்ந்தோர் இவர்களிடம் ஏதோ வீழ்ச்சி ஏற்பட்டது எனக் கொள்ளுதல் வேண்டும். அன்றி, உயரிய சமயம் உதயமாகிவிட்டது என்று எண்ணுதல் வேண்டும். எந்த வைதிகர்கள் புத்தரைப் புறக்கணித்தார்களோ, அதே வைதிகர்கள் புத்தரின் சீடர்களாக மாறிப் பௌத்தத்தை உலகெங்கும் பரப்பிய உத்தமத் தொண்டர்களாக விளங்கினர்கள். வேத வேதாந்தங்களைக் கற்றுத் துறை போகிய நாகார்ச்சுனர் குமாரலப்தர் வசுபந்து, திக்நாகர்-இவர்கள்தாம் பௌத்தத்தின் புறக் கிளைகளின் தலைமைத் தோள் காடுத்து நின்றவர்கள். வேதாந்த சூத்திரத்திற்கு விளக்கம் கொடுத்துக் கேவலாத்து வைதத்தை நிலைநாட்டிய ஆதிசங்கரரைப் பிரச்சன்னபௌத்தர் என்றல்லவா இந்துக்கள் ஏளனம் செய்தனர். இவர்கள் எல்லாம் கண் மூடித் தனமாகவா பௌத்தத்தைக் கடைப் பிடித்தனர். சமயப்பொறை வேறு. சமயத்தில் ஊன்றி நிற்றல் வேறு. ஞானசம்பந்தரே,

"போதியாரும் பிண்டியாரும் புகழல
சொன்னலும்
நீதியாகக் கொண்டங்கருளும் நிமலன்
இருநான்கின்
மாதிசித்தர் மாமறையின் மன்னிய
தொன்னூலர்
சாதிகீத் வர்த்தமானர் சண்பைநகராரே"

எனப் புத்தருக்கும் சமணருக்கும் அருள் பாலிக்கும் வித்தகச்சிவனரின் கருணையைக் கசிந்துரைத்தல் காணலாம். எனினும் சைவத்தின் மேற்சமயம் வேறில்லை: அதில்சார் சிவமாம் தெய்வத்தின் மேல்தெய்வம் வேறில்லை என்பதைச் சாதித்துக்காட்டிச் சித்தாந்த சைவத்தை நிலைநாட்ட அவதாரம் எடுத்தவர் சம்பந்தரே.

### சைவத் தமிழியக்கத் தலைவர் :

கற்றறிந்த பெருமக்கள் ஏற்றுப் போற்றும் அளவிற்குப் பௌத்த மதத்தில் எவ்வளவோ நல்ல அம்சங்கள் இருந்தன. ஆனல் பௌத்தத் துறவிகள் காலத்தின் கோலத்தால் சீலத்தையெல்லாம் காற்றிலே பறக்கவிட்டு, உண்டு, உடுத்து, உறங்கும் வேடதாரிகளாகவும் சீர் கேடர்களாகவும் மாறிவிட்ட காரணத்தினல் சம்பந்தரின் கடுங்கணைக்கு இலக்காகி, இரையாகி விட்டனர்.

தமிழர்தம் கடவுள் நெறியைக் காக்கவும், தமிழர் வாழ்வில் புத்துணர்ச்சி பூக்கவும், தமிழர்கள் சிவனருளையே நோக்கவும், புறச் சமயங்களை நீக்கவும் ஊக்கமும்உரமும்படைத்த ஒரு தலைவனைத்தவம் கிடந்து பெற்றது தமிழகம். உறங்கிக் கிடந்த தமிழகத்தின் ஊர்கள் தோறும் சென்று மக்களைத் தட்டியெழுப்பித் திரண்டெழச்செய்து பக்திப் பாசறைக்கும் தமிழ் இயக்கத்திற்கும் தொண்டர்படைக்கும் கிடைத்த தானைத்தலைவன் தான், தளபதிதான், தமிழ் ஞானசம்பந்தன். இவ்வுண்மையினை,

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்
துறைவிளங்க" (1)

"திசையனைத்தின் பெருமையெலாம்
தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே
தனிவெல்ல
அசைவில்செழுந் தமிழ்வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும்
இடம்கொள்ளும் நிலைபெருக" (2)

"அவம்பெருக்கும் புல்லறிவின்
அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள்
பாழ்படநல் ஊழிதொறும்
தவம்பெருக்கும் சண்பையிலே
தாவில்சரா சரங்களெல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார்
திரு அவதாரம் செய்தார்" (3)

எனவரும் சேக்கிழார் வாசகம் உறுதிப் படுத்தும். ஞானத்தின் திருஉருவாய் அன்பு நெறியைப் பெருக்குவித்த ஆண்டகையாய், முத்தமிழ் விரகனுய், பரசமய கோளரியாய், ஞானம் உய்ந்திட ஞானப்பால் பருகிய நம்பியாய், இறைவர் திருமைந்தராய் விளங்கியவர் கழுமல முதுபதிக் கவுணியனர். ஐந்தெழுத்தின் ஆற்றலினல் எலும்பைப் பெண்ணுருவாகப் படைத்தும், படிக்காசு பெற்றுப்பாமர மக்களின் பசிபோக்கிக் காத்தும், கழுவா உடலங்களைக் கழுவின ஆக்கி அழித்தும் முத்தொழில் புரியும் வித்தகச் செம்மலாய்த், தன்னைப் பின்பற்றுவோர்க்கெல்லாம் பேரின்ப முத்தியும் பெற்றுத் தந்த வள்ளலாய் வாழ்ந்தருளிய • அற்புதத்தினை எண்ணித்தான்.

"பொன்னூர் மதில்சூழ் புகலிக்கரசை
அருகர்தங்கள்
தென்னுட்டரண் அட்ட சிங்கத்தினை
எம்சிவன் இவனென்று
அந்நாள் குதலைத் திருவாய் மொழிகள்
அருளிச்செய்த
என் ஆனையைப் பணிவார்க்கில்லை காண்க
யமாலயமே''

என நம்பியாண்டார் நம்பி நாவினிக்கச் செவியினிக்க, சிந்தையினிக்கத் தேனூறும் தீந்தமிழில் பாடிப் பரவுகிருர். வைணவ வழக்கில் பரகாலன் என மங்கைமன்னன் மதிக்கப்படுதல் போல் சைவ மரபில் பரசமய கோளரியாய்ப் பணிபுரிந்த ஞானசம்பந்தரை மறத்தற்கில்லை. இருவருமே அண்டை ஊரினர் ஆதலும் காண்க.

சமத்துவம், சமுதாயத்தொண்டு, தாய்மொழிப்பணி என்ற மூன்றுமே புத்தரின் உயிர்க் கொள்கைகள். இம்மூன்றும் ஞானசம்பந்தரின் வாழ்வில் நிறைந்திருந்த நிலையினையும் நாம் அறிவோம். பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங்களாக மாறிய நிலையில் ''எனதுரை தனதுரையாக'' எனச்செம்மாந்துபாடும் திறனும்; ''ஆணை நமதே'' என நிறைமொழி மாந்தராய் ஆணையிற் கிளந்த மறைமொழியாகிய மந்திரங்களும் உள்ளுதொறும் உவகை பயப்பனவாம்.

நம்பியாண்டார் நம்பியின் கணக்குப்படி சம்பந்தர் பாடியவை 16,000 பாடல்கள். இப்போது கிடைப்பன 383 பதிகங்களே. பெரும்பாலும் பதிகத்தின் பத்தாம் பாடல் பரசமய கண்டனத்திற்கு ஒதுக்கப்பட்டது. சுமார் 365 இடங்களில் பௌத்தக் குறிப்புக்கள் உள்ளன. சில புதிகங்களில் சமணக் குறிப்பு மட்டுமே உண்டு (46, 72, 69, 92). சிலவற்றில் பௌத்தக் குறிப்புத்தான் காண்கிறோம். (80,276)

## சம்பந்தர் காட்டும் பௌத்தம் :

சமணத்திற்கு அடுத்த நிலையில் பௌத்தம் தமிழகம் எங்கும் பரவியிருந்தது. சம்பந்தர் பௌத்தர்களைச் சாக்கியர், தேரர், புத்தர், போதியார், சீவரர் எனப் பல பெயர்களால் சுட்டுகிருர். பௌத்தரின் பழக்க வழக்கங்களையும் சமய நூல்களையும் கொள்கைகளையும் ஓரளவு படம்பிடித்துக் காட்டுகிருர். அவற்றை இவண் உற்றுநோக்குவோம்.

## பௌத்தரைக் குறிக்கும் பெயர்கள்:

### 1. சாக்கியர்:

அரசர் மரபாகிய சாக்கியக் குடியில் பிறந்ததால், புத்தரைச் சாக்கியர் என்றும் அவர் புகட்டிய நெறியினைச் சாக்கியம் என்றும் பாலி நூல்கள் பகரும். (Sakya or Buddhist Origins, p 10, 15, 139, The Vedantic Buddhism of the Buddhists) சக்கியப்புத்திரர் என்பது, சாக்கியப் புத்தர் எனப்பாலியில் வழங்கும். இக்குறியீடு சாக்கியம் சார்ந்தோரைக் குறிக்கும். சாரிபுத்தன், மௌத்கல்யாயினர், காசிபர், கச்சானர், உபாலி, ஆனந்தன் முதலிய பன்னிரு சீடர்களைச் சாக்கியப்புத்தர் என்றே வழங்கினர். சம்பந்தர் பௌத்தர்களைச் சாக்கியர் என்ற பெயரால் எண்பது இடங்களில் குறித்துள்ளார்.

பௌத்த மதத்தினைச் சாக்கியம் என்றே வழங்கினர். (116, 172, 213, 226). சாக்கியர் கூட்டம் (202), என்ற குறிப்பு பௌத்த சங்கத்தினைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். முதன் முதல் கருத்துப் பிரச்சாரத்திற்குப் பெருங்குழு அமைத்துப் பணியாற்றியவர் புத்தரே. சாக்கியராயினும் சிவனையே நினைந்து அருள் பெற்றுய்ந்த சாக்கியநாயனர் வரலாற்றினையும் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிருர். (திருமுறை IV: 481). இதனுல் மக்கள் சாக்கியத்திலிருந்து சைவம் நோக்கித் திரும்பினர் எனலாம்.

2. தேரர், தேரை, தேர் என்ற சொற்களாலும் 57 இடங்களில் சம்பந்தர் பௌத்தர்களைக் குறிப்பிடுகிருர். புத்தர், தேரர் 254; சீவரத்தேரர் 238: சிறுதேரர் 32,74: பெருந்தேரர் 257: முதுதேரர் 335: நெடுந்தேரர் 38, சிறுபுன்தேரர் 216: வன்தேரர் 85: அறுவகைத் தேரர் 128. தேரை 35. தேர் 42,34.

ஸ்தவீர என்ற வடசொல் பாலியில் தேர என வழங்கும். (Indian philosophy vol. I. p 581). இச்சொல் அறிவிலும் ஆண்டிலும் முதிர்ந்த பௌத்தத் துறவியரைக் குறிக்கும். கி.மு.2-ஆம் நூற்ருண்டைய அழகர்மலைத் தமிழ்ப்பிராமி கல்வெட்டில் தவிரை, தவிர என்ற வடிவில் இச்சொல் வழங்கக் காணலாம். சிறுவெண் தேரையார் (புறம்-362). தேரதரன் (குறுந், 195) முதலியோர் சங்ககாலப் பௌத்தப் புலவர்கள் ஆவர். பிற்காலத்தில் தேரையர் என்ற மருத்துவர் வாழ்ந்தனர் என அறிகிறோம்,

தேரவாத பௌத்தம்தான் தென்னாட்டிலும் இலங்கையிலும், கீழைநாடுகளிலும் பெருக வழங்கியது. கந்தபிடகத்தின் பிரிவுகளாகிய தேரகாதை தேரிகாதை என்பன புத்தர் காலத்துத் தேரர்களாலும் தேரிகளாலும் எழுதப்பட்ட கொள்கை விளக்கப் பாடல்களைக் கொண்டு விளங்குவன. பிடகங்களின் உரையாசிரியர் ஆகிய காஞ்சீபுரத்துத் தமிழர் ஆசாரிய தம்மபாலர் இவ்விரு நூலிற்கும் பரமார்த்த தீபினி என்ற உரை வகுத்துள்ளனர். தேரர் என்ற சொல்லின மாத்திரம் துணைக் கொண்டு தேரவாதமாகிய ஈனயான பௌத்தமே சம்பந்தர் காலத்தில் திகழ்ந்தது எனத் துணிதற்கில்லை. ஏன் எனில், அறுவகைத் தேரர் எனச் சம்பந்தர் தொகை குறித்தலான் அவர் காலத்துத் தமிழகத்தில் ஆறுவகையான பௌத்தங்கள் விளங்கின என்பது வெளிப்படை. பௌத்தத் துறவிகளில் நான்கு படிகள் உண்டு என்பதைப் பிடக நூல்கள் உணர்த்துகின்றன:—

1. பௌத்த சங்கத்தின் பெருந்தலைவரை மஹாதேரர் என்பர். இவர் முதல் படியினர். இத்தகையோரைத்தான் முதுதேரர் பெருந்தேரர் எனச் சம்பந்தர் குறிக்கிறார்.

2. தகுதி அடிப்படையில் 2,3,4-ஆம் படியில் விளங்கிய தேரர்கள் பௌத்தக் கொள்கைகளைப் போதிக்கும் ஆசாரியர்களாக விளங்கினர்.

3. முற்கூறிய தேரர்களிடம் பாடம் கேட்கும் இளந்துறவியரே பிக்குக்கள் ஆவர். மணிமேகலையினைப் பிக்குணி எனச் சாத்தனார் குறித்தல் காண்க.

4. இருபது ஆண்டிற்குக் கீழ்ப்பட்ட இளம் பிக்குக்களைச் சாமதேரர் என்பர் (vide, Democracy in Early Buddhist Sangha, pXVI).

## 3. புத்தர் :

சித்தார்த்தர் மெய்ஞ்ஞானம் பெற்றபின் புத்தர் எனப் போற்றப்பெற்றார். புத்தி—ஞானம். புத்தரைப் பின்பற்றுவோரையும் புத்தர் எனக் குறித்தல் மரபாயிற்று. கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உத்தசீகர் புத்ததத்தர், புத்தகோஷர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். போதிமங்கையில் சம்பந்தரின் தொண்டர் குழாத்தினை எதிர்த்து நின்ற பௌத்த அறிஞரை "கல்வியினில் மேம்பட்ட புத்தநந்தி முதலான தேரர்க்கும்" (905) எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். சம்பந்தர் தேவாரத்தில் 39 இடங்களில் புத்தர் என்ற சொற் பயிற்சியைக் காண்கின்றோம்.

## 4. போதியார் :

கயா என்னும் ஊரில் அரசமரத்தின் அடியிலிருந்து தியானம் செய்து மெய்ஞ்ஞானம் அடைந்த புத்தரைப் போதிசத்துவர், புத்தர் எனச் சுட்டுவர். சம்பந்தர் பாடல்களில் போதியர், போதியார், போதியவர் முதலிய வழக்குகளைக் காணலாம், திருமூலரும்

'சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலில்
சேர்ந்திருந்தேன் சிவன் நாமங்கள் ஓதியே'

எனப் போதியின் நிழலில் மெய்ஞ்ஞானம் பெற்ற செய்தியைக் குறிப்பிடுகிறார். சம்பந்தர் போதியார் என்ற சொல்லைப் போதிசத்துவர்களாகிய மஹாயான பௌத்தர்களைக் குறிக்கவும் பயின்றிருக்கலாம். மக்கள் தொண்டினையே மதக் கொள்கையாகக் கொண்ட போதிசத்துவரின் தொகை இவர் காலத்தில் அருகிவிட்டதுபோலும். அதனாற்றான் மிகச் சில இடங்களிலே இச்சொலாட்சியினைக் காண்கிறோம். மேலும் "மணமிகு கஞ்சி மண்டையதில் உண்டு தொண்டர் குணம் இன்றி நின்ற வடிவும்" (220) எனக் குறித்தல் காண்க.

5. சம்பந்தர் காலத்தில் பிடக நூல்களும் உரைகளும் எங்கும் பயிலப்பெற்றமையால் பிடகர் என்ற சொல்லினாலும் (272) பௌத்தரைச் சுட்டுகிறார். பௌத்த தருக்கங்கள் மல்கிய காலத்தில் வாழ்ந்தவராதலின் தர்க்க சாத்திரத்தவர் (62) என்றும், சடங்கொண்ட சாத்திரத்தார் (118) என்றும் குறிப்பிடுகிறார்.

6, துவருட்டிய சீவர ஆடையினால் உடல் முழுதும் போர்த்தியவராதலின் பௌத்தரைச் சீவரத்தர் என்ற சொல்லாலும் சுட்டுகிறார். சீவரமங்கலம் என்ற ஊர்ப்பெயரும் பௌத்தச் செல்வாக்கினை உணர்த்துவதாகும் சீவரத்தர் 10.53,58. சீவரை ;- 241 சீவரார், 241, 359, சீவரப்போர்வைச்சாக்கியர் 229.

## பௌத்தரின் பழக்க வழக்கங்கள் :

1. உடை துவர், கடு, காவிக்கல், மருத இலை, இவற்றுள் யாதானும் ஒன்றின் செவ் வண்ணம் ஊட்டப்பட்ட உடையினைப் பௌத் தர்கள் உடல்முழுதும் மூடி உடுத்தினர்: கல் வளர் ஆடையர் 362, 'கடுக்கொள் சீவரை 91, கடுக்கொடுத்த துவராடையர் 270, மருதமர் வன்மலர் துவர் உடையவர் 124, 124, இலை மலிதர மிகு துவர் உடையவர் 123, துவராடை கொள் காசைபோர்க்கும் கலதிகள் முதலிய 303, பல குறிப்புக்கள் உள்ளன.

பௌத்தத் துறவிகள் விலையுயர்ந்த பட்டாடைகளும் உடுத்தினர். (80 106. 144, 198 235). நுண்துகில், செந்துவராடை, வன்றுவராடை, வெற்றுவராடை, நுண்டு வராடை முதலிய குறிப்புக்கள் அவர்தம் ஆடையின் சிறப்பினை உணர்த்துவனவாம் தூசு உடுக்கை, துகில், கூறை, கலிங்கம் போர்வை என்ற பொதுப்பெயர்களாலும் அவர் தம் ஆடைகள் குறிக்கப்படுகின்றன. துவரா டைகளை ஒன்றன்மேல் ஒன்றடுக்கிப் போர்த் தும் பழக்கத்தினையும் பல பாடல்களில் காண் கிறோம். சீவரஆடை என்ற சீருடைபோல் இன்னமதத்தவர் என்பதைக் காட்டிவிடும் துவராடையின் வண்ணத்தைக் குறிக்கும் பகுதிகள். அஜந்தா ஓவியங்களின் அழியா வண்ணத்தை அளித்த பௌத்தப் பெரியார் களின் நுண்கலைத் திறனுக்கு மேலும் சான்று பகர்கின்றன. பௌத்தப் பிடகத்தில் மஹாவக் கத்தில் விலையுயர்ந்த பட்டு சீவரம் முதலிய ஆடைகளைப் பௌத்தர் உடுத்தலாம் என விதிக்கப்பட்டுள்ளது. சமணரைப் பறிதலையர் என்றும், பௌத்தரை வழிதலையர் என்றும் சம்பந்தர் அடையாளம் காட்டுகிறார் (277).

## உணவு, உண்கலம், உறையுள் :

தேரர்கள் கஞ்சியே விரும்பிப் பருகினர். அகக்காட்சியால் சைவராயினும் புறக்கோலத் தால் பௌத்தராய் விளங்கிய சாக்கிய நாயனு ரைப் பற்றி, 'கல்லினால் எறிந்து கஞ்சிதாமுணும் சாக்கியனார். நெல்லினார், சோறுணாமே நீள் விசும் பாளவைத்தார்'' (IV) என அப்பாடிகள் அருளுதல் காண்க. மண்டைப் பாத்திரமே உண்கலம். கடுத்தின்றனர். சுக்கும் மென்ற னர். துவர் இலைகளை அயின்றனர். காலை வேளையே உண்பதற்கு உரிய காலம். ஊட்டு ணர்ச்சியைக் கட்டுப்படுத்த இவை தேவைப் பட்டிருக்கலாம். மீன் உண்டனர் சிலர் (250 305,340). புலால் உண்டவரும் உண்டு. (166, 131). அபிதம்மபிடகத்தின் மஹாவக்கத்தில் புலால், மீன் உணவு அனுமதிக்கப்பட்டது. சமணர்கள் கவளத்தினைக் கையில்வாங்கி உண் பவர்; நின்று உண்பவர் எனக்கூறும் சம்பந்தர் பௌத்தர்களை இருந்து உண்பவர் எனக் கூறுதல் நோக்கத்தக்கது (71,99). இவர்கள் பள்ளியில் உறைந்தனர் (346). கடலோரங் களிலும் வாழ்ந்தவராதல் வேண்டும் (250 305).

## தவம் :

பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமல், பிறர் செய்யும் தீங்கினைத் தாங்கிக் கொள்ளும் அருள் உள்ளம்தான் தவத்தின் இருப்பிட மாகும். புலன்களை வருத்திப் புரியும் தவத் தினைப் புத்தரே வெறுத்தார். ஆயின் சம்பந்தர் காட்டும் பௌத்தர்கள் கடுமையான நோன்பு களை மேற்கொண்டவர்கள் (361). தவத்தாய சாக்கியர் :— (2,13,22,74) தவத்தின் வலிமை யால் ஒளி மயமாகத் திகழ்ந்தனர் (124,300) எனினும் பலர் தவம் செய்வார்போல் அவம் செய்து ஒழுகினர். (242). இவர்களைக் கை தவம் உடைய பொய்த்தவத்தர். வேடதாரிகள் உருக்குலைந்தவர் எனச் சம்பந்தர் சாடுகிறார் (39,109,130)

## பௌத்தரின் குறைபாடுகள் :

கறைபடிந்த தவவாழ்வினராகிய
பௌத்தர்கள் மீனும் விரும்பினர்;
'மதியில் தேரரும் உண்டி வயிரர் (70)
'குண்டிகைக் கையினர் குணமிலாத்
தேரர்கள்

பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள்' (290) எனவே, அவிழ்ச்சுவையே யறிந்தரனடி பரவும் தமிழ்ச்சுவையறியாத் தம்பங்களைத் தறி போலாம் சமண் சாக்கியர் (115), குண்டாக்கர் (114), குண்டக்குணமிலிகள் (11,49), குண்டர் கள் (10 75 85 96 137 150 225 230 278) என்று எண்ணி நகைக்கிறார். இவர்கள் ஒழுக்கம் கெட்டுச் சீர்கேடாய் இருந்ததில் வியப்பில்லை. (31 8 261 163 294). வேறொருவகைத் தேரர் களையும் சம்பந்தர் நமக்கு அறிமுகம் செய்கிறார். அவர்கள் இல்லற வாழ்க்கையில் ஈடுபாடும்

இன்ப நுகர்வும் அறவே வெறுத்தவர்கள்; கடும் நோன்புகளால் தங்களையே வருத்திக் கொண்டவர்கள்;

'இருதலைப் போகமும் பற்றும் விட்டார்' (116)

'போகம் அறியார் துவர்போர்த் துழல்வார்' (153)

'எச்சமறும் போதியார்' (132)

'கடுநோன்பு மேற்கொள்ளும் பாவிகள்'

எனவரும் குறிப்புக்கள் காண்க. ஆனால், புத்தரோ புலன் ஒடுக்கமும் புலன் இன்பத் தோய்வும் நீக்கி இரண்டிற்கும் இடைப்பட்ட நடுப்பாதையினை வகுத்தவர் (His way was the middle—path between the two extremes of self indulgence and self mortification). அவர் காட்டிய நெறியினைக்கைவிட்டதுடன் முரணான முறையில் நடந்ததால் தேரர்கள் பிறர் நகைக்கக் காரணமானார்கள். மக்களின் ஆதரவினை அவர்கள் இழந்தமைக்கு வேறு காரணங்களை யும் சம்பந்தர் காட்டுகிறார். வேத வேள்விகளை நிந்தித்தனர். (366:1). வேத நெறியை அறி யாதவர் (311) வைதிகத்தின் வழி ஒழுகாதவர் (366) நீதி அறியாதவர் (16), நன்மை உணராத வர் (72 211). தீய கருமமே மொழிபவர். செய்பவர் (216 310 132). இருள் மனத்தினர் (120), புலையானார் (217). தமிழருள் பௌத்தம் சார்ந்தவர்கள் சாதி நீக்கம் செய்யப்பட்டார் கள் (7)' இவர்களைப் பிரட்டர், பிட்டர் (69, 349). எனத் தேவாரம் கூறும். பௌத்த தருமங்களைக் கடைப்பிடிக்காமல் பெயரளவில் பௌத்தராய் இருந்து தீமை புரிந்தொழுகிய வீணர்களைச் சம்பந்தர் காரசாரமாகச் சாடிப் பாடியுள்ளார். சாக்கியப்பேய் (76, 77 305, 3). கருஞ்சாக்கியப்பேய்கள் (48), ஆச்சியப்பேய்கள் (119), வெந்தலாகிய சாக்கியர் (139), சடங் கொள்வார் (118, 229), கழுக்கள் (227, 311,262) கலதிகள் (303 377 380), கட்டர் (298) சோடை கள் (20+ , பொருத்தமில்லிகள் (273) திருவிலி (135), விதியிலாதார் (50), பாவிகள் (151 158 170 226 284 324 361), படக்கர்கள் (166), பளகர்கள் (290, 342), பதகர் (168), நீசர் (55 161 2×6 320 342), மூடர் (162), முட்டைகள் (170), பொக்கர்கள் (319), கையர் (41 201 210), கயவர்(351), கூகையம்மாக்கள் 315, கைத்தவர் (2 140 366), வஞ்சச் சாக்கியர் (64), பித்தர் (51 254 368).

முழுமுதலை உணரும் மெய்யுணர்வு பெருமல திரிபுணர்வால் போலித்தத்துவம் புகட்டும் பௌத்தர்களைச் சற்றேயும் அறிவிலார்(152), பிதற்றும் பேதையர் (8 24 184). ஒன்றும் உணரா ஊமர் (71), மதியிலர் (50 70 242 :45 330), அறிவில் சிறியோர் (74), ஆதர்கள் (30 135 164 186 283 383) எனவும்; அவர் பகரும் பயனில் சொற்களை அறிவில் உரை(85) புந்தியில் உரை (110), பேதைமையுரை (383), சிறுசொல் (67 121), புன்பேச்சு (182 194 376), குற்றமொழி (165) எனவும் கடிந்துரைந்தார். அவர்கள் பேசுவனவெல்லாம் முன்னுக்குப் பின் முரண் விளைப்பவை (46). வாதத்தில் தோல்வியுறினும் விடாப்பிடியாக வீணுரை விளம்புபவர் (147). அவர் பேச்சினை மிண்டு மொழி, மிண்டுரை (100 130 131 143 150 184 240), கத்துமொழி (331) அலவை (260), போழம் (45), நீர்மையில் உரைகள் (281) எனக் கடிந்து கனன்றுரைப்பார். தண்டு மிண்டு பேசும் அவர்களை மிண்டர் எனவும் கண்டனம் செய் வார் (42 53 100 112 130 133 143 150 240). பேசுவது சீலம் பேணுவன பிழைகளாதலின் பொய்யர் எனவும் இகழ்ந்துரைக்கிறார் (45 51 59 88 89 136 145 146 148 149 175 186 205 212 234 264 279 287 333), மன மொழி மெய்களால். தீயொழுக்கம் மேற்கொண்ட சாக்கியர்க்குத் தஞ்சமளிப்பாரும் நண்பினரும் வாய்ப்பதில்லை (82 189). எல்லோராலும் அவர் பேசுதற்கு ஆளாயினர் (154). அன்றியும் இறைவனை அலர் தூற்றிய இழிசினரும் அவரே (5 34 82 84 86 173 177 191 328). உள்ளம் உருகாதவர்(200) இறைவனைக் கைகூப்பி வாயாரப் பாடி வணங்காதவர் (42). இன்சொல் அறியாதவர் நஞ்சினும் கொடிய சொல்லினர் (58 196 241 257 273). இறைவனைப் புறம் பேசும் இயல்பினர் (1 10 14 32 39 40 47 84 88 107 125 175 193 262 359 381). இவர் பேச்சுக்கள் இம்மைக்கும் மறுமைக்கும் ஏதம் பயப்பன ஆதலின் துன்பாய கட்டுரைகள் (62 192 258) முடை நவின்றமொழி (249) முட்டைக் கட்டுரை (80) எனச் சுட்டப்பட்டன. நெறியலாதன கூறுவர் (252), நன்னெறி சொல்வார் சொல்லினும் சொல் லல கண்டீர் (204) புறச்சமயங்களை மிண்டு சமயம் (326) சலநெறியன (19) எனச் சாடுகிறார் சம்பந்தர். இவர்களுக்கு ஈசன் அருள் எங்ஙனம் கிட்டும். (106 270)

## பௌத்தம் பற்றிய குறிப்புக்கள்:

### 1. பௌத்த நூல்கள்:

சமண பௌத்தங்கள் தொன்றுதொட்டு நின்று நிலவும் சமயங்கள் என்பதைச் சம்பந்தர் ஒப்புக் கொள்கிறார். (35 244 218). ஆனால் பழமை காரணமாக அவற்றைப் பின்பற்றுதல் பிழையெனக் கண்டிக்கிறார் (35). பிடக நூல்களையும் அவற்றின் உரைகளையும் நான்கிடங்களில் குறிப்பிடுகிறார்.

1. தடுக்காலுடல் மறைப்பாரவர் தவர் சீவர மூடிப் பிடக்கேயுரை செய்வாரொடு பேணார்நமர் பெரியோர் (13)
2. விடக்கொருவர் நன்றென விடக்கொருவர் தீதென உடற்குடை களைந்தவர் உடம்பினை மறைக்கும் படக்கர்கள் பிடக்குரை படுத்துமையொர் பாகம் அடக்கினை புறம்பயம் அமர்ந்தவுர வோனே (166)
3. பீலியார் பெருமையும் பிடகர் நுண்மையும் (272)
4. கஞ்சி வாயினர் பிடகுரை (276)

பிடகம் என்ற பாலிச் சொல்லிற்கு ஏடுகளடங்கிய கூடை என்பது பொருள். புத்தரின் போதனைகளும் சாதனைகளும் விநய பிடகம், சுத்தபிடகம், அபிதம்ம பிடகம் என மூன்றாகத் தொகுக்கப் பெற்றன. இவை கி.மு. முதல் நூற்றாண்டில் இலங்கையரசன் வட்டகாமணியின் ஆதரவுபெற்ற தேரர்களால் இறுதி வடிவம் எய்தின. துறவற விதிகளும் பௌத்த சங்க நடைமுறைகளும் விரிவாகக் கூறும்விநயபிடகம், சுத்தவிபாங்கம், கண்டகம், பரிவாரம், பாதி மோக்கம் என்ற நான்கு பெரும்பிரிவின. உரையாடல் அடிப்படையில் புத்தரின் புனிதக் கொள்கைகள் உரைநடை, கதைகள், மூதுரைகள், கவிதைகள் எனப் பல இலக்கிய வடிவம் எய்தி இலங்கும் மிகப்பெரிய பிடகம் சூத்திர பிடகம் என்னும் சுத்தபிடகமாகும். இப்பிடகத்தில் காணப்படும் தீகநிகாயம், மஜ்ஜிமநிகாயம் சம்யுக்த நிகாயம், அங்குத்தர நிகாயம், குட்டக நிகாயம், என்ற ஐவகைப் பெரும்பிரிவுகளில் 38 நூல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. மூன்றாவதாகிய அபிதம்ம பிடகத்தில் தம்ம சங்கவி, விபங்கம், கதாவத்து, புக்கலபஞ்ஞதீதி, தாதுகதா, யமகம், பட்டானம் முதலிய ஏழு தொகை நூல்களும் தத்துவ விளக்கங்களைத் தாங்கி நிற்கின்றன.

இப்பிடகங்களுக்கு உரைவகுத்த புத்தசிகர், புத்ததத்தர், தம்மபாலர் அனைவரும் தமிழர்களே, புத்தகோஷர் கூட தமிழகத்திலும் இலங்கையிலும் வாழ்ந்தவரே. பிடகங்களுக்குத் தமிழிலும் சில உரைகள் இருந்தன என்பதை இந்த உரையாசிரியர்களின் குறிப்புக்களால் உணரமுடிகிறது. இவர்கள் கி.பி. 400—600 வரை விளங்கியவர்கள். பாலி பிடகங்களேயன்றிப் புதுப்புதுப் பிடகங்களையும் இடைக்காலப் பௌத்தர்கள் எழுதிக் கொண்டனர்.

### ஜாதகக்கதைகள் :

எம்மதமாயினும் தம் கொள்கைகளை விளக்கக் கதைகளையே கருவியாகக் கொண்டுள்ள உண்மையினை மறத்தற்கில்லை. பௌத்தக் கருத்துக்களை விளக்கும் ஜாதகக் கதைகள் சுத்தபிடகத்தில் உண்டு. அவையே காலப்போக்கில் புத்தகோஷர், வசுபந்து, தம்மபாலர் முதலியோர் கைவண்ணம் பெற்று விரிவடைந்துள்ளன. சம்பந்தர் ''நயமுக உரையினர் நகுவன சரிதைகள் செய்துழல்வார்'' (348) எனச் சாக்கியர்தம் சாதகக் கதைகளைக் குறித்துள்ளனர். பௌத்தத் தருக்கநூல்களையும் சாத்திர நூல்களையும்கூடக் குறிப்பிடுகிறார். (63) 118). வேதங்களை ஒத்தெனக்கூறுதல் போல் (110) பௌத்த நூல்களையும் ஒத்து (28 30) என்றே குறிப்பிடுகிறார். புறச்சமயத்தாரைப் பின்பற்றுதல் கானல் நீரை முகக்கக் குடங்கொண்டு போதல் போலாம். (118).

### அறுவகைத் தேரர் :

சம்பந்தர் குறிக்கும் அறுவகைத் தேரர் யாவர் என ஆராய்தல் வேண்டும். புறச்சமயம் ஆறு அகச்சமயம் ஆறு, தரிசனங்கள் ஆறு, அங்கங்கள் ஆறு, எனத் தொகை கொடுத்தல் போலத் தேரர்கள் கூறும் அகச் சமயங்களும் ஆறாகத் தேவார காலத்துச் திகழ்ந்தன. நுணுகி நோக்கின் பதினெட்டுப் பௌத்த நெறிகள் கூறப்படுகின்றன. ஈனயானம், மகாயானம் என்ற இரு பெரும் பிரிவில் இவை அடங்கும். இவ்விரண்டும் பௌத்தத்தின் தொகை; சம்பந்தர் குறிக்கும் அறுவகையும்; வகை; பதினெட்டெனல் விரி. புத்தர் போதித்தது ஒரே பௌத்தம்தான். காலப்போக்கில் தோன்றிய அறிஞர்களின் முத்திரையினைப் பதிக்கும் பாங்கில் பலவாகப் பௌத்தம் விரிவடைந்து விட்டது. ஞானசம்பந்தர் நல்கும் குறிப்புக்களின் துணைகொண்டே அவர்காலத்துப் பௌத்தப் பிரிவுகளை அறிய முற்படுவோம்.

(தொடரும்)

# செய்திச் சுருக்கம்

திருத்தணிகைச் சுப்பிரமணியசுவாமி கோயில்: 1973-ஆம் ஆண்டு சனவரி மாதம் 9-ஆம் தேதி அன்று இத் திருக்கோயில் சார்பில் நடைபெற்ற திருப்பணிகள் துவக்கவிழா, கண்ணொளி வழங்கும் விழா ஆகியவற்றில் நமது தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் திரு. கலைஞர் அவர்கள். ஆற்றிய சிறப்புரை: "இன்று இங்குக் கட்டி முடிக்கப்பட்ட தெய்வயானை திருமண மண்டபமும், சுமார் 1½ லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பயணியர் விடுதி மேல் பகுதியும் திறந்து வைக்கப்பட்டதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். நாங்கள் ஆண்டவனுக்கு விரோதிகள் என்று ஒரு சில அசூயைக்காரர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு நாங்கள் சொல்லிக்கொள்வதெல்லாம், நாங்கள் ஆண்டவனுக்கு விரோதிகளானால், இத்திருக்கோயில் வருமானம் 67—க்கு முன்பு பத்து லட்ச ரூபாயாக இருந்து, இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இத்திருக்கோயில் வருமானம் 22 லட்சமாக எப்படி உயர்ந்திருக்கிறது? இதைக்கொண்டு நாங்கள் ஆண்டவனுக்கு விரோதிகளா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். "நாம் ஆண்டவனை ஏற்றுக் கொள்ளுகிறோமா, நம்மை ஆண்டவன் ஏற்றுக் கொள்ளுகிறாரா?" என்பது தான் கேள்விக்குரியது. நாம் செய்கிற காரியம் ஏழை எளியவர்களுக்குத் தூய்மையோடு செய்தால் அது ஆண்டவனுக்குச் சேருகிறது. இதைத்தான் நமது அண்ணன், "ஒன்றே குலம், ஒருவனே தேவன்", என்று சொன்னார்கள். நான் இந்த ஊருக்குப் பலமுறை வந்திருக்கிறேன். ஆயினும் இத்திருக்கோயிலுக்குச் சென்றதில்லை. இதேபோலத்தான் பழனிக்கும் பலமுறை சென்றிருக்கிறேன். பழனிமலைக்குச் சென்றதில்லை. நான் பதவியேற்ற பிறகு இன்று முதன்முறையாகத் தணிகை மலைக் கோயிலுக்கும், ஒருமுறை பழனி மலைக்கும் சென்று, அங்குள்ள திருவுருவங்களைக் கண்டு களித்திருக்கிறேன்.

இன்று சுமார் 13,000 செலவில் யாத்திரீகர் விடுதி இணைப்புப் பாதைக் திறப்புவிழாவும் 15,000 செலவில் யாத்திரீகர் விடுதி அலுவலகத் திறப்பு விழாவும், ரூ 1,50,000/-செலவில் பதினறு அறைகளைக் கொண்ட தணிகை இல்லம் திறப்பு விழாவும், 40-000/—செலவில் தெய்வயானை திருமண மண்டபத் திறப்பு விழாவும் கட்டி முடிக்கப்பெற்றுத் திறந்து வைக்கப்பெற்றிருக்கிறது. மேலும் ரூ. 4,00,000 செலவில் தணிகேசன் திருமணக் கூடமும், 91.000/-செலவில் மாற்றுப்படிப் பாதையும், 1,60,000/-செலவில் குமரன் விடுதியும், 1,75 000/-செலவில் சரவணப்பொய்கை விடுதியும், 50.000/-செலவில் வள்ளி திருமண மண்டபமும், மலைப்பாதை இல்லங்கள் 15-க்கு ரூ. 4,50.000/-செலவில் கட்ட அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்று இருக்கிறது. இத்தகு சீரிய பணிகள் தமிழ்நாட்டுத் திருக்கோயில் நிதியிலிருந்து ஏழை எளியவர்களுக்குப் பயன்படும் வகையில், ஒத்துழைக்கின்ற அறங்காவலர்களையும் நிர்வாகத்துறையினரையும் மனமாரப்பாராட்டி மகிழ்ச்சியுற விழைகின்றேன்."

1973-ஆம் ஆண்டு சனவரி மாதம் 9-ஆம் தேதி இத்திருக்கோயில் சார்பில் நடைபெற்ற திருப்பணித் துவக்க விழா, மற்றும் கண்ணொளி வழங்கும் விழாவில், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பர் அவர்கள் தலைமை வகித்து ஆற்றிய சொற்பொழிவு: "தமிழ் நாட்டுத் திருக்கோயில் நிதியிலிருந்து சென்ற ஆண்டு, முதல்வர் அவர்கள் பிறந்தநாள் விழாவில் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு ரூ. 1.50,000/-நன்கொடை அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டு 10 திருக்கோயில்களில் அனதை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஏழைகளுக்குத் திருமணம் இலவசமாகத் திருக்கோயில்களில் நடத்தப்படவேண்டுமென்ற தமிழக அரசுத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 5000 திருமணங்கள் நடத்தத் திட்டமிட்டு இருக்கிறது. திருக்கோயில் நிதியிலிருந்து ஊமை செவிடர்களுக்கு இலவசமாகக் கல்வி போதனை அளிக்கவும், திருக்கோயில்களில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு, தமிழக முதல்வர் பிறந்த நாள் விழாவில் கண்ணொளி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு, இப்போது தணிகைத் திருக்கோயில் நிதியிலிருந்து ரூபாய் பத்தாயிரமும், 483 நபர்களுக்குக் கண்ணாடியும் இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன. மக்கள் பணியே மகேசன் பணியெனக்கருதி ஒத்துழைக்கின்ற அறங்காவலர்களையும், நிர்வாகஸ்தர்களையும் மனமாரப் பாராட்டுகிறேன்" என்று குறிப்பிட்டார்கள்.





திருமறைக்காடு வேதாரண்யேசுவரசுவாமி கோயிலில் நிகழ்ந்த திருமண மண்டபக் கால்கோள் விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்களும், கலந்துகொண்டு சிறப்பித்தல். (18-1-73)



கோடம்பாக்கம் வடபழநியாண்டவர் கோயிலில் நிகழ்ந்த பாவை விழாவில், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு கே. வீராசாமி, B.A., B.L., அவர்கள் திருமதி சௌந்தரகைலாசம் அம்மையார், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் B.A., B.L., I.A.S., அவர்கள், மற்றும் பல பெருமக்கள் கலந்து கொள்ளுதல். (12—1—73)



திருவானைக்கா சம்புகேசுவரர் அகிலாண்டேசுவரி கோயிலைச் சார்ந்த நீலகிரீசுவரர் திருக்கோயில் திருப்பணியை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் துவக்கி வைத்தல். (19—1—73)

# மதிப்புரைகள்

(1) ஆடத்தெரியாத கடவுள்: இந்நூல், சென்னை உயர்நீதி மன்ற நடுவர் மாட்சிமிகு திரு எஸ். மகராஜன், B.A..B.L., அவர்கள், அவ்வப்போது பல பத்திரிகைகளுக்கு எழுதியனவும் சென்னை புதுவை வானொலி நிலையங்களில் பேசியனவும் ஆகிய பல கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். இந்நூலாசிரியர், இரசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களின் 'வட்டத் தொட்டி' என்னும் தமிழன்பர் குழுவில் ஒருவராக விளங்கியவர். சொல்லின் செல்வர் டாக்டர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் நெருங்கிய தொடர்பும் உறவும் பெற்றவர். பல மொழிகளில் பயிற்சியும் புலமையும் வாய்ந்தவர். உலகப் பேரிலக்கியங்கள் பலவற்றை ஆழ்ந்து கற்றுணர்ந்தவர். ஒப்புயர்வற்ற சிறந்த பெரும் ரசிகர். அருங்கலை விநோதர். கம்பராமாயணம் திருமந்திரம் போன்ற தமிழிலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தமிழகத்தின் பல பகுதிகளிலும் அவற்றைக் குறித்து, அவ்வப்போது சிறந்த இனிய சொற்பொழிவுகள் பல ஆற்றி வருபவர். தமிழில் உள்ள பழம்பெரும் இலக்கியங்களில் மட்டுமேயன்றி, தற்காலத்துப் புதிய சிறந்த நூல்கள் கவிதைகள் முதலியவற்றிலும் அளவிலா ஆர்வம் கொண்டவர். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்று பாரதியார் பாடியபடி, ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் சில, இவரால் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யப்பெற்றுள்ளன. கம்பரின் கவிதைச் சுவை நலங்களை வெளிநாட்டவரும் எளிதில் உணர்ந்து போற்றும் வண்ணம், அண்மையில் இவர் ஆங்கிலத்தில் எழுதிய ஒரு நூல், சாகித்திய அகடமியின் மூலம் சிறப்புற வெளியிடப் பெற்றுள்ளது.

இத்தகைய சிறந்த பெருஞ்சான்றோராகிய நீதிபதி திரு எஸ். மகராஜன் அவர்கள், எழுதிய இருபது கட்டுரைகள் இந்நூலில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. கட்டுரைகள் அனைத்தும் எளிய இனிய அழகிய தமிழ் நடையில் அமைந்துள்ளன. "ஆடத்தெரியாத கடவுள்" என்னும் முதற்கட்டுரை, நீட்ஸ்கே என்னும் ஜெர்மன் தத்துவ ஞானியின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு, நடராச தத்துவத்தை நன்கினிது விளக்குகின்றது. தேவாரம் திருவாசகம் திருமந்திரம் திவ்வியப்பிரபந்தம் திருப்புகழ் திருவருட்பா பாரதியார்பாடல் தனிப்பாடல்கள் எனப் பலவற்றின் நுண்பொருள்களை விளக்கும் முறையில், கட்டுரைகள் மிகவும் அழகும் சுவையும் அமைந்து திகழ்கின்றன. தமிழன்பர்கள் அனைவரும் படித்துப் பயன்கொள்ளத் தகுந்த சிறந்த, இனிய நல்ல சுவைமிக்க நூல். விலை ரூபா 2. 75. கிடைக்குமிடம்: பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி-2., சென்னை மதுரை சேலம் கோவை.

(2) திருமந்திரம் திருச்சிராப்பள்ளி-புத்தூர்த் திருவள்ளுவர் நிலையம் திருக்குறள்வேள் செந்தமிழ்ப் புரவலர், திரு. ஜி. வரதராசபிள்ளை B. A அவர்களைச் சைவ உலகமும் தமிழ் உலகமும் நன்கினிது அறியும். அவர்கள் திருச்சி மாவட்டத்தில், சிறந்த சைவப் பெருங்குடியில் தோன்றியவர். தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க, ஒல்லும்வகை யெல்லாம் உயரிய அறச்செயல்கள் பல புரிந்து வருபவர். தமிழ்ப் புலவராகவும் புரவலராகவும் ஒருசேரத் திகழ்ந்து விளங்குபவர். சான்றாண்மை நலங்கள் பலவும் நிரம்பியவர். திருக்குறள் திருவாசகம் என்னும் இரு பெரும் நூல்களுக்கும், சிறந்த அரிய இனிய தெளிவுரை இயற்றிப் பல ஆண்டுகளுக்கு முன்னரே வெளியிட்டு இருப்பவர்.

செந்தமிழ்நலமும் சிவநலமும் செறிந்துயர்ந்த, சிறந்த இப்பெருந்தகையார், சைவத் திருமுறைகளுள், மிகவும் கடினமான மறைபொருள் அநுபவ நூலாகிய திருமந்திர நூலில் மிகவும் ஈடுபாடு கொண்டு, எளிதின் விளங்காத கடினம் மிக்க அந்நூற்பொருளை, எவ்வாற்றாலேனும் தமிழ் உலகுக்கு விளக்கி உதவுதல் வேண்டும் என்னும் குறிக்கோளுடன், அதனைப் பல்லாண்டுகளாக ஆராய்ந்து பயின்று, அதன் முதல் மூன்று தந்திரங்களுக்குரிய விளக்கவுரையினை முன்பே இயற்றி வெளியிட்டுள்ளார். இப்போது அதன் தொடர்ச்சியாக 4, 5, 6,-ஆம் தந்திரங்களுக்கு உரிய விளக்க உரை, இரண்டாம்பாகமாக வெளிவந்துள்ளது.

சைவப்பெருஞ் சான்றோர் திருவாரூர்ச் சிவயோகி திரு. மா. இரத்தினசபாபதி பிள்ளை அவர்களைக் குருவாகக் கொண்டு, பலகால் நெருங்கிப் பழகிப் பாடம்கேட்டு, "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் முறையில், ஒவ்வொரு பாடலுக்கும் நல்ல தெளிவான பொழிப்புரை எழுதப்பெற்றுள்ளது. அருஞ்சொற்களுக்கும், தொடர்களுக்கும் சிறந்த முறையில் விளக்கங்கள் தரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் எளிய இனிய சுருங்கிய முறையில் தெளிவான கருத்துரை, சாரமாகத் திரட்டித் தரப்பெற்றுள்ளது. பலவகை மந்திரங்களும், அவற்றின் பீஜ எழுத்துக்களும், சக்கரங்களும் ஆங்காங்கே தரப்பெற்றுள்ளன. திருவம்பலச் சக்கரம், ஏரொளிச் சக்கரம், சாம்பவிமண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக்கரி சக்கரம் முதலிய மந்திரச்சக்கரங்களைப் படங்கள் பல வரைந்து காட்டியிருப்பது, இவ்வுரையின் தனிபெருஞ் சிறப்பாகும். உரை குறிப்புரையாக இல்லாமல், போதிய அளவு விரிவான விளக்கவுரையாகச் சிறப்புற அமைந்திருக்கிறது. திருத்தமான சிறந்த அழகிய பதிப்பு. கிடைத்தற்கரிய அரும்பெரும் ஆராய்ச்சி நூல்! அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் அடையவும், பாதுகாத்துவைக்கவும் வேண்டிய நூல்! விலை ரூபா 10-00. கிடைக்குமிடம்: பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி—2, சென்னை மதுரை சேலம் கோவை.


(3) அமுதமொழியாயிரம்: இந்நூல், ஜகதாசார்ய சிம்மாசனாதிபதி, வாக்வாசஸ்பதி, மகாமகோபாத்தியாயர், பத்மவிபூஷண், மகாவித்வான், பிரதிவாதி பயங்கரம் திருமிகு அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள் இயற்றிய பல நூல்களிலிருந்து திரட்டித் தொகுக்கப் பெற்றது. "யாவதும் கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்" எனச் சங்க கால நல்லிசைப் புலவராகிய நக்கீரர் பெருமான் பாடியருளிய நிலையில், தலைசிறந்த ஒரு தனிப்பெரும் பேரறிஞராகவும் சான்றோராகவும், வைணவ சமய உலகில் தன்னிகரற்று விளங்கும் திருமிகு. அண்ணங்கராசாரிய சுவாமிகள் அவர்களின் அருமை பெருமைகளை அனைவரும் அறிவர். அப்பெருந்தகையார், எண்பதாண்டின் மிக்க இளைஞராக, இன்றும் அயராது ஆற்றிவரும் அரும்பெரும் தொண்டுகள் அளப்பில. பல நூற்றுக்கணக்கான நூல்களை, அப்பேரறிஞர் பெருந்தகை இயற்றி வெளியிட்டு இருப்பதை யாவரும் அறிவர்,

வேதம் வேதாந்தம் இதிகாசம் புராணம் திவ்வியப்பிரபந்தம் வியாக்கியானம் சமயதத்துவம் தமிழ்க்காவியம் வடமொழி தென்மொழி இலக்கண இலக்கியச்செய்திகள் சமயவாதவிவாதப் பொருள்கள் எனப் பலதுறைகளில், அவர்தம் நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றிலிருந்து சுவைமிக்க பயனுள்ள பகுதிகள் சிலவற்றைத் திரட்டித் தொகுத்து, சென்னை "ஃப்ரீ இந்தியா" பத்திரிகையின் ஆசிரியர் திரு. தே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இந்நூலை வெளியிட்டுள்ளார்கள். இது, முதல் ஐந்நூறு அமுதமொழிகளைக் கொண்டதாய், 271 பக்கங்களில் இயன்றுள்ளது. இது போன்று, மற்றும் பலபகுதிகள் விரைவில் வெளிவரும் எனத் தெரிகின்றது. பாற்கடலைக்கடைந்து அமுதத்தை வருவித்தது போல, இவ்வைணவப் பெருஞ் சான்றோரின் நூற்கடலைக் கடைந்து "அமுதமொழியாயிரம்" என்னும் நூலின் முதற்பகுதி தொகுத்து வெளியிடப்பெற்றிருப்பது, பெரிதும் போற்றுதற்குரிய செயல் ஆகும். வைணவர்களுக்கும், பக்தர்களுக்கும், சமய ஆர்வலர்களுக்கும், பெரிதும் பயன்படக்கூடிய சிறந்த நல்லநூல். விலை ரூபா 5. 00. கிடைக்குமிடம் :கிரந்தமாலா அலுவலகம், சின்னகாஞ்சிபுரம், காஞ்சிபுரம்—3.

(4) திருக்குறள் துலக்கும் ஒழுக்கநெறி: காஞ்சிபுரம், பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக முன்பு விளங்கியவரும், இப்போது திருவாவடுதுறை ஆதீனப் புலவராகத் திகழ்பவரும் ஆகிய "சித்தாந்தக் கலைச்செல்வர்" திரு க வச்சிரவேல்முதலியார், பி.ஏ. எல்.டி., அவர்களைச் சைவத் தமிழ் உலகம் நன்கு அறியும். இவர் தமிழ் ஆங்கிலம் வடமொழி என்னும் மும்மொழிகளிலும், நல்ல சிறந்த புலமையுடையவர். திருப்பாதிரிப்புலியூர் சிவத்திரு. ஞானியார் அடிகள் போன்ற, பல செந்தமிழ்ச் சிவநெறிப் பெருஞ் சான்றோர்களின் நெருங்கிய தொடர்பும், சிறந்த பாராட்டுதல்களும் பெற்றவர். மேலும், நம் தமிழ், நாட்டிற்கே சிறப்பாக உரிய சைவ சித்தாந்தம் என்னும் தனிப்பெரும் தத்துவக் கொள்கையை, நுண்ணிதிற் கற்று ஆராய்ந்துணர்ந்த சிறந்த அறிஞர் பெருமக்களுள் ஒருவராகத் திகழ்பவர். காசி அலகாபாத்

பல்கலைக் கழகங்களிலும், இலங்கை யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும், சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் பல, இவரால் நிகழ்த்தப்பெற்றிருக்கின்றன. அண்மையில் இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில், "சொல்லின் செல்வர் டாக்டர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா நினைவு' அறக்கட்டளையின் சார்பில் நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகள், "திருக்குறள் துலக்கும் ஒழுக்க நெறி" என்னும் தலைப்புடைய இந்நூலாக வெளிவருகின்றன. திருக்குறளின் முப்பாலில் நாற்பால் அடங்கியுள்ளமை, அறத்தின் பொது இயல்பு, அறத்தின் தலைமையும் சிறப்பும், ஒழுக்கத்தின் விழுப்பமும் முதன்மையும், ஒழுககத்தின் பயன்கள், ஒழுக்கத்தின்வகை நான்கு, மெய்யுணர்வின் நிமித்தம், திருவள்ளுவர் கூறிய சீர்திருத்தங்கள், திருவள்ளுவர் அறங்களைச்சொல்லுமுறை, கடவுள் வாழ்த்தும் மெய்யுணர்தலும், அறத்துப்பாலின் பிழிவு, இறைவனது உண்மை, இறைவழிபாடு, உலகநுகர்ச்சியும் பேரின்ப நுகர்ச்சியும், ஊழும் முயற்சியும் முதலிய பல தலைப்புகளில், இந்நூல் சிறப்புற அமைந்திருக்கின்றது. திருக்குறளின் சொற்பொருட் கருத்துக்களைச் சைவசித்தாந்த ஆசிரியர்கள், தமது நூல்களில் எவ்வகையில் போற்றிப் பொருள் கொண்டுள்ளனர் என்பது, இந்நூலில் சிறப்புற விளக்கப்பெற்றுள்ளது. ஆசிரியரின் பரந்துவிரிந்த நூற்புலமையும், நுண்மாண் நுழைபுலமும், திட்பநுட்பம் அமையக் கருத்துக்களைச் சுவைகெழுமவிளக்கும் திறனும், பெரிதும் போற்றற் பாலனவாக உள்ளன. இஃது ஒரு சிறந்த நல்ல பயன்மிக்க ஆராய்ச்சி நூல்! விலை ரூபா : 2. 50.

கிடைக்குமிடம் : திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., 22. அனந்தோஜி பண்டிதர் தெரு, பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம்.



திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயிலில், மாலைப் பூசை அறக்கட்டளைத் துவக்க விழா முதலிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்த அருட்டிரு சுவாமி இராமதாசர், தவத் திரு. குன்றக்குடி அடிகளார், M. L. C., சுற்றுலா அமைச்சர் மாண்புமிகு திரு. கே. இராசாராம், உயர்நீதிமன்ற நீதிபதி திருமிகு. கோகுலகிருஷ்ணன் முதலியவர்கள்.

# சிவபூசை

'சைவப்பெருஞ்சான்ரோர்' 'சிவயோகி'

**திரு. மா. இரத்தினசபாபதி பிள்ளை அவர்கள்**

திருவாரூர்

சிவத்தை வழிபட்டு உய்யவேண்டும் என்பது ஆகமவாதிகளுக்கும் வேதாந்தபக்ஷத்தினருக்கும் சம்மதமான கருத்தேயாகும். அனுதம் முறையில் இருவரும் வேறுவேறு கருத்துகொண்டு பூசை முறையை மாற்றிக் கொண்டுள்ளனர். அவரவர் கொள்கை சரி யென்றே அவரவர் வாதம் செய்து சாதிக்க முயல்கின்றனர். இம்முறையில் இங்கு நமது பழம்பெரும் ஞானாசிரியர்களான திருமூலர் மணிவாசகர் ஆகியோர் எம்முறையில் விளக்கங்கொண்டு அவரவர் நூல்களில் கூறியுள்ளார்கள் என்பதை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆகமவாதிகள் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் இரவி மதி ஆன்மா என்ற எட்டு உருவிலும் பொருந்தியுள்ள சிவத்தை ஒரு குறியில் பகதன் அணுகும் சாத்தியமான முறையில் மூர்த்தியைப் பாவித்து ஆவாகனம் பூ தீபம் தூபம் நீர் நைவேத்தியம் கொண்டு பூசிக்கும் முறையில் முத்தி கிட்டும் என்று புறப்பூசையை அடிப்படையாக்கி அத்துடன் அகப்பூசையும் சேர்த்து நீண்டநாள் பாவனையில் பழக்கமே இயல்பாக மாறிச் சுத்தமாயை பிரகாசம் அடைந்து ஞானம்பெற்று விளங்குவர் என்று கூறினர். அதனுல் ஆகமம் உரு அருவான சதாசிவ வழிபாட்டினைக் காட்டித் தேக அடிப்படையில் தொடக்கம் காட்டி விளக்கிற்று. பிரகிருதிமாயை மிசிரமாயை என்பவைகளை (24.7) முப்பத்தொரு தத்துவங்களாக்கிச் சுத்தமாயை சிவதத்துவத்தில் அடக்கி விளக்கியது விஞ்ஞான மயகோசமும், ஆனந்தமய கோசமும் சுத்த மாயையின் காரியம். இம்முறையில் சிவம் பாவிக்கப்படுவதாக உள்ளது.

இதை விட்டலக்கணை என்ற நியாயத்தால் வேதாந்த நூல்கள் கூறும் அதாவது கங்கை கோஷிக்கிறது என்றபோது, கங்கைக் கரையில் உள்ள ஊரில் இரைச்சல் உள்ளது. கங்கையில் இரைச்சல் இல்லை என்பது யூகத்தால் அறியத்தக்கது. பாவனையில் மனதின் சங்கற்பத்தை அகற்ற முடியாது. அகண்ட சிவத்தை விட்ட லக்கணையால் வழிபடுபவர், உண்மையான அகண்டத்தை அறியமாட்டார்கள்.

எப்படியும் சதாசிவமே பொருள்என் ருலும்
இலங்கிய சாயுச்சியத்துக் கேதுவன்றி
அப்படியை அன்றி யர்ச்சனை புறத்தி லாகுல்
அணுகாது சாயுச் சியம்; அனைத்
தினையுங் கடந்து
செப்பரிய மனவாக்குக்கு எட்டாத ஒன்றைத்
திகழ் கிரியையால எட்டிச் சேரலாமோ ?
தப்பரிய இந்நெறியில் நின்ருற் பேறு
சாலோக சாமீப சாருபங் காணே. (1)

நெறிஎல்லாம் சைவ நெறிபோல நின்று
நிலைமை மூவுருவும் ஒக்கும் என்னக் கொண்டு
பிறிவறவே அநச்சிக்கை முத்தி யென்று
பேசியிடும் இவ்வசுத்த சைவனே உனக்குக்
குறிகொள் முத்தியிடம் பிரமலோகமோ திருமால்
குலவிய வைகுண்டமோ கயிலை மலைதானே
பிறிவிலை தான்மூன்றி டத்தும்போயிருந்து வருமோ
பிணக்கமாய் வீடுங்கணக்கிற்
பெறுவதில்லை காணே. (2)

—தத்துவப் பிரகாசம்.

வேதாந்த பக்ஷத்தினர் சித்தென்பது தேகத்திற்குச் சாக்ஷி. சித்தே சத்தாகவும் ஆனந்தமாயும் உள்ளது. அதுவே பிரமத்தின் நிலை என்று முடிவுகட்டி, என்ருே ஒருநாள் தேகம் அழிய வேண்டியதுதானே என்று தேகத்தை ஒதுக்கிப் பிரமத்தைப் பற்றிக் கொண்டனர். இதைவிடாதலக்கணை என்பர். குந்தம் புறப்பட்டது என்ருல், குந்தத்தை உடையவன் புறப்பட்டான். அவன் குந்தத்தோடு புறப்பட்டான் என்று குந்தம் உடையவனையும்

Q2m24, N59TK N73.15
148707

சேர்த்துக் கொள்ளுகிறது. குந்தம் குதிரைக்கும் பெயர் வேலுக்கும் பெயர். அது குதிரையின் மீதேறிக் குதிரை வீரன் புறப்பட்டான் என்ற பொருள் தொனித்துக் கொண்டுள்ளது. வேலாயுதத்துடன் வீரன் புறப்பட்டான் என்று பொருள். இவர்கள் தேகத்தை விட்டுச் சீவனைப் பற்றி நிற்பவர்கள். இம்முறையில் நிர்விகல்ப சமாதி கிட்டி நெடுநாள் சமாதியும் கைகூடலாம். ஆகமநெறி பற்றியவர் சவிகற்ப சமாதி பெறுவர். இவ்விருவகை நெறியும் சத்துவ குணம் பற்றியவைகள் தான் எனினும் மீண்டும் பிறவிக்கே வருவர் என்று சுத்த சாதகத்தில் குமாரதேவர் முடித்தார்.

சவிகற்ப நிருவிகற்ப நிட்டை யதுஞ்
சத்துவ குணத்தில் வந்தது வாம்
இவிகற்பம் நீங்கி வருடமா யிரம் அங்
கிருந் திடினும் விழிக்கும்
செவிதனி லடையுஞ் சகசநிட்டை யதே
திருவருள் தன்னில் வந்தது வாம்
தவிருதல் கூடலின்றியே யங்குத்
தங்கி நின்றிடு நின்றபடியே

—குமாரதேவர் சுத்தசாதகன்

சகச நிட்டையைப் பற்றி அறிவதே திருவருளுடன் பொருந்தி நிற்கும் அருள்நெறியாகும். அருள்நெறி வேதாந்த பக்ஷத்தில் பிரமவாதிகளால் அனுபவிக்கப்படுவதில்லை. சைவாகமநெறியில் பந்தமறும் தந்திரம் விளக்கப்பட்டு முத்திக்குச் சாதனம் சதாசிவத்தைக் காட்டினர்.

சுத்சவித்தையை அதிட்டித்து நடத்துவது சிவசத்தியேயாகும். இந்த சுத்தவித்தையின் காரியமாய் தொழிற்படுத்துபவர் சதாசிவன் மகேசன் உருத்திரன் விஷ்ணு பிரமனுகும். காரணம் விந்துநாதமயமாக உள்ளதில் சிவசக்தியின் ஆற்றல் நிலைபெற்றுள்ளது. காரியமயமான தேகத்தையும் காரணமயமான விந்து நாதங்களையும் இணைத்து நிற்பது சீவனுகும். சீவன் தன் உண்மையை அறியாதபோது தேகமே தானென்று இருந்தது, தன்னுண்மையை அறிந்து மாறுவதில் தேகமும் மாறவேண்டும். தேகியும் மாறவேண்டும். அதனுல் இவ்வித்தைக்குச் சுத்தவித்தை என்றனர். சைவசமயத்தினர் அதை ஒரு தத்துவமாக்கிச் சிவதத்துவத்திற்கு முதல் தத்துவம் ஆக்கினர்;

வித்தையோ டீசர் சாதாக்கியஞ்
சத்தி சிவங்கள் ஐந்தும்
சுத்ததத்துவஞ் சிவன்றன் சுதந்திர
வடிவமாகும்
நித்தமென்று ரைப்பர்காலம் நீங்கிய
நிலைமையாலே
வைத்திலர் முற்பிற்பாடு வருவித்தார்
கருமத்தாலே

—சிவஞானசித்தியார்

தடுப்பரும் அந்தச் சதாசிவ முதல்வர்
கிடைத்திடு பஞ்ச கிருத்தியம் திருவுளத்து
அடைத்து விருப்புறும் அவதரம் தனிலே
ஐவகைத் தொழிலாய் அமைவுறு சக்தி
மெய்வரு சுத்த வித்தை ஆகும்
இத்தகை வைத்திடு சுத்த வித்தை
தத்துவம் அலசிவ சக்தி எனத்தகும்

—சதாசிவ ரூபம்.

ஆத்மாவினுடைய சிவதத்துவத்தில் சுத்தவித்தை மகேசுவரம் சதாசிவர் விந்துநாதம் என்று ஐந்து தத்துவங்கள் உள்ளன. விந்து தத்துவத்தை சக்தியும் நாததத்துவத்தைச் சிவமும் அதிட்டித்து நிற்கும். சதாசிவர் பஞ்ச கிருத்தியம் செய்யும் அவதரத்தில் கீழ்முகங் கொண்ட விந்துநாதத்தில் ஐவரும் தொழிற்படுகின்றனர். இதை அபரவிந்து வென்றும், சிவசத்தியாகத் தொழிற்படுவதை பரவிந்து வென்றும் பிரித்து விளக்கினர். பரவிந்துவின் ஆற்றலில்தான் பந்தமும் பந்தமறுகையும் உள்ளது. தத்துவங்கள் நீங்கின ஆன்மாவுக்கு ஆதாரம் சிவசத்தி ஆதாரமாய் உள்ளது. அதனுல் சுத்தவித்தையின் இரு வேறுநிலைகளும் அதோமுக மாயையாகவும் ஊர்த்துவ முகங்கொண்டதாயும் உள்ளது. இதைத் திருவாசகம் தோத்திர முறையில் வைத்து விளக்கிறு, திருமூலர் திருமந்திரத்தில் சாத்திரமுறையில் வைத்து விளக்கியுள்ளார். இவ்விதமான இரு நிலைகளில் சீவன் விளங்குவதை பசுவிலக்கணம் (பிராணன்), புருடன் சிவன் பசு போதன் என்று பதினெட்டு திருமந்திரங்களில் திருமந்திரத்தில் விளக்கியுள்ளார்.

உன்னும் அளவில் உணரும் ஒருவனை
பன்னும் மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இணையா விளக்கினை
அன்னமயன் என்ற றிந்து கொண்டேனே

(இ-ள்) மனிதன் எண்ணுவதையும் பேசுவதையும் ஏனைய உயிரினங்களைவிடச் சிறப்பாகப் பெற்றவன். எண்ணும்போது அறிவின் காரியமாயும் பேசும்பொழுது தொழிலின் காரியமாகவும் பிரிகிறது. பேசும்போது சுத்த வித்தை வாக்கு ரூபமாகப் பிராணனின் ஒரு அம்சமான உதானனுடன் பொருந்தி சத்தமாக வெளி வருகிறது. பக்தன் பலத்த ஓசையை எழுப்பி ஆடிப்பாடித் தோத்திரம் செய்கிறான். ஞானி சித்தனை செய்கிறான். அடிப்படை எண்ணமாயினும் செயல் இருவிதமாக உள்ளது. அதன்பயனும் இருவிதமாகும். பக்தன் வைகரியாதிவாக்கால் சுத்தவித்தை தூண்டப்பட்டு தேகத்தில் உணர்ச்சிகளை உண்டாக்கிப் பிராண மயகோசம் அதிர்வை அடைந்து சோர்ந்துபோய்த் தன்னுடைய ஆவேச நிலையில் தெய்வீகக் காட்சிகளையோ விரும்பிய உருவத்தையோ காண்கிறான் சகல நிலைக்குத் திரும்பினபோது ஒரு இன்ப உருவாகவும் சோர்ந்தவனாகவும் காணப் படுவான். ஞானி சிந்திப்பதில் உதானனே சிரசையடைந்து மத்திமை பைசந்தி சூக்குமையான வாக்குகளை உதிப்பிக்கிறது. சூக்குமை வாக்கு சோதிவடிவானது, ஸ்பந்த ரூபமானது. இதில் திளைப்பதால் அதோமுகமாயையின் காரியமான ஆன்ம தத்துவம் 24-ம், வித்தியா தத்துவம் 7-ம் கீழ்ப்படுத்தப்பட்டு, சிவம் விளங்கும் சிவதத்துவம் விழிப்புறுகிறது. உருவத்தை வழிபட்டவன் சாதாக்கிய தத்துவம் வரையில் சென்று விரும்பிய மகேசுவர வடிவத்தைப்பெற்று இன்பம் அனுபவித்நுச் சுவர்க்காதி பதவிகளிலிருந்து மீளவும் பூமிக்கு புண்ணியத்திற்கேற்பப் பிறவியெடுப்பன். அகண்ட சிவத்தை அறிந்து வழிபட்டவன் எவ்வுருவும் தாங்காதவாறு வீடுபேற்றை அடைவன்.

இம்மந்திரத்தில் எவ்விதமான பிரிப்பும் (பக்தி நெறியையும் ஞான நெறியையும்) கூறாமல், வேதங்கள் பன்னிப் பன்னிப் புகழும் மேலான இறைவனை, நினைத்த மாத்திரத்தில் கருத்தில் அறியப்படுபவனை, என்னுள்ளேயிருந்து கொண்டு குறைவற்று எப்போதும் எனக்கு விளங்கிக் கொண்டுள்ளவனை, அன்னமயமான தேகத்தில் உள்ளவன் என்று அறிந்து கொண்டேனே என்றார்.

அன்னம் இரண்டுள ஆற்றங் கரையினில்
துன்னி யிரண்டுந் துணைப்பிரியா தன்னந்
தன்னிலை யன்னந் தனியொன்ற
தென்றக்கால்
பின்னை மடவன்னம் பேறணு காதே. 2006

(இ—ள்) அன்னம் என்ற சொல் வடமொழி அம்சம் என்றதின் தமிழாகும். அம்சம் என்பதை உயிருக்குக் கூறுவர். உயிர் என்பதும் சீவன் என்பதும் ஒன்றேதான். சீவன் சிவ வெள்ளம் என்ற ஆற்றங்கரையின் மேலிருந்து கொண்டு கீழ் நடப்பவைகளைச் சாட்சியாகப் பார்த்துக் கொண்டுள்ளது. மற்றொன்று என்ற புருடன் கீழுள்ள விவகாரத்தில் ஈடுபட்டுள்ளது. மேலேயுள்ள அன்னம் நன்மையாகட்டும். தீமையாகட்டும் கீழுள்ள அன்னத்துடன் போகட்டும். நாம் அதனின் வேறு என்று தனது அறியாமையால் நினைவு கொண்டு தன்னை வேறாகக் கண்டு தேகத்தைவிட்டு நீங்கும் நிர்விகல்ப சமாதியை அடைந்தால் அது சிவப்பேற்றை அடைந்ததாகாது. இது வேதாந்தம் கூறும் விடாதலக்கணையின் பொருளாகும்.

**விளக்கம் :**

தேகத்துடன் பற்றுக் கொண்டு அதோமாயையால் செலுத்தப்படுவது புருட தத்துவமாகும். அதோமாயை பிரேரகமாய் சீவனின் இச்சையைத்தூண்டித் தொழிற்படுத்துகின்றது. தேகத்தைத் தூண்டாது தேகப்பற்றைவிட்டால் சீவன் நிர்விகல்ப சமாதியைப் பெறும். ஆயிரம் வருடம் சமாதி பொருந்தினாலும் புருடதத்துவம் சீவனுக்கு ஏற்ப மாற்றப் படாமையினால் மீண்டும பிறவிக்கு வந்தபோது பழைய வாசனையுடன் கூடிய புருடதத்துவத்தில் இணைக்கப்பட்டுத் தேகத்துக்குள்ள நன்மை தீமையை அநுபவிக்க வேண்டியதாகி விடும். அதனால் "தன்னிலையன்னம் தனி என்றக் கால் பின்னமட வன்னம் பேறணு காதே" என்று அறுதியிட்டுக்கூறினார்.

வைகரி யாதியும் மாயா மலாதியும்
பொய்கரி யான புருடாதி பேதமும்
மெய்கரி ஞானங் கிரியா விசேடத்துச்
செய்கரி யீசன் அருளி செய்ததே 2007

(இ-ள்)வைகரிமத்திமை பைசந்தி சூக்குமை என்ற வக்கு நிலைகளும், மாயையைப் பற்றுக் கோடாகக் கொண்ட தேகத்தின் பல நிலைகளைக் கொண்ட புருடன், கலை காலம் நியதி

வித்தை மாயை அராகம் என்பவைகளும் கிரியையின் விசேடத்தால் அநுபவ ஞானம் பெற்றுத் தன்னை அறியுமாறு ஆன்மாக்களுக்கு அநாதியே அமைத்த நியதியாகும்.

**விளக்கம் :**

கிரியையில் உபயோகப்படுத்தப்படுவது மந்திர ரூபமான வைகரி வாக்காகும். வைகரியைத் திரும்பத்திரும்பச் சொல்லுவதில் அதன் சூக்கும நிலைகளான பைசந்தி, சூக்குமை மூளையில் பதிவுறுகின்றன. இவ்விதம் சிந்தனையில்லாது சொல்லினும் வைகரி சூக்குமப் பதிவை மூளையில் அமைத்துவிடுகிறது. புறத்தொழில் அற்று அகவுணர்வில் எண்ணும்போது அதுவே ஞானமயமாய் சீவனை விழிக்கச் செய்யும். சீவன் ஒளியுடன் நாதமயமானபடியால் அது மெய்கரி ஞானமாக அநுபவிக்கப்படுகிறது. அதனால் கிரியையையும் அதன் சாட்சியான ஞானவிசேடத்தையும் ஈசுவரன் அமைத்துள்ளார்.

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்டு
அணுவில் அணுவை அணுக வல்லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலு மாமே 2008

(இ—ள்) இம்மந்திரம் மகா நுட்பமானது சாமானியர்க்கு விளக்குவதும் கடினமான விஷயமாகும். அணு என்ற சொல் மிக நுண்ணிய அணுத்திரளுக்கும், உயிர்க்கும் பெயர். அதுவே ஆன்மாவுக்கும் பெயர். இங்கு ஆன்மா சீவன் புருடன் என்னவென்பதை முதலில் அறியவேண்டும். ஆன்மா நீர்க்குமிழி போன்று நீரிலே வேறானதாய்த் தன்னுள் ஒரு ஆகாயக்கூறை அடக்கிக் கொண்டு நீரின் வேறாகக் காணப்படுகிறது. அந்த நீர்க்குமிழியின் மேல் பரப்பு ஒரு எல்லையை வைத்துக் கொண்டது. குமிழி, உடையும் வரையில் நீரின் வேறாகவும் உடைந்தபிறகு நீரினுடன் ஒன்றாகவும் ஆகக் கூடியது. அதுபோல் சிருஷ்டிக்கு வரும் ஆன்மா தனது கேவல நிலையிருந்து சகல நிலைக்கு வரும்போது ஒரு பேதமற்ற ஆகாயமே, மகா சூக்குமமாய் பூதாகாயம் குணரகித ஆகாயம் மகாசூரியாகாயம் சித்தாகாயம் என ஐந்து பகுப்புக்களுடன் பிரிந்து கொள்ளுகிறது. சூரியாகாயம் என்பது தேசசுடன் கூடிய ஒளிக்கிரணங்களுடன் கூடியது. சித் என்றால் அறிவுக்குப் பெயர். ஆன்மாவின் அறிவு கீழ் முகங் கொண்டு செலுத்தப்படுவதில் பிரேரக காண்டம் என்ற சிவ தத்துவம் முதலில் உருவாகிறது. அது ஆகாயமயமாய் மனிதவுடலைக் கீழ்மேல் பக்கம் உள் என்று சூழ்ந்துள்ளது. உருவம் பற்றிருந்த ஆன்மாவை உருவத்துடன் இணைக்கவும், கர்மநியதியை நிர்வாகம் செய்யும் முறையில் உருவதேவர்களுடன் இணைக்கப்படுகிறது. அதனால் தேவ மண்டலமும், எவ்வுருவும் இல்லாது அறிவுருவமான தேவவர்க்கமும், உருவத்துடன் கூடிய தேவவர்க்கமும் என இரண்டாகி விடுகிறது. உருவ நிலைக்கு மேலும் தூலத்துடன் இணைக்கப்படும் போது ஐம்பூத நாயகர்களும் பல தேவர்களும் வியட்டி நிலையில் மனிதனின் புருட தத்துவத்தில் இணைக்கப்படுகின்றனர்.

புருடன், தேகத்தில் ஐம்பூத மயமான இன்ப துன்பத்தில் உழலுபவன். சீவன் தேகமற்றவனாய்த்தேகத்தினுள்ளும்புறம்பும் ஆகாயக் கூறாய் புருடனைப் பிரேரிப்பன். சீவன் தேகத்தை விட்டுத்தன்னை வேறாகக்கண்டபோது உருவமும் அருவமும் பொருந்திய சதாசிவரது ஆட்சிக் குள்ளாகிறான். அருவச் சதாசிவரை உணர்ந்த போது (ஈசான முகத்தை உணர்ந்தபோது) சிவமாகிறான். ஐந்து பிரிவான ஆகாயக் கூறில் ஈசான முகத்திலிருந்து பிறவி நீக்கம் பெறும் என்பதற்கு,

அண்டங்கள் ஒரேழும் அம்பொற் பதியாகப்
பண்டையா காசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினிற் சத்திதிரு அம்பல மாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே
2749

ஆகாய மயமான சீவனில் வானவர்களும், மாறு செய்யும் சதாசிவமும் உள்ளது.

நானென நீயென வேறில்லை நண்ணுதல்
ஊனென வூனுயிர் என்ன வுடனின்று
வானென வானவர் நின்று மனிதர்கள்
தேனென இன்பந் திளைக்கின்ற வாறே

உயிரின் விருப்பத்திற்கேற்பவும் கர்மத்திற்கேற்பவும் சீவ மண்டலத்தில் ஆகாய அணுக்களைப் பொருத்தும் நியதி சதாசிவரிடமும், அமைப்பது மஹேசுவரரிடமும் உள்ளது. அதைத் தேகக்கூறில் அமைப்பது விஷ்ணுவினிடமும் பிரமனிடமும் உள்ளது. லயம் செய்வது சிவத்தினிடம் உள்ள நிலை தேகதர்மத்தில் உருத்திரனிடம் உள்ளது.

பயில் உருத்திரனைப் பரசிவன் எனலும்
அயனை மகேசன் எனலும் அரிதனை
இயலும் சதாசிவன் எனலுமாம் இவர்
இதமுறும் மாயை இலய போகம்
அதிகாரம் செய்யும் அவரென மொழிப

—சதாசிவரூபம்

இந்த அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டு இம்மந்திரப் பொருளுக்கு வருவோம்,

ஆதிப்பிரான் என்ற சிவம், ஆன்மாவின் எல்லையான அண்டாகாயத்திற்கு மேலும் உள்ளும் விரவியுள்ளது. ஆன்மாவின் விருப்பம் உலகமயமான போது கர்ம நியதிக்கு உள்ளான சீவ தர்மத்தில் இணைக்கப்பட்டுப் பிறகு தூலமான புருட தர்மத்துடன் சேர்க்கப் படுகிறது. ஆன்மாவின இச்சை உலகமய மாயில்லாது சிவ நோக்காகில் சீவனின் ஆகாய அணுக்கள் மேல் நோக்கிய சலனம் கொண்டு புருட தர்மத்தினின்றும் பிரிந்துவிடுகிறது.

புருடன் விளங்கும் பஞ்ச பூதமயமான ஆகாயத்தைக் காட்டிலும், சீவன் விளங்கும் ஆகாயக்கூறுகள் மிக நுண்ணியவைகளாகும். அவைகளைவிட சிவசக்தி விளங்கும் ஆகாயக் கூறுகள் மகா நுண்ணியவை ஆகும். பூதாகாயக் கூறு ஒன்றாகக் கொண்டால் சிவம் விளங்கும் ஆகாயக்கூறு ஆயிரத்தில் ஒரு பகுதியாகக் கொண்டு ஆன்மாவில் மகாசூக்கும வடிவில் எங்கும் கலந்துள்ள சிவத்தை அறிந்து அணுக வல்லார் ஆன்மாவுக்கு ஆன்மாவான பரமான் மாவை அடைதல் கூடும். இப்பகுதியை மணி வாசகர் கூறும் முறையில் அறியக் கீழே கொடுக் கப்படுகிறது.

ஆராயுமிடத்து மனிதனின் அண்டாகாயத் தில் உள்ள பரமாணுக்கள் உண்டாகும் விதத்தை அளத்தற்கரிதாகிய தன்மையும் வளமான பெருங்காட்சியும் ஒன்றுக்கொன்று தொடர்ந்து நிற்கின்ற அழகைச் சொல்லு மிடத்து, நூற்று ஒரு கோடியின் மேலாகும் இங்கு நரம்பின் கோடி (இறுதிமுனை)யைக் குறிக் கும். நூறு நாடிகள் கீழ் நோக்கியும், ஒரு நாடி ஊர்த்துவ முகங்கொண்டும் விளங்குகிலது. அவை வீட்டில் நுழைகின்ற சூரிய கிரணத்தில் நெருங்கிய அணுக்களை நிகர்க்கச் சிறியன வாகும்படி பெரியவனுயிருப்பவன். இவ்வகை யானபரமாணுவின் ஊடே இருந்து சிறியவை களிலும் சிறிய அணு வடிவில் யாவற்றிலும் கலந்து விளங்குபவன்.

அவனுடைய பெருநிலையைப் பின்னர் விளக்குகிறார். பிரமனையும் அவனுடைய கூட் டத்தையும், திருமாலையும் அவனுடைய கூட் டத்தையும் உலகத்தினது உற்பத்தியும் நிலை பேறும் ஆகியவற்றை இறுதியடையச் செய்த மிகப் பெரிய ஊழித் தலைவனான உருத்திரனை யும், அவ்வுருத்திரனைக் கடந்த நிலையையும், மீளத் தோன்றுமாறு சிருட்டிநிலை பெறுதலும் பெரிதாகவும் சிறிதாகவும் வீசுகின்ற சூறைக் காற்றாகிய வீசும் வளியில் அகப்பட்ட பொருள் போலச் சுழலச் செய்கின்ற அழகன்.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்: தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து
எறியது வளிபிற்
கொட்கப் பெயர்க்கும் குழகன்

மிகப் புராதனமாகிய கடோப நிஷத்தும் இதையே கூறுகிறது.

"ஆத்மா அணுவுக்கும் அணுவாய் மகத்துக்கும் மகத்தாய் இருக்கிறது. ஆத்மா உயிருள்ள ஒவ்வொரு சீவனுக்கும் அதன் இதயத்தில் (மத்தியில்) அமர்ந்திருக்கிறது. ஆசைகளிலிருந்து விடுபட்டு மனதும் இந்திரி யங்களும் அடங்கியவன் ஆத்மாவின் மகிமை யை அறிந்து சோகத்திலிருந்து விடுபடுகிறான்" என்பது கடோபநிதக் கருத்து.

(தொடரும்)

# காஞ்சியில் திருமால் கோயில்கள்

மகாவித்வான், பத்ம விபூஷண்

திருமிகு. பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்

''காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார் மேனியருளாளர் கச்சிக் கொவ்வா'' என்றும், ''முத்தி தரும் நகரேழில் முக்கியமாங் கச்சி'' என்றும் ஆன்றோரால் புகழப்பெற்ற காஞ்சிபுரத்தில் விளங்கும் விஷ்ணு ஆலயங்களைப் பற்றிச் சுருக்கமாக ஈண்டு எழுதப்படுகிறது. சின்ன காஞ்சிபுரத்திலும் பெரிய காஞ்சிபுரத்திலும் சேர்ந்து பதினெட்டு விஷ்ணு க்ஷேத்திரங்கள் விளங்குவதாகப் பிரசித்தியுள்ளது. ஆனால் ஆழ்வார்களின் பாடல்பெற்ற தலங்கள் பதினான்கே யென்றும், மற்றைய நான்கும் புராண தலங்களே யென்றும் பெரியோர் கூறுவர். அந்த நான்கு தலங்களைப் பற்றி முடிவில் தெரிவிக்கப்படும். ஆழ்வார் பாடல் பெற்றவை பதினான்கு தலங்கள்: அவை யாவன;

1. திருக்கச்சி அத்திகிரி
2. திருவெஃகா
3. அட்டபுயகரம்
4. வேளுக்கை
5. திருத்தண்கா
6. ஊரகம்
7. நீரகம்
8. காரகம்
9. கார்வானம்
10. பரமேச்சுவர விண்ணகரம்
11. பவளவண்ணம்
12. நிலாத் திங்கள் துண்டம்
13. கள்வனூர்
14. பாடகம்;


(1) திருக்கச்சி அத்திகிரி: தேவப் பெருமாள் சன்னிதி என்றும், வரதராஜசுவாமி கோயில் என்றும் வழங்கப்பெறுவது இத்தலமே யாகும். அருளாளன், பேரருளாளன், வரதன், வரதராசர், தேவராசர், பெருந்தேவி மணவாளன் என்றிங்ஙனே பல திருநாமங்கள் கொண்டவர் இத்தலத்தெம்பெருமான். நான்முகக் கடவுள் திருமாலை நேரிற்கண்டு மகிழ ஆவல் கொண்டு புஷ்கர க்ஷேத்திரத்தில் தவம் புரிய, அங்கே தீர்த்த ரூபியாகக் காட்சி தர அதில் திருப்தி பெறாமல் மீண்டும் நைமிசாரணியத்தில் தவம் புரிய, அங்கே அரண்ய ரூபியாகக் காட்சிதர, சங்கும் சக்கரமும் சிரித்த முகமுமான நிச ரூபத்தையே காண விரும்பி, 'சத்ய விரத க்ஷேத்திரத்திலே அயமேத வேள்வி புரிந்து காணப்பெறுக' என்னும் ஆகாயவாணியைப் பெற்று அங்ஙனமே அசுவமேத யாகம் நிகழ்த்திப் புண்ணியகோடி விமானத்தோடு ஓமத் தீயினின்றும் தேவப் பெருமாள் வெளிப்பட்டுத் தோன்றிக் கிரேதயுகம் முதலாகக் காட்சி தந்தருள்வதாகப் புராண வரலாறு. பூதத்தாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடின தலம்.

வடமொழியில் காஞ்சி என்று பெயர்; அது தென்மொழியில் கச்சி எனத் திரிந்தது. தலபுராண சுலோகத்தின்படி, பிரமன் ஆராதித்தவிடம் என்பதே வடமொழிப் பெயர்க்கும் தென்மொழிப் பெயர்க்கும் பொருளாதலால், ஆழ்வார் பாசுரங்களில், கச்சியென வரும் இடங்களெல்லாம் தேவப்பெருமாள் எழுந்தருளி இருக்கும் திருப்பதிக்கே மங்களாசாசனம் என்று கொள்ளக் குறையில்லை. ஆசாரியர்களில் ஆளவந்தார் ஒரு முத்தக சுலோகமும் திருக்கச்சி நம்பிகள் எட்டு சுலோகமும், கூரத்தாழ்வான் நூறு சுலோகமும், வேதாந்த தேசிகர் ஐம்பது சுலோகமும் அருளிச்செய்து இப்பெருமானை வாழ்த்தினர்.

2. திருவெஃகா: இத்தலத்து எம்பெருமானுக்கு வேகா சேது என்று வடமொழித் திருநாமம். வேகவதிக்கு அணையாய்க் கிடந்தவர் என்பது அதன் பொருள். வேகாசேது என்னும் பதத்தின் ஏகதேசமாகிய வேகா என்பது

வெ:கா என்றாயிற்று. 'வெ:கணை' என்கிற திருப்பெயருமுள்ளது. முந்தின தலத்து எம்பெருமானாகிய தேவப் பெருமாளை நேரிற் காண விரும்பிய பிரமன் அசுவமேத யாகம் தொடங்கியபோழ்து, ஒரு காரண விசேடத்தினால் தன் மனைவியான சரசுவதியைத் துணைகொள்ளாமலே வேள்வி புரிய நேர்ந்தது. அப்போது அசுரர்களின் தூண்டுதலால் சரசுவதியானவள் வேகவதி என்னும் நதி வடிவமெடுத்துப்பெருகி வந்து வேள்விக்கு இடையூறுவிளைக்கத் தேடின வளவிலே, பிரமனுடையவும் மற்றும் அமரர் முனிவர் முதலானோருடையவும் வேண்டுகோளுக்கு இரங்கி, எம்பெருமான் பேரருள் கொண்டு "சதுர்முகனார் வேள்விதனைச் சதிர்கெடுக்கச் செறிந்தோடுங் கதியுடைய வேகவதிக்கு அணையாக வந்து உதித்தோய்" என்றும், "அணியான வேகவதி அலையோடு கொண்டோடி யாலிக்க அணையாக் கிடந்த பெருமாள்" என்றும் போற்றுமாறு குறுக்கே சயனிக்க, சரசுவதி நாணமுற்று அந்தர் வாகினியாய்த் தரைக்குள் மறைந்து சென்று விட்டாள் என்று புராணங் கூறும். இப்பெருமானுக்கு வட மொழியில் யதோக்தகாரி என்றும், தென் மொழியில் சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள் என்றும் திருநாமம் வழங்கும். இத் தலத்தின் வடபுறத்திலுள்ள திருப்பொய்கையிலே, தாமரை மலரில், பொய்கையாழ்வார் திருவவதாரம் செய்தருளினர். திருமழிசையாழ்வார் இத்திருப்பதியில் சில பல ஆண்டுகள் எழுந்தருளியிருந்து இப்பெருமானுடைய பரம சௌலப்பிய குணத்தைக் கணி கண்ணனென்னும் சீடனோடுங்கூட அனுபவித்த வரலாறு குருபரம்பரைப் பிரபாவம் முதலிய நூல்களில் மிகப் பிரசித்தம். வேதாந்த தேசிகர் இத்தலத்து எம்பெருமானைப் பத்து சுலோகங்கள் கொண்ட வேகா சேது துதியினால் தோத்தரித்தனர். மணவாள மாமுனிகள் துறவுநிலை கொள்வதற்கு முன்பு இல்லற நிலையில் ஓர்ஆண்டு இத்தலத்தில் எழுந்தருளியிருந்து ஸ்ரீ பாஷ்யப் பிரவசனம் செய்தருளினர். அதனால் இத்திருப்பதியில் மட்டும் மாமுனிகளின் திருக்கோலம் ஞான முத்திரையோடு திகழும். பொய்கையார் பேயார் திருமழிசைப்பிரான் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய ஐவர் பாடல் பெற்ற தலம் இது.

3. அட்டபுயகரம்: எட்டுத் திருக்கரங்களிலும் எட்டு ஆயுதங்களை ஏந்தியுள்ளதனால் அட்டபுயன் என்று சுவாமிக்குத் திருநாமம், அவன் எழுந்தருளியிருக்கும் இடம் அட்டபுய அகரம்; அ:து அட்டபுயகரம் என மருவிற்று. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் அட்ட



திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயிலின் மாலைப்பூசை அறக்கட்டளை விழாவில், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.,B.L., I.A.S. அவர்கள் உரையாற்றுதல். அறங்காவலர் திரு. மணிவண்ணன் அவர்களும், அருட்டிரு சுவாமி இராமதாசர் அவர்களும் உடனுள்ளனர்.


புயங்கம் என்னூர் பிள்ளைப்பெருமாளையங்கார். பேயாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடின தலம்.

4. வேளுக்கை: அட்டபுய சன்னிதிக்கும் தீபப்பிரகாச சன்னிதிக்கும் இடையில் விளங்கும் இத்தலம். சிங்கப்பெருமாள் கோயிலென்றும், அழகியசிங்கர் சன்னிதி என்றும் இத்தலத்திற்குப் பிரசித்தி. காமாசிகா என்று தல புராணத் திருநாமம். வேளுக்கை என்று ஆழ்வார் பாடல். 'வேள் இருக்கை' என்னும் இரண்டு சொற்கள் கூடி வேளுக்கை என மருவிற்று. வேள்—காமம்; அதாவது இச்சை; அதனால் எழுந்தருளியிருக்கும் இடம் வேளிருக்கை. காமாசிகா என்னும் வடமொழிப் பெயர்க்கும் இதுவே பொருள்.

5. திருத்தண்கா: இது தீபப் பிரகாசர் சன்னிதியென்றும், விளக்கொளி கோயில் என்றும் வழங்கப்பெறும். ஆழ்வார் பாடலில் திருத்தண்கா என்று உள்ளது. குளிர்ந்த சோலை என்பது இதன் இதன் பொருள். இத்தலத்திற்கு வேதாந்த ஆசிரியர் இட்டருளின சரணாகதி தீபிகை என்னும் துதியில் தண்கா என்னுந் திருநாமமே இமோபவனம் என்றும் சிசிரோபவனம் என்றும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. ஆசிரியரின் திருவவதாரம் இத்திருப்பதியின் பரிசரத்திலே யாயிற்று. இஃதே இத்தலத்திற்குத் தன்னேற்றம். திருமங்கை யாழ்வார் ஒருவருடைய பாடலேயுள்ளது.

6. ஊரகம், 7. நீரகம், 8. காரகம், 9. கார்வானம்:

இந்நான்கு திவ்விய தேசங்களும் உலகளந்த பெருமாள் சன்னிதி என்கிற ஒரு தலத்திலேயே காட்சி தருவன. உரகம் என்னும் வடசொல் ஊரகம் என நீண்டது. உரகம் என்று ஆதிசேடனுக்கு வடமொழிப் பெயர். ஆதிசேட ரூபியான எம்பெருமானும் இங்கே மகா வரப்பிரசாதியாகச் சேவை சாதித்து அருள்வதால் ஊரகத்தான் சன்னிதியென்றே இத்தலம் வழங்கப்பெறும். இப்பெருமாள் மட்டும் மூவர் பாடல் பெற்றவர்; பேயார் திருமழிசைப் பிரான், திருமங்கையாழ்வார். நீரகம் காரகம் கார்வானம் என்றும் இம்மூன்று தலங்களையும் திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் "நீரகத்தாய்....உலக மேத்துங் காரகத்தாய்: கார்வானத்துள்ளாய்" என்று ஒரே பாசுரத்திற்பாடியுள்ளார்.



திருவேற்காடு தேவிகருமாரியம்மன் கோயிலின், மாலைப்பூசை அறக்கட்டளை விழாவில், நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் உரை நிகழ்த்துதல்.

10. பரமேச்சுர விண்ணகரம்: வைகுண்டப் பெருமாள் சன்னிதி யென்று வழங்கப்பெறும் இத்தலம். திருமங்கையாழ்வார் ஒருவரே பதிகம் பாடினர். காஞ்சிபுரத்தில் பதிகம் பாடப்பெற்ற தலங்கள் இரண்டே. இத்தலமும் திருவட்ட புயகரமும்.

11. பவளவண்ணம் 12. நிலாத்திங்கள் துண்டம் 14. கள்வனூர்:

இம்மூன்று தலங்களையும் திருமங்கையாழ்வார் ஒருவரே திருநெடுந் தாண்டகத்தில் பாடினர். அதில் "பவளவண்ணு நீரகத் தாய்......நிலாத் திங்கள் துண்டத்தாய்—கள்வா:" என்று குறித்துள்ளார். நிலாத் திங்கள் துண்டப்பெருமாள் ஏகாம்பரநாதர் சன்னிதியிலும், கள்ளப்பெருமாள் காமாட்சியம்மன் சன்னிதியிலும் காட்சி தருகின்றனர்,

"உள்ளுவாருள்ளத்தாய்" என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்தைக் கொண்டு உள்ளுவாருள்ளம் என்கிற திருத்தலமும் உண்டென்பர், சிலர். ஆனுல் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் இத்தலத்திற்குப் பாசுரம் பாடவில்லையாதலால், கைகூப்பி நிற்கிறேம்.

14. திருப்பாடகம்: பாண்டவ தூதர் சன்னிதி. வீற்றிருந்த திருக்கோலத்தில் இவ்வளவு திருவளர்த்தியான திருமூர்த்தி எங்கும் இல்லை. பாடு—அகம், பாடகம்; பாடு என்பது பெருமை. பெருமை தோற்ற எழுந்தருளியிருக்கும் தலம் என்று பொருள். ஸ்ரீகிருஷ்ணபகவான் பாண்டவ தூதனுய்த் துரியோதன சபைக்கு எழுந்தருளின காலத்தில் அவன் செய்த சூழ்ச்சிக்கு விசுவரூபம் எடுத்த வரலாறு மகாபாரதப் பிரசித்தம். திருமங்கையாழ்வார் அவ்வரலாற்றினைப் பெரிய திருமொழியில் (9—1—8) "அரவு நீள் கொடியோன் அவையு ளாசனத்தை அஞ்சிடாதேயிட, அதற்குப் பெரிய மாமேனி அண்ட மூடுருவப் பெருந்திசையடங்கிட நிமிர்ந்தோன்" என்கிற பாசுரத்தினுற் பாடியுள்ளார். இத்தலம் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரான், திருமங்கையார் என்னும் நான்கு ஆழ்வார்களின் படல்பெற்றது.

ஆக இப்பதினுன்கு திவ்விய தேசங்களும் ஆழ்வார் பாடல் பெற்றவை. முகுந்தப் பெருமாள், நரசிங்கப்பெருமாள், உள்ளுவாருள்ளத்தான், பச்சைவண்ணர் இந்நால்வரின் தலங்கள் புராண வரலாறு பெற்றவை.



திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயிலில், சுற்றுலா அமைச்சர் மாண்புமிகு திரு. கே. இராசாராம் B. A., அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

# ஆடத் தெரியாத கடவுள்

மாட்சிமிகு. திரு. எஸ். மகராஜன் அவர்கள், B.A., B.L.

சென்னை உயர்நீதிமன்ற நடுவர்

புண் பட்ட நெஞ்சுக்குச் சிரிப்பைப் போல இதமான மருந்து வேறு கிடையாது. உலக வாழ்க்கையிலிருக்கும் ஏற்றத்தாழ்வுகள், இன்ப துன்பங்கள், பித்தலாட்டங்கள் இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டு, சிரிக்கத் தெரியாமலும் நாம் இருந்தோமேயானுல், என்ன ஆகும் நம் கதி? பைத்தியம்பிடித்துவிடும். பைத்தியத்திலிருந்து தடுப்பதற்காகவே நமக்குச் சிரிப்பு என்ற தெய்விக சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது.

'நகல்வல்லர் அல்லார்க்கிம் மாஇரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்''

என்று சொன்னுர் குறளாசிரியர். சிரிக்கத் தெரியாதவனுக்குப் பட்டப்பகலும் அமாவாசை இருட்டகத் தானிருக்கும் என்பது இந்தக் குறளின் பொருள். தெளிவில்லாத காரணத்தால் சிரிப்பற்று இருக்கிருேம். உள்ளத்தில் தெளிவு வந்துவிட்டாலோ, வாழ்க்கையே ஒரு சிரிப்பாணியாக இருக்கும். ('' The world is a comedy to those who think and a tragedy to those who feel'') என்று ஒரு அறிஞர் சொன்ஞர்; அதாவது. சிந்தனைத்தெளிவுள்ளவனுக்கு இந்த உலகம் ஒரு ஹாஸ்ய நாடகமாகத் தோன்றுகிறது; உணர்ச்சி வசப்பட்டவனுக்கு இந்த உலகம் சோக நாடகமாகக் காட்சி கொடுக்கிறது என்று சொன்ஞர்.

மிருக வர்க்கங்களிலே சிரிக்கும் ஆற்றலைப் பெற்ற பிராணி. மனிதன் ஒருவன் தான். ஆனுல். இந்த அரிய ஆற்றலை மனிதனுக்குப் பயன்படுத்தத் தெரியவில்லையே என்று ஆற்ருமைப்படுகிருர் வள்ளுவர். அணுகுண்டுக்கில்லாத சக்தி சிரிப்புக்கு இருக்கிறது என்பதை ஒரு புராணக்கதை விளக்குகிறது. திரிபுரத்தில் அட்டகாசம் செய்துகொண்டிருந்த அரக்கர்களைச். சிவபெருமான் அழித்தார். எப்படி அழித்தார்?. ஹைட்ரஜன் குண்டு போட்டல்ல ஒரு சிரிப்பு சிரித்தார். அவ்வளவுதான், தீமையே வடிவாக வந்த அரக்கர்கள் தீய்ந்து ஒழிந்தார்கள்.

''சீரார் மேவும் சிவனே—சிரிப்பன்றே
நேரார்ஊர் அட்ட நிலை''

என்று பாடினுர் கவிஞர்.

சிரிப்பு புற இருளை மாத்திரமல்ல, அக இருளையும் அகற்றி, துன்பத்தைத் துடைத்து இன்பத்தை நல்குகிறது. விவேகானந்தரிடத்திலே சிஷ்யையாக இருந்தார் நிவேதிதா என்ற ஆங்கிலப்பெண்; நற்குணங்கள் நிறைந்த பெண். இருந்தாலும், எப்போதும் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டே இருப்பார் நிவேதிதா. அவரைப் பார்த்து விவேகானந்தர் சொன்ஞர்: ''அம்மா, நீ ஆனந்தமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; கலகலப்பாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் நீ விரும்பும் ஜீவன் முக்தி உனக்குக் கிடைக்கும்'' என்று. இந்த அறிவுரையை வலியுறுத்துவதற்காக ஒரு சுவையான கதையையும் சொன்ஞர்.

ஒரு காலத்திலே, நாரதர் வானுலகத்தை விட்டுப் பூமியில் இறங்கி, ஒரு அடர்ந்த காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்தார். நடுக்காட்டிலே ஒரு ரிஷி தலைகீழாக நின்று தவம் செய்து கொண்டிருந்தார். இந்தக் காட்சியைக் கண்டதும் நாரதருடைய நண்பர், ''நாரதரே, இந்த ரிஷிக்கு எப்போது சீவன் முக்தி கிடைக்கும்''? என்று கேட்டார். உடனே நாரதர், ''இவனுக்கு இன்னும் மூன்று பிறவிகளுக்குப் பின்னர் முக்தி கிடைக்கும்'' என்று சொன்ஞர். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ரிஷி 'ஓ' என்று அலறினுர். ''ஐயோ, இன்னும் மூன்று பிறவிகளா? என்னுல் பொறுக்க முடியாது'' என்று

கதறினர். ரிஷியைத் தாண்டிச் சென்றார். நாரதர். நூறடிக்கு அப்பால் ஒரு இடையன், மாமரத்தடியில் உல்லாசமாக ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். "இவனுக்கு எப்போது சீவன் முக்தி?" என்று நாரதரைக் கேட்டார் அவர் நண்பர். நாரதர் சொன்னார்; "இந்த மா மரத்தில் எத்தனை இலைகள் உண்டோ? அத்தனை பிறவிகளுக்குப் பின் இவனுக்கு முக்தி கிடைக்கும்" என்றார். இதைக்கேட்ட இடையனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. "எனக்குக் கூடவா சீவன் முக்தி கிடைக்கப் போகிறது!" என்று சொல்லிக்கொண்டே ஒரு ஆட்டம் ஆடினான் அவன். அந்தக் கணத்திலேயே அவனுக்குச் சீவன்முக்தி கிடைத்துவிட்டது.

ஆனந்தமில்லாத வாழ்க்கை பயனற்ற வாழ்க்கை. ஆனந்தமில்லாத சமயம் பயனற்ற சமயம். ஆகவே நீட்ஸ்கே என்ற ஜெர்மன் தத்துவ ஞானி சொன்னார்: " How can I believe in a god who would not dance?" என்று. அதாவது, "ஆடத்தெரியாத கடவுளை நான் நம்பத் தயாரில்லை", என்று சொன்னார்.

நீட்ஸ்கே காலத்திலுள்ள ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் சிலுவையின் உட்பொருளாகிய தியாகத்தை மறந்து, புறப்பொருளாகிய துன்பத்தைப் பாராட்டி, அல்லற்படுவதே வாழ்க்கையின் நோக்கம் என்று தவருகக் கருதிவந்தார்கள். இக்கருத்தின் விளைவாக ஐரோப்பிய சமுதாயத்தில் துன்ப உணர்ச்சி பரவியது.

"இறைவன் இன்ப வடிவானவன், துன்ப வடிவானவன் அல்ல," என்பதை வற்புறுத்துவதற்காகவே, நம் முன்னோர்கள் அவனை ஆடல் வல்லான் என்றும், ஆடல் அரசன் என்றும் போற்றி வணங்கினார்கள்; நடராச தத்துவமே ஆனந்த தத்துவம் என்பதை உணர்ந்து அனுபவித்தார்கள்.

"ஆடவல்லார் நெறி ஆட அறிகிலேன்
பாட வல்லார் நெறி பாட அறிகிலேன்"

என்று சொன்னார் திருமூலரும்.

ஆனந்தம் மேலிடும்போது, மயில் தன் தோகையை விரித்து ஆடுகிறது. நடனமே ஆனந்தத்தின் பரிபூரண வெளியீடு. அப்படியானல், இன்ப வடிவான இறைவன் ஆடிக் கொண்டு தானே இருக்கவேண்டும். ஆடும் தன்மை அவனுக்கு இல்லையென்றால், அவனுக்கு ஆனந்தம் இல்லை என்றாகிவிடும். ஆனந்தம் இல்லையென்றால், அவனைக் கடவுள் என்று எவ்வாறு ஒப்புக்கொள்வது: ஆகவே தான், "ஆடத் தெரியாத கடவுளை நான் நம்பத் தயாரில்லை" என்று சொன்னார் நீட்ஸ்கே. ★



சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், திருப்பதி திரு. வேங்கடரமணசுவாமி கோயிலில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள். உடனிருப்போர் திரு. வி. செல்லத்துரை, எம். எல். ஏ. அறங்காவலர் திரு. எஸ். பெருமாள் ரெட்டியார் ஆகியோர்.

The following are the particulars regarding the ownership of "THIRUKKOIL" the monthly newspaper published, as called for, by Rule 8 of the Registration of Newspapers (central) Rules. 1956

FORM IV
(See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | ... | Nungambakkam, Madras - 34. |
| 2. Periodicity of Publication | ... | Monthly. |
| 3. Printer's Name | ... | Thiru. S. Sivaprakasam, Sivarts Printers - Painters. 119, Strahans Road, Madras-12. |
| Nationality | ... | Indian. |
| Address | ... | 119, Strahans Road, Madras-12. |
| 4. Publisher's Name | ... | Thiru. K. S. Narasimhan, B.A.B.L., I.A.S., Commissioner, H.R. & C.E. (Admn.) Dept. Madrs-34 |
| Nationality | ... | Indian. |
| Address | ... | Nungambakkam, Madras-34. |
| 5. Editor's Name | ... | N. R. Murugavell, M.A., M.O.L. Editor, H.R. & C.E. (A) Dept. Madras-34 |
| Nationality | ... | Indian. |
| Address | ... | Nungambakkam, Madras-34. |
| 6. Name and Addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital | ... | Thiru. K. S. Narasimhan, B.A.B.L., I.A.S. Commissioner, H.R. & C.E. (Admn.) Department, Madras—34. |

I, K. S. Narasimhan, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

Dated : 20—2—73.
Madras—34.

Sd/—K.S. NARASIMHAN,
Publisher.


# சமய இலக்கிய நூல் வெளியீடுகள்

(ஒரு சிறு குறிப்பு)

தமிழக அரசின் அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் நடைபெற்றுவரும், நமது திருக்கோயில் திங்கள் இதழில், இப்போது கிடைத்தற் கரியனவாய் உள்ளனவும், பழமையும் பெருமையும் இலக்கியச்சிறப்பும் மிக்கனவாகிய, நல்ல பல சமய இலக்கியங்களைப் பகுதி பகுதியாகத் தொடர்ந்து வெளியிட்டு வருவது சமய ஆர்வலர்களுக்கும், தமிழ் இலக்கிய அன்பர்களுக்கும், பெரிதும் பயன்படுவதாக இருக்கும் என்னும் கருத்தில், தொடர்ந்து பல சமய இலக்கியங்கள் பகுதி பகுதியாக வெளியிடப்பெற விருக்கின்றன. அந்நிலையில் முதற்கண் "பட்சி தீர்த்தம்'' என இந்திய நாடு முழுவதும் புகழ்பெற்றுத் திகழும் திருக்கழுக்குன்றம் என்னும் தொண்டைநாட்டுச் சிவதலம் பற்றி, அந்தகக்கவி வீரராகவர் எனனும் அரும்பெறற் கவிஞர் பெருமான் இயற்றியருளிய திருக்கழுக்குன்றத் தலபுராணம், மூலமும் உரையுமாக, இத்திங்கள் முதல் வெளியிடப் பெறுகின்றது. இதன் உரைப்பகுதி, சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டில் மிகவும் புகழ்பெற்றுத் தலைசிறந்து விளங்கியிருந்த மகாவித்துவான் காஞ்சிபுரம் திரு. சபாபதி முதலியார் அவர்களின் உரையைப் பெரிதும் தழுவியும், மூலச் செய்யுட்களின் சீர்கள் சந்திகள் முதலியவை பிரித்தும் வெளியிடப்பெறுகின்றன. திருக்கழுக்குன்றத் தலத்தில் எழுந்தருளியுள்ள வேதாசலப் பெருமான் ஆகிய, மறைமலை அண்ணலின் திருவருளால், இச்சமய இலக்கியப் பகுதியின் வெளியீடு நன்கினிது அமைந்து, அன்பர்கள் அனைவருக்கும் நல்ல பயன்களை நல்குவதாகுக! இதனை அடுத்து அரிசமய தீபம், இருசமய விளக்கம் முதலிய சிறந்த பல நூல்கள் வெளிவரும்.

—ஆசிரியர்

---



# திருக்கழுக்குன்றத் தலபுராணம்

## அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றியது

(மூலமும் உரையும்)

### காப்பு

(விநாயகர் துதி)

வாழத்தான் அனத்தான், மகவான், கடல்
ஆழத்தான நத்தான் அரு மாதவர்
சூழத்தான். நனத் தானச் சுரர். தொழும்
வேழத்து ஆனனத்தான பதம், மேற்கொள்வாம்

**பொழிப்புரை :** அன்ன ஊர்தியை உடைய பிரமதேவனும், தேவேந்திரனும். கடலின் ஆழத்தில் தோன்றுகின்ற சங்கை ஏந்திய திருமாலும், அரிய தவமுனிவர்களும், தெளிவுள்ள சுவர்க்க உலகத்தில் இருக்கின்ற தேவர்களும் சூழ்ந்து ஒருங்கேதிரண்டு, தாங்கள் வாழ்வதன் பொருட்டுத் தொழுது பணிகின்ற, யானையின்முகமுள்ள விநாயகருடைய திருவடிகளை, நாம் நம்முடைய சென்னியினும் சிந்தையினும் மேற் கொண்டு வணங்கி உய்வோமாக!

**குறிப்புரை:** அனத்தான்—பிரமதேவன்; மகவான்—தேவேந்திரன்; நத்து—சங்கு: நத்தான்—சங்கை ஏந்திய திருமால். நனத்தானம் — விழிப்பு நிலை; தேவர்கள் இமையாநாட்டம் உடையவர்களாத லின் 'நனத்தானச் சுரர்' என்றார். வேழம் — யானை; ஆனனம் — முகம். வாழத்தான் — வாழ் வதன் பொருட்டு. (1)

### (வாழ்த்து)

வையகம் விளைக, யாண்டும் மதியின் மும்மாரி பெய்க,
செய்யதண் டகநன் னாடும், சிவன்கழுக் குன்றும் வாழ்க;
மெய்யகம் வளர்க, சைவவெண் ணீறு சிறகக. வேள்விக்
கையணி தழைக்க, செங்கோற் காவலும் மலிக, மன்னே!

**பொழிப்புரை :** இவ்வுலகமெங்கும்பயிர்கள் செழுமையுடன் விளைவனவாக; மாதந்தோறும் மூன்று முறை மழைபெய்வதாக; செம்மைவாய்ந்த நல்லதண்டகநாடும், சிவபிரான் உறைகின்ற திருக்கழுக் குன்றம் என்னும் தலமும் வாழ்வனவாக; உள்ளத்தில் உண்மையுடைய அன்பர்கள் வளர்ச்சியுறுக; வெண்ணிறமுள்ள திருநீறு சிறப்பு அடைக. உலகநலம் கருதிச் செய்யப்படும் வேள்விச் சடங்குகள் பெருகுக; செங்கோல் செலுத்தும் அரசனின் ஆட்சி நிலைபெற்று விளங்குவதாக.

**குறிப்புரை :** வையகம்—உலகம். யாண்டும்—எங்கும். மதி—மாதம். மாரி—மழை. தண்டக நாடு —தண்டகன் என்னும் அரசன் ஆட்சி செய்த தொண்டைநாடு. மலிக—நிலைபெறுக. (2)

### பாயிரம்

(வேதகிரீசர் துதி)

சீர்பூத்த உருவகைநான்கு, அருவகைநான்கு, இருவகையின் செயற்கை ஒன்றாய்,
ஏர்பூத்த நவப்பொருட்கும முதற்பொருளாம் ஒருபொருள்வந்து, எம்மைக் காப்பான்
வேர்பூத்த கிளைகிளைத்து மெய்ஞ்ஞான மணமபொதுளி. வெளிநின் றோங்கும்
சூர்பூத்த ஓதம்அலை வேதமலைக் கொழுந்தை, முடி சூடிக் கொள்வாம்

பொழிப்புரை: சிறப்புப் பொருந்திய அயன் மால் உருத்திரன் மகேசுவரன் என்னும் உருவவகை நான்காகியும், விந்து நாதம் சத்தி சிவம் என்னும் அருவவகை நான்காகியும், சதாசிவம் என்னும் அருவுருவவகை ஒன்ருகியும் விளங்கும் ஒன்பது பொருளுக்கும், முதற்பொருளாகிய ஒரு பொருள் வந்து தோன்றி, நம்மைக் காப்பதற்காக, வேர்பூத்த கிளைகள் கிளைத்து, மெய்ஞ்ஞானமாகிய மணம் நிறைந்து, வானத்தில் நின்ரேங்கிய தெய்வத்தன்மை பொருந்திய கங்கை வெள்ளம் அலைத்து ஓடும்படியான "வேதமலைக்கொழுந்து" எனத் திகழும் வேதகிரீசர் திருவடிகளை, நமமுடைய முடியின்மேல் தரித்துக் கொள்வோம்.

குறிப்புரை: வேதங்களே மலையாக அமைந்து விளங்கச் சிவபெருமான் அதன் உச்சியில் எழுந்தருளி விளங்குதலின், அவரை "வேதமலைக்கொழுந்து" என்ருர். வேதகிரீசருக்கு மலைக்கொழுந்து என்பது ஒருபெயர். வேதம் பல சாகைகளை உடையதாதலின், "வேர்பூத்த கிளைகிளைத்து" என்றும், அது மலையாக உயர்ந்தோங்கி விளங்குதலின் "வெளிநின்று ஓங்கும்" என்றும் சிறப்பித்தார். ஓதம் — வெள்ளப்பெருக்கு. சூர்பூத்த — அச்சத்தைத் தருகின்ற. வேதமலை மிகவும் வானளாவி உயர்ந்தோங்கி நிற்றலின், மிகவேகமாகக் கண்டார் அஞ்சும்படி பெருகிவரும் தேவ கங்கையாற்றின் அலைகள், அதன்கண் பாய்ந்து ஓடுகின்றன என்பார் "சூர்பூத்த ஓதம் அலை வேதமலை" என்ருர். (3)

(மலைச் சொக்க நாயகி துதி)

பஞ்சொக்க நெகிழ்ந்து, அன்னப் பரிசொக்க நடக்கும்அடிப், பசும் துழாயோன்
துஞ்சொக்க விளங்குஉதரத் தூசொக்க மிலைந்தமுலைச், சுடர்ப்பூந் திங்கட்
பிஞ்சொக்க வயங்குநுதற் பிரசொக்க மொழியும்மொழிப், பேரண் டம்சூழ்
மஞ்சொக்க வளர்அளக மலைச்சொக்க நாயகியை வணக்கம் செய்வாம்

பொழிப்புரை: செம்பஞ்சுக்கு ஒப்பாக மென்மைத்தன்மை பொருந்தி, அன்னப்பறவையின் நடையை ஒத்து நடக்கும் திருவடியையும், பசுமை நிறமுள்ள துளசிமாலையை அணிந்த திருமால் அறிதுயில் அமர்ந்திருக்கும் ஆலிலைபோன்ற வயிற்றினையும், மேலாடை பொருந்தும்படி அணிந்துள்ள திருத்தன பாரங்களையும், ஒளி மிகுந்து பொலிகின்ற இளம்பிறைக்கு ஒப்பாக விளங்குகின்ற நெற்றியினையும், தேனுக்கு ஒப்பாக இனிக்குமாறு பேசுகின்ற சொற்களையும், பெரிய வானத்தில் சூழ்கின்ற மேகத்திற்கு ஒப்பாக நிறம் வளர்கின்ற அளகபாரத்தையும் உடைய, மலைச் சொக்கநாயகி அம்மையை வணங்குதல் செய்வாம்.

குறிப்புரை: துஞ்சுதல்—உறங்குதல். அஃது இங்கு ஆகுபெயராய்த், திருமால் அறிதுயில் கொள்ளும் ஆலிலையைக் குறித்தது. உதரம்—உயிறு. தூசு—ஆடை. நுதல்—நெற்றி. பிரசம் (பிரசு)-தேன். அண்டம்—வானம். மஞ்சு—மேகம். அளகம் கூந்தல். திருக்கழுக்குன்றத்தில் தாழ்வரைக் கோயிலில் உள்ள அம்பிகைக்குத் திரிபுரசுந்தரி என்றும், மலைமேல் உள்ள அம்மைக்குச் சொக்கநாயகி (திருமலைச் சொக்கநாயகி) என்றும் பெயர் வழங்கும். இப்பெயரினைப் பலகாலும் நாம் நினைந்தின்புறும் வகையில் 'சொக்க' 'சொக்க' என்னும் ஒலிக்குறிப்பு அமையும்படி பாடியருளிய ஆசிரியரின் கவிதைத்திறம் பெரிதும் மகிழ்ந்து போற்றற்பாலது. (4)

(வண்டுவனப்பிள்ளையார் துதி)

பூவேழ்,அம் போதிகளாம் புரவுஏழ் பூவழியிற் பொழியும் பைந்தேன்
காவேழ்,அம் புதம்என்னும் கருவேழ்,அம் பரத்திஞெடும் காக்கும் காவற்
கோவேழம் பயந்தமுத்தம் கொடுத்தகனிக்கு அடுத்தகனிக் குவையோடு அப்பம்
மாவேழம் படைத்தவண்டு வனவேழம் புரக்கஎன்று வணக்கம் செய்வாம்

**பொழிப்புரை:** ஏழு உலகங்கள், கடல்களாகிய ஏழு அரண்கள், அழகிய பூவின் வழியாகப் பசுந் தேன் பொழிகின்ற ஏழு மேகங்கள் என்னும் இவைகளை, வானுலகத்தினுடன் காவல்புரிகின்ற தலைவனாகிய தேவேந்திரன், மூங்கில் ஈன்ற முத்துப்போன்றவராகிய சிவபெருமான், முன்னொரு காலத்தில் கொடுத்தருளிய மா(துள)ம்பழத்திற்கு ஒப்பாகிய பழத்திரள்களுடன் அப்பவகை களும், பெரிய கரும்புகளும் படைத்து வழிபட்ட வண்டுவனப்பிள்ளையார், நம்மைக் காத்தருள்க என்று, அவரை வணக்கம் செய்வோம்.

**குறிப்புரை:** பூ—பூமி, உலகம். அம்போதி—கடல். புரவு—காவல், அரண், மதில். கா—சோலை. அம்புகம் —மேகம். அம்பரம்— வானம். கோ — தலைவன். வேழம் — மூங்கில், கரும்பு, யானை. வேழம் பயந்த முத்தம் — மூங்கிலில் தோன்றிய முத்தாகிய சிவபெருமான். திருக்கழுக்குன்றத் திலுள்ள தல விநாயகருக்கு வண்டுவனவேழம் (பிள்ளையார்) என்பது பெயர். இப்பாடலில் 'வேழம்' 'வேழம்' என்னும் சொல்லமைதி பயின்றுவரப் பாடியுள்ள திறம் மகிழ்ந்து பாராட்டற் பாலது. வண்டுவனப்பிள்ளையாரைத் தேவேந்திரன் வழிபட்டு அருள் பெற்றான் என்பது தலவரலாறு. (5)

(முருகன் துதி)

வெருவேல், ஐந்நூற்றிரட்டி விழிபடைத்தாய், அமரரொடும் விடாத துன்பம்
மருவேல், ஐம் மழைநிறத்தாய், மலர்அகத்தாய், எனத்தனது மலர்க்கண் சாத்திப்
பெருவேலை பொருதலைக்கும் கருவேலைக்கு அவுணர்கணப் பெருகு வேலைக்கு
ஒருவேலை விடுத்தானை, இருவேலை யும்தமியேற்கு உணரல் வேலை.

**பொழிப்புரை:** ஆயிரம் விழிகளையுடைய தேவேந்திரனே! நீ தேவர்களுடன் அஞ்ச வேண்டுவ தில்லை. அழகிய மேகநிறமுள்ள திருமாலே! நீ எப்போதும் துன்பம் பொருந்தாமல் இருக்கக் கடவை; தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனே! நீயும் துன்பங் கொள்ளாமல் இருப்பாயாக என்று திருவாய் மலர்ந்து, தம்முடைய தாமரை மலர்போன்ற திருக்கடைக்கண் நோக்கத்தைச் செலுத்திப், பெரிய கரையை மோதிக் கலக்குகின்ற கருநிறமுடைய கடலுக்கும், அவுணர் கூட்ட மாகிய பெரிய கடலுக்கும், ஒப்பற்ற தமது வேற்படையை ஏவிய முருகப்பெருமானை, இரவு பகல் என்னும் எக்காலத்தும் தியானித்துத் தொழுதலே எளியேனுடைய தொழிலாகும்.

**குறிப்புரை :** வெருவேல்—அஞ்சாதே; ஐந்நூற்றிரட்டி விழிபடைத்தான்—ஆயிரம் கண்களை யுடைய இந்திரன். அமரர்—தேவர். மருவேல்—பொருந்தாதே. மழைநிறத்தான்—மேகம் போன்ற நீல நிறமுடைய திருமால். மலரகத்தான்—பிரமன். வேலை—கடல், நேரம், தொழில். உணர்தல்—தியானித்தல். முருகப்பெருமானின் வேலை நினைப்பிக்கும் குறிப்பில், இப்பாடலில் 'வேலை' 'வேலை' என்னும் சொல் பல்கால் அமைந்து வரப்பாடிய பண்பு எண்ணி இன்புறுதற் குரியது. (6)

(நந்தி தேவர் துதி)

கள்ளனையும் கமலமலர்க் கண்ணனையும், அமரரையும், ககன வாசி
விண்ணனையும், உமைபாகன் அவையகத்தே நிரந்தரமும விலக்கும் தோறும்
தண்ணனைய துழாய்மணமும், தாமரையின் விரைமணமும், தாருத் தாரின்
வண்ணனையின் மணமும், மணந்துடைய பிரம்புடையானை வணக்கம் செய்வாம்

பொழிப்புரை: தேன் துளிக்கின்ற தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமாலையும், வானத்தில் வாழ்கின்ற தேவர்களையும், விண்ணுலகத்தை யாளும் இந்திரனையும், உமையொரு பாகனாகிய சிவபெருமானின் திருவோலக்கத்தில் நாள்தோறும் திரண்டு நெருங்கிவிடாமல் விலக்கி யருளும் போதெல்லாம் துளசியின் மணமும், தாமரை மலரின் மணமும், கற்பக மலரின் மணமும் கலந்து ஒருங்கு கமழ்கின்ற பிரம்பினையுடைய திருநந்திதேவரை நாம் வணங்குதல் செய்வாம்.

குறிப்புரை: கள் நனையும்—தேன் துளிக்கின்ற. கண்ணன்—திருமால். ககனவாசி—வானுலகத்தில் வாழ்பவன். விண்ணன்—வானுலகத் தலைவனாகிய இந்திரன். நிரந்தரமும்—எப்பொழுதும். துழாய்—துளசி. தாரு—கற்பகமரம். தார்—மாலை. வண் நனை—அழகிய மலர். திருநந்திதேவர் சிவபிரானின் திருக்கயிலாய மலையைக் காக்கும் காவற்றலைமையுடையவர். தேவர்கள் பெருந்திரளாகக் கூடிச் சிவபிரானை வழிபடுவதற்கு வந்து நெருக்குங்கால், திருநந்திதேவர் மால் அயன் இந்திரன் முதலியோர்களைத் தம் பிரம்பினால் கடிந்து ஒதுக்குகின்றார். அதனால் அவரது பிரம்பு துளசி தாமரை கற்பகமலர் என்பவற்றின் நறுமணம் கமழ்வதாயிற்று. (7)

## (திருஞானசம்பந்தர் துதி)

கண்ணைப், பாடுஅசையும் இருகனங் குழையைக், கமழ்குழலைக் கனகச் செப்பை,
விண்ணைப், பாடகத் தாளைக், கழைத்தோளைக் கலந்து திருமேனி தோன்றப்
பண்ணைப் பாடலத்து ஆறுபதம் பாடும்பொழில் மயிலைப்பதி என்பு ஆய
பெண்ணைப் பாடிய புகலிப் பிள்ளையைப் பாடித் துயரம் பெயரச் செய்வாம்.

பொழிப்புரை: கண்களையும், பக்கத்தில் அசைகின்ற இரண்டு கனமான குழைகளையும், நறுமணம் கமழும் கூந்தலையும், பொற்சிமிழ் போன்ற தனங்களையும், வான்வெளி போன்றுகாண்டற்கரிய நுண்ணிடையினையும், பாடகங்கள் பூண்ட பாதங்களையும், பசிய மூங்கிலையொத்த தோள்களையும் பொருந்திய, ஓர் அழகிய திருவுருவம் குடத்திலிருந்து தோன்றும்படி, பாதிரிமரங்களில் அமர்ந்து ஆறுகால்களையுடைய வண்டுகள் பண்ணைப் பாடுகின்ற சோலைகளையுடைய திருமயிலையில், அங்கம பூம்பாவையாகிய பெண்ணின் மீது திருப்பதிகம் அருளிச் செய்த, சீர்காழியில் தோன்றிய திருஞானசம்பந்தப் பெருமானைப் பாடித் துதி செய்து, நம்முடைய துயரங்கள் நீங்கும் படி செய்து கொள்வோம்.

குறிப்புரை: பாடு—பக்கல். குழை—காதணி. குழல்—கூந்தல். கனகம்—பொன். கழை—மூங்கில். பாடலம்—பாதிரிமரம். ஆறுபதம்—வண்டு. புகலி—சீர்காழி. (7)

## (திருநாவுக்கரசர் துதி)

குறித்தகுலத் திலதவல்லிக் கிளைவளைப்ப வளைப்புண்டு, கொடிய நாகம்
பறித்த குருந்தினை மீட்டு, நீற்றறையின் வன்னிவென்று, படரும் கோட்டு
வெறித்தமத மாக்களையும விலக்கி, முழங்கிய அத்தி மீதே குண்டர்
செறித்தகலலால் மிதந்துவரும் திருநாவுக் கரசுநிழற் சோந்து வாழ்வாம்.

பொழிப்புரை: புகழ்மிகுந்த குறுக்கையர் குடியில் வேளாண் குலத்தில் தோன்றிய திலதவல்லி (திலகவதி) என்னும் பெயருடைய சுற்றமாகிய தமக்கையார், சிவபிரான் திருவருளால் சேர்ப்பிக்கச் சமணசமயம் விடுத்துச் சைவ சமயத்தில் சேர்ந்து, கொடியதாகிய அரவம் தீண்டி இறந்த

இளமைப் பருவமுள்ள அப்பூதி அடிகளின் புதல்வனை உயிர்ப்பித்தும், நீற்றறையில் நெருப்பை வென்றும், நீண்ட தந்தத்தை உடைய மதயானையாகிய களிற்றை விலக்கியும், ஒலிக்கின்ற கடலின்மேல் சமணர்கள் கட்டியிட்ட கற்றூணே தெப்பமாக வந்து கரை சேர்ந்த திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடி நிழலிற் சேர்ந்துவாழ்வோம்.

குறிப்புரை: திருநாவுக்கரசு என்னும் திருப்பெயரில், அரசு என்னும் மரத்தின் பெயர் அமைந்திருப்பதற்கு ஏற்ப, நாகம் குருந்து வன்னி மா அத்தி கல்லால் என்னும் மரங்களின் பெயர்களையும், வல்லி கிளை கோடு நிழல் என மரத்தோடு தொடர்புடைய பெயர்களையும் ஆசிரியர் அழகு பெறக் குறிப்பிட்டருளினர். (9)

(சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி)

வழிவிடுத்த தொருநதி, ஒண் பொன்சொணர்ந்தது ஓர்ஆறு, வரும்பொன் வாங்கிக்
கழிகொடுத்தது ஒரு பொய்கை, அளித்ததொரு கயம்கரவு கரந்த சேயை,
மொழிவசத்திற்கு அவையோ; இப் பரவை இணங்குவது அரிது முதல்வா என்று,
விழிதரித்தும் அரிகாணுப் பாதனைத் தூது ஏவினனை விழைந்து வாழ்வாம்.

பொழிப்புரை: திருவையாற்றில் காவிரியாறு எனக்கு வழிவிடுத்தது. திருமுது குன்றத்தில் மணிமுத்தா நதி யான் சொரிந்த பன்னீராயிரம் பொன்னைத் திருவாரூருக்குக் கொணர்ந்து சேர்த்தது. அப்பொன்னைத் திருவாரூரிலுள்ள கமலாலயம் என்னும் பொய்கை, யான் பெறும்படி கொடுத்தது. திருப்புக்கொளியூர் அவிநாசி என்னும் தலத்தில் ஒரு குளம், முதலையுண்ட மதலையை மீட்டு வருவித்து அளித்தது. இங்ஙனம் ஆறும் நதியும் பொய்கையும் கழியும் குளமும் என்பன வெல்லாம் என் சொல் வழி நிற்க, எல்லாவற்றிற்கும் முதல்வனாகிய பெருமானே, ஒரு பரவை (கடல்) மட்டும், என் சொல்வழி நிற்க மறுக்கின்றது என்று, திருமால் தன் கண்ணை மலராகத் திருவடிகளில் சாற்றி வழிபட்டும், காணவொண்ணாத சிவபெருமானை, அந்தப் பரவை நாச்சியார் இடத்தில் தூதாகச் செல்லும்படி ஏவிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை, விரும்பித் துதித்து வாழ்வோமாக.

குறிப்புரை: சுந்தரமூர்த்தி சுவாமிகளின் துணைவியார்தம் பெயர் "பரவை" என அமைந்தமை பற்றி, அச்சொற்குக் கடல் என்ற வேறொரு பொருளும் உள்ளமையால், அதனோடு ஒருவகையில் தொடர்புடைய ஆறு, நதி, பொய்கை, கழி, குளம் என்பனவற்றைச் சொற்சுவை அமைய ஆசிரியர் குறித்தருளினர். சுந்தரர் இறைவனைத் தூது அனுப்பிய செயலைப் புகழ்ந்து போற்றியபடி. ஆற்றில்இட்டபொன்னைக் குளத்தில் தேடிக் குறைவரப் பெற்றூராதலின் "ஆறுவரும் பொன் வாங்கிக் கழி கொடுத்தது ஒரு பொய்கை" என்றூர். கழி - வாய்க்கால், மிகுதி எனவும் பொருள்படும். (10)

(மாணிக்கவாசக சுவாமிகள் துதி)

வழுக்கின்றித் தன்சிரத்தே வலிதுதிரு வடியிரண்டும் வைத்திட் டானை,
ஒழுக்கொன்றும் ஒருநாலா யிரம்அடிமேற் பலஅடிவைத்து ஓதினானை,
இழுக்கொன்றும் இல்லாமல் ஏற்றானை நரிப்பரிமீது ஏற்றி னானைக்
கழுக்குன்றத்து அரிபிரமர் காணானைக் கண்டானைக் கருத்துள் வைப்பாம்.

பொழிப்புரை: தவறுதலின்றித் தமது தலையின்மேற் சிவபெருமான் தன் திருவடி இரண்டையும் வலிந்து சூட்டச் சூடிக்கொண்டவரும், ஒழுகிசை பொருந்திய நாலாயிரம் அடிமேலும் பல வரிகளை அமைத்துத் திருவாசகம் திருக்கோவையார் என்னும் நூல்களைப் பாடியருளியவரும், எந்நாளும் குற்றமில்லாதபடி எருதின்மேல் இவர்பவரும் ஆகியசிவபெருமானை, நரியாகிய பரியின்மீது ஏற்றிய

வரும் திருமாலும் பிரமனும் காணவெண்ணாத சிவபிரானைத் திருக்கழுக்குன்றத் தலத்தில் குரு வடிவில் கண்டு வணங்கியவரும் ஆகிய மாணிக்கவாசகப் பெருமானை நம்முடையஉள்ளத்தில் வைத்துப் போற்றுவோமாக!

குறிப்புரை: வழுக்கு—தவறு. ஒழுக்கு—ஆற்றொழுக்குப் போன்ற இனிய ஓசை. இழுக்கு—குற்றம். ஏற்றான்—எருது ஊர்தியையுடைய சிவபெருமான். நரிப்பரி—நரியாகிய குதிரை. ''காணானைக கண்டானை'' என்பது முரண்தொடைச் சொல் நயம். ''கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே'' என வரும் திருவாசகச் சொற்றொடர்களை நினைந்து, ஆசிரியர் மாணிக்கவாசகரைக் ''கழுக்குன்றத்து அரிபிரமர் காணானைக் கண்டானை'' என்று புகழ்ந்து போற்றினார். (11)

(தண்டீசர், நாயன்மார் துதி)

தந்தைதாள் எறிந்து, குகன் தந்தைதாள் அடைந்ததிருத் தண்டி ஆதி,
முந்தையோர் திருத்தொண்டர் யாவரையும், வேதகிரி மூதூர் வைகும்
சிந்தைநான் மறைச்சைவத் திறநெறிநின் றோரையும், அச்சிலம்பின் உச்சி
எந்தை ஆளுடைய கழுகளனும் முனிவர் இருவரையும் இறைஞ்சி வாழ்வாம்.

பொழிப்புரை: தந்தையின் கால்களை வெட்டி, முருகப் பெருமானின் திருவடிகளை அடைந்த தண்டீசர் முதலிய முன்னோர்களாகிய திருத்தொண்டர்கள் எல்லோரையும், வேதகிரி என்கின்ற பழமையாகிய தலத்தில் வசிக்கும் சிந்தை உடையவர்களாய், நான்மறைகள் போற்றுகின்ற சைவசித்தாந்தமாகிய சமய நெறியில் நின்று ஒழுகுபவர்களையும், அவ்வேதகிரியின் உச்சியில் வீற்றிருந்தருளும் எந்தையாகிய சிவபிரானால் ஆட்கொள்ளப்பெற்ற கழுகுகள் ஆகிய முனிவர்கள் இருவரையும், வணங்கி வாழ்வோம்.

குறிப்புரை : தந்தை - எச்சதத்தன். குகன் - முருகப்பெருமான். திருத்தண்டி - சண்டேசுவ நாயனார். சைவத்திறம் - சைவசித்தாந்தம். சிலம்பு-மலை. (12)

(பாயிரம் முற்றிற்று)

## (பதிகம்)

(நூலின் அகத்தே கூறப்பெற உள்ள பொருள்களைத் தொகுத்துக் கூறுதல்)

ஈசன்நந்திக்கு, அந்நந்தி எமதுசனற் குமாரற்குச், சனற்கு மாரன்
ஆசுஅரிய வியாதற்கு, வியாதமுனி சூதற்குச், சூதன் என்பான்
மாசணுகா நைமிசா ரணியத்தார்க்கு உரைத்தநெறி, மறித்தும் நந்தி
தேசிகனாய் மலரோற்கு விளம்பியது, கழுக்குன்றச் சிறப்பு மாதோ.

பொழிப்புரை : சிவபெருமான் நந்திதேவருக்கும், நந்திதேவர் சனற்குமார முனிவருக்கும், சனற்குமாரர் வியாசமுனிவருக்கும், வியாசர் சூதமுனிவருக்கும், சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்குமாகச் சொல்லிய முறைமைப்படி, மறுபடியும் நந்திதேவர் குருமூர்த்தமாய் எழுந்தருளி, பிரமதேவனுக்கு அருளிச் செய்தது, இந்தத் திருக்கழுக்குன்றத் தலபுராணமாகும். (13)

இக்கழுக் குன்றத் தோற்றம் வேதமாய் எழுந்த வாறும்,
ஒக்கலோடு அவுணர்க் காய்ந்த உருத்திர கோடி யோரும்,
மிக்க நந்தியும் பூசித்த வாறும், விண் மடந்தை மீதும்
தக்க மாயீகன் மீதும் சாபம்வந்து அடுத்த வாறும்

**பொழிப்புரை :** இந்தத் திருக்கழுக்குன்றத்தின் தோற்றம் வேதங்களேயாய் எழுந்தமுறைமையும், அவுணர்களைச் சுற்றத்துடன் அழித்த உருத்திரகோடியர், சிறப்புமிக்க நந்திதேவர் ஆகியோர் வழிபட்ட தன்மையும், தேவமாது ஆகிய திலோத்தமை மாயிகன் என்பவர்கள்பால் சாபம் வந்து பொருந்திய தன்மையும், (14)

தேனுமுன் வசுக்கள் தம்மைச் செயிர்படச் செயிர்த்த வாறும்,
மாநிலத்து அவர்தம் சாபம் நாரதன் மாய்த்த வாறும்,
ஞானமார்க் கண்டன் கண்டு, புரந்தரன் நறும் துழாயோன்
பூநறு மலரோன் ஆதிக் காதைகள் புகன்ற வாறும்

**பொழிப்புரை :** முற்காலத்தில் காமதேனு அட்டவசுக்களுக்குத் துன்பம் நேரிடும்படி சபித்ததும்' மண்ணுலகத்தில் அவர்கள் பெற்ற சாபத்தை நாரதமுனிவர் போக்கி அருளியதும், ஞானமிக்க மார்க்கண்டேய முனிவர், அட்டவசுக்களைக் கண்டு தேவேந்திரன் திருமால் பிரமதேவன் முதலியவர்களுடைய வரலாறுகளைக் கூறியதும், (15)

காதையை வசுக்கள் கேட்டுக் கசிந்து அருச்சித்த வாறும்,
ஆதவர் பணிந்த வாறும், அரிய பாணினியத் தொன்னூல்
மாதவர் தெளிந்த வாறும் மணம்உமைக்கு அயர்ந்த வாறும்,
ஏதமில் உகங்கள் தோறும் இருகழுகு அடுத்த வாறும்,

**பொழிப்புரை :** அவ்வரலாறுகளை அட்டவசுக்கள் கேட்டு உள்ளம் உருகி அருச்சித்த முறைமையும், துவாதச ஆதித்தர்கள் வழிபட்ட முறைமையும், அருமை மிகுந்த பாணினியம் என்னும் இலக்கண நூலை முனிவர்கள் உணர்ந்த முறைமையும், பார்வதி தேவியாருக்குத் திருமணம் நிகழ்ந்த முறைமையும், குற்றமில்லாத நான்கு யுகங்கள்தோறும் இரண்டிரண்டு கழுகுகள் திருக்கழுக்குன்றத்தில் வந்து வழிபட்ட தன்மையும், (16)

சுரகுரு வனம்புக்கு எய்யப் பசுப்பன்றி தொலைந்த வாறும்,
இரணியச் சேதா மேனி பிணிதணந்து இமைத்த வாறும்,
பரவுசம்பு ஆதி என்போர் தீர்த்தம் இப்பதி விசிட்டம்
புரவலர்க்கு உரைத்த வாறும், அவன்பவம் போய வாறும்,

**பொழிப்புரை :** சுரகுரு என்னும் அரசன் காட்டிற் சென்று வேட்டையாடி அம்பு எய்ததனுல் பசுவும் பன்றியும் இறந்த தன்மையும், பொன்னிறம் வாய்ந்த அப்பசு தன் உடற்பிணி நீங்கி விளங்கிய முறைமையும், போற்றத்தக்க சம்பு ஆதி என்னும் முனிவர்கள் திருக்கழுக்குன்றத்தின் தலச் சிறப்பும் தீர்த்தச் சிறப்பும் ஆகியவற்றை, அச்சுரகுரு என்னும் அரசனுக்குக் கூறிய முறைமையும், அவன் வேதகிரீசரை வழிபட்டு அருள்பெற்றுப் பிறவி நீங்கிய தன்மையும். (17)

பரசிவன் புராணம் பத்திற் பவுடியத்து, இலிங்கி யத்தில்,
உரைசெயும் காந்தம் தன்னில், வேறுவேறு உரைத்த எல்லாம்
வரிசையின் ஒருங்கு சேர்த்தி வடநூலைத் தென்நூ லாகத்
துரிசற எவர்க்கும் ஐயத் துளக்கற விளங்கச் சொல்வாம்

**பொழிப்புரை :** சிவபிரானுக்குரிய சிவபுராணங்கள் பத்தில் சேர்ந்த பவுடியம் இலிங்கம் காந்தம் என்னும் புராணங்களில் தனித் தனியாகச் சொல்லப்பட்டவற்றை எல்லாம் வரிசையாக ஒன்று

படச் சேர்த்து, வடமொழி நூலைத் தென்மொழி நூலாகக் குற்றங்கள் நீங்கும்படியும், எல்லோர்க்கும் ஐயமாகிய கலக்கங்கள் தீரும்படியும், விளக்கமாகச் சொல்லப்புகுகின்றேம். (18)

### பதிகம்முற்றிற்று

### (அவையடக்கம்)

நந்தியம் பகவன் ஆதி நான்மறைக்கு இறைவர் எல்லாம்
புந்தியில் தரிக்கல் ஆற்ருக் கழுக்குன்றப் புராணத் தோற்றம்,
சிந்தையிற் சிறியேன் கூறத் தொடங்குதல். சேடன் சூடும்
முந்தை வையகத்தை, நாங்கூழ் முடிப்பல் என்றடுத்த வாறே.

பொழிப்புரை: திரு நந்திதேவர் முதல், நான்கு வேதங்களுக்கு முதல்வர்களாகிய முனிவர்கள் எல்லோரும், மனத்தில் தரிக்கவொண்ணுத சிறப்புமிக்க திருக்கழுக்குன்றப் புராணத்தின் வரலாற்றை, அறிவிற் சிறிய யான் கூறத்தொடங்குதல், ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேடன் தன் தலையில் சூடுகின்ற பழமை மிக்க இவ்வுலகத்தை, ஒரு சிறிய நாகப் பூச்சியானது, யான் எனது தலையல் தாங்குவேன் என்று கூறமுற்படுதல் போலும். (19)

சாற்றிய புலமைப் புன்மை தமியன்யாப்பு உடைய வேனும்,
நீற்றினன் கழுக்குன் றத்தை நிகழ்த்தலால், நிகழ்த்தும் சான்றேர்
மேற்றிகழ் நவையும் மாற்றி விரும்புவர்; சேறு சேர்ந்தும்
தேற்றினும் தேற்றிக் கொள்வர் தீம்புனல் வேட்டுண் போரே.

பொழிப்புரை: புலமைக்குக் கூறப்பெற்ற குற்றங்கள் அனைத்தும், எளியேன்பாடும் செய்யுட்களில் அமைந்திருக்குமாயினும், திருநீறு அணிந்த திருமேனியை உடைய சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கழுக்குன்றத் தலத்தின் சிறப்பை விளக்குவதனுல், நூல்களின் குற்ற நற்றங்களை ஆராய்கின்ற சான்றேர்கள், இந்நூலின்கண் உள்ள குற்றங்களைத்திருத்தி விரும்பி ஏற்றுக் கொள்வார்கள். இனிய நீரை விரும்புபவர்கள் அதன்கண் சேறு கலந்திருப்பினும், அதனைத் தேற்றுங் கொட்டையிட்டுத் தெளியவைத்து உண்பார்கள். (20)

## நாட்டுப் படலம்

வண்டுஊர மலர்த்தேன் மாந்தும் பெண்ணையின் வடபால்; வேழம்
கண்டீர வம்கண்டு ஆர்க்கும் காளத்தி வரையின் தென்பால்;
தண்தீரப் புணரி மேற்பால்; பவளமா சயிலக் கீழ்பால்;
துண்டீரத் திருநாடு என்னும் அதன்வளம் தொகுத்துச் சொல்வாம்

பொழிப்புரை: வண்டுகள் குளிர்ச்சி பொருந்திய மலரிலுள்ள தேனை உண்ணும்படியான பெண்ணையாற்றுக்கு வடபக்கம், சிங்கங்கள் யானைகளைக் கண்டு சினந்து ஆரவாரஞ் செய்யும்படியான திருக்காளத்தி மலைக்குத் தென்பக்கம், குளிர்ச்சி பொருந்திய கரையை உடைய வங்காளவிரிகுடாக்கடலுக்கு மேற்பக்கம், பெரிய பவளமலைக்குக் கீழ்ப்பக்கம், என்னும் இந்த நாற்பங்கு எல்லைக்கு உட்பட்டதாய்ச் சிறப்புள்ள, துண்டீர நாடு என்கிற நாட்டின் வளத்தைத் தொகுத்துச் சொல்லுவாம். (21)

முக்கணுன் கணநா தர்க்குள், முதன்மைத்துண் டீரன் ஆண்டு
மிக்கதுண் டீர நாடாய்த், தண்டக வேந்தன் தாங்கித்
தக்கதண் டகநன் ஞடாய்த், தபனன்மா குலத்துச் சோழன்
தொக்கதார்த் தொண்டை மான்காத்து ஆயது தொண்டை நாடே.

பொழிப்புரை: ஞாயிறு திங்கள் தீ ஆகிய முக்கண்களையுடைய சிவபெருமானின் கணநாதருக்குள் முதன்மை வாய்ந்த துண்டீரன் என்பவனால் அரசாட்சி செய்யப்பட்டு, வளப்பம் மிகுந்த துண்டீர நாடு என்னும் பெயர் பெற்றது; தண்டகன் என்னும் அரசனால் அரசாட்சி செய்யப்பட்டுத் தகுதியுள்ள நல்ல தண்டகநாடு என்னும் பெயர் பூண்டது; பெருமைபொருந்திய சூரிய குலத்தைச் சேர்ந்தவனும், ஆதொண்டை மலரால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவனுமாகிய தொண்டைமானால் அரசாட்சி செய்யப் பெற்றுத் தொண்டைநாடு என்னும் பெயர் பெற்றது, இந்நாடு. (22)

அறநெறி யுரைத்த ஆசா னும்முதற் கடவுள் போந்து,
மறைநெறி மலையொன்று ஈட்டி, மலைக்கொழுந்து ஆகி வைகும்
புறஅணி நகரும் ஈண்டு புகழொடும் பொலிந்திந் நாடு
திறல்கெழு நாட்டிற் கெல்லாம் தேசிகன் நிகர்த்த தம்மா.

பொழிப்புரை: அறநெறியைச் சனகர் முதலிய முன்னவர்களுக்குப் போதித்தருளிய ஞானாசிரியராகிய சிவபெருமான், கயிலாயத்தின்கண் நின்றும் எழுந்தருளி, வேதங்களாகிய ஒருமலையை உண்டாக்கி, அந்த மலையின் கொழுந்துபோல வீற்றிருந்து அருளுகின்ற, புற அணியினை உடைய வேதகிரி என்னும் தலம் பொருந்திய புகழுடன் விளங்கி, இந்த நாடானது மற்றைய நாட்டிற்கு எல்லாம் வெற்றி பொருந்திய குருமூர்த்தத்தை ஒத்தது. (23)

ஆரண முதல்நூல் யாவும் அண்டமும் பயந்த அன்ன
பூரணி யுகள நாழி நெற்களால் புரந்து, எண்ணான்கு
காரண அறமும் போற்றும் காஞ்சியும் படைத்து, இந் நாடு
தாரணி நாட்டுக் கெல்லாம் தாய்எனத் தகைத்து மாதோ

பொழிப்புரை: வேதம் முதலாகிய எல்லாக் கலை நூல்களையும், பல்லாயிரம் அண்டங்களையும் ஈன்றருளிய அன்னபூரணியாகிய பார்வதிதேவியார், இருநாழி நெல்கொண்டு புரந்து முப்பத்திரண்டு அறங்களையும் போற்றிய காஞ்சி நகரத்தையும், தொண்டைநாடு தன்னிடத்தில் படைத்துக் கொண்டு, இவ்வுலகத்தில் இருக்கும் நாடுகளுக்கெல்லாம் தாய் என்று சொல்லும்படியாகிய தகைமையினை உடையது. (யுகளம்—இரண்டு. புரந்து—காத்து. தாரணி—பூமி.) (24)

குறிஞ்சிதென் கயிலை வெற்பும், அருணைப்பொற் குவடும் ஆக,
நிறஞ்செயும் ஒற்றி யூரும் மயிலையும் நெய்தல் ஆக,
நறுஞ்செழு முல்லை வாயில் நகுமுல்லைத் திணையது ஆக,
அறஞ்செயும் மருதம் நாப்பண் ஆகப்பெற் றுளதுஅந் நாடே.

பொழிப்புரை: தென்கயிலாயம் ஆகிய திருக்காளத்திமலையும், திருவண்ணாமலையும் குறிஞ்சிநிலமாகவும்; புகழ்பொருந்திய திருவொற்றியூரும், திருமயிலையும் நெய்தல் நிலமாகவும்; செழுமையினை உடைய நல்ல திருமுல்லைவாயில் விளங்குகின்ற முல்லை நிலமாகவும்; அறங்கள் செய்யத் தக்க மருதநிலத்தை நடுவுணதாகவும், அத்தொண்டைநாடு பெற்றிருக்கின்றது. (25)

அத்திணைக் கயிலைப் பாம்பொன்று ஆனையொன்று ஒருவில் வேடன்
மெய்த்துணை சிவனே என்றென்று இறைஞ்சிவீடு அடையப் பெற்றால்,
நிந்தியன் அருணை சன்தாள் நிலம்அகழ்ந்து ஏனம் ஒன்று
பத்தியில் தேடிற் றென்றால், இவற்றினும் பலித்த துண்டோ?

பொழிப்புரை: மேற்கூறிய குறிஞ்சித்திணையாகிய தென்கயிலை என்னும் திருக்காளத்திமலையில் ஒரு பாம்பும் யானையும் ஒருவில் வேடனும் உண்மையாக நமக்கு உற்றதுணை சிவபெருமானே என்று கருதிப் பணிந்து வீடுபேறு அடையப்பெற்றன; திருவண்ணாமலையில் அழிவிலாத நித்தியராகிய அண்ணாமலை அண்ணலின் திருவடிகளை ஒரு பன்றியானது அன்பினால் நிலத்தைப் பிளந்து தேடிக் கொண்டு சென்றது. இவ்விரண்டு தலங்களையும்விட, வீடுபேறு அளிக்கத்தக்க சிறந்த தலங்கள் வேறு எங்கேனும் உண்டா ?. (26)

நெய்தலம் பதியிரண் டுண்டு, இலஞ்சிநல் நீழற்கீழ் எம்மான்
எய்தலைப் பெற்ற தொன்றேல், என்புஅரன் பணிக்குப் பெண்ணு
மெய்தரச் சிறந்த தொன்றேல், விழுமுல்லைத் திணையில் வேந்தன்
உய்தரத் தடுத்த தொன்றேல், இவைக்கும் ஓர் உவமை யுண்டோ ?

பொழிப்புரை: இத்தொண்டை நாட்டில் அழகு பொருந்திய நெய்தற் பதிகள் இரண்டு உண்டு. அவற்றுள் நல்ல மகிழமரத்தின்கீழ்ச் சிவபெருமான் வீற்றிருக்கும் திருவொற்றியூர் ஒன்று. சிவ பிரான் தொண்டுக்கு என்பைப் பெண்ணாக்கித் தரவல்ல திருமயிலாப்பூர் மற்றொன்று. ஒரு சோழவேந்தனைக் கொடியால் தடுத்து உய்ய ஆட்கொண்டருளிய திருமுல்லைவாயில் என்னும் தலம், தொண்டை நாட்டில் முல்லைத்திணைக்கு உரியதாகும். இத்திணைகளுக்கு வேறு ஓர் இணையுண்டோ ? (27)

வாணியாழ், நாரதன் தும்புருவன் நன்பாட்டும், மாயன்
பாணியிற் படகம், நந்தி தண்ணுமை, பதுமன் தாளம்,
வேணிவான் கதிர்இந்து ஊதும் வேயதாக் கொடு, வாதாடும்
காணிஊர் அரனுக்கு இந்த நாட்டன்றிக் கருதிற் றுண்டோ ?

பொழிப்புரை: கலைமகள் வீணையும், தும்புரு நாரதர்கள் நல்ல இசைப்பாடலும், திருமால் இசைப் பாடலுக்கு ஏற்ற படகம் என்னும் வாச்சியமும், நந்திதேவர் முழவும், பிரமன் தாளமும், வானத் தில் உலவுகின்ற சிறந்த சூரிய சந்திரர்கள் வேய்ங்குழலும் ஆகியவற்றை வாசிக்க, சிவபெருமான் காளியுடன் நடன வாதாடும் காணியாகிய திருவாலங்காடு என்னும் தலம், தொண்டைநாட்டில் அல்லாமல் வேறு எங்கேனும் உள்ளதோ ? (காணி—உரிமையான நிலம், இடம்) (28)

முகரி சேயாறு பாலி முரல்திரைக் கம்பை பம்பை
அகருவே நாறும் பெண்ணை அருந்திரு நதி, அந் நாட்டின்
மகர வாரியினும் பொங்கி, மடைதொறும் பிரிந்தொன் றுகும்,
நிகரிலான் பலதே வாய நிகர்எனக் காக்கும் அன்றே

பொழிப்புரை: பொன்முகலி நதி, சேயாறு, பாலாறு, அலைகள் ஒலிக்கும் கம்பா நதி, பம்பையாறு, அகிலின் மணமே கமழ்கின்ற பெண்ணையாறு என்னும் நதிகள், பெறுதற்கரிய செல்வச் செழிப்பு மிக்க அத்தொண்டை நாட்டில், மகரமீன்கள் உலவுகின்ற கடலைவிடப் பெரியனவாக, வேகமாகப் பெருகி, மடைகளை உடைய வயல்கள் எங்கும் தனித்தனி பிரிந்து பாயும் தன்மை, ஒப்புயர்வு அற்ற சிவபெருமான் ஒருவரே, அயன் மால் உருத்திரன் முதலிய பல தேவர்களாய் விளங்குதல் போல, உலகைக் காத்தருளும். (29)

சங்கெங்கும்; எகினம் எங்கும்; தடம்எங்கும்; தடங்கா எங்கும்;
கொங்கெங்கும்; நளினம் எங்கும்; குவளையங் குழாங்கள் எங்கும்;
கங்கெங்கும்; நதிகள் எங்கும்; கரும்பொடு நெற்காடு எங்கும்;
எங்கெங்கும் இவைமற் றன்றி யில்லை; அத் திருநாட்டு, எல்லை,

பொழிப்புரை: அத்தொண்டை நாட்டில் சங்கங்கள் எவ்விடத்தும் காட்சிதரும். எங்கும் தேன் பெருகும். எங்கும் தாமரைகள் மலரும். அழகிய நீலோற்பல மலர்கள் எங்கும் செழித்து வளரும். வரப்புகள் எங்கும் இருக்கும். நதிகள் எங்கும் பாயும். கரும்பும் நெற்பயிரும் எங்கும் செழித்து ஓங்கும். அந்தத் தொண்டைநாடு முழுவதிலும் எங்கெங்கும் இவைகளேயன்றி வேறொன்றும் காணப்படா. (30)

மஞ்சடாப் பொதும்பர் இல்லை, மதிபடாப் புரிசை யில்லை,
நெஞ்சடாத் தருமம் இல்லை, நெறிபடாச் செயல்ஒன் றில்லை,
நஞ்சடாக் கயற்கண் இல்லை, கயற்கண்ணார் நளினத் தாட்செம்
பஞ்சடாக் குஞ்சி யில்லை, பைதிரக் குமரர்க் கெல்லாம்

**பொழிப்புரை:** இத்தொண்டை நாட்டில், மேகம் பொருந்தாத சோலைகள் இல்லை; சந்திரனைப் பொருந்தாத மதில் இல்லை; அறநெறியைப் பொருந்தாத மனம் இல்லை; நீதியைப் பொருந்தாத செய்கை இல்லை, நஞ்சை ஒவ்வாத கண்கள் இல்லை. அந்த நாட்டு இளைஞர்களுக்கெல்லாம் கயல் போன்ற கண்களையுடைய மனைவியரின், தாமரை மலர்போன்ற பாதங்களில் ஊட்டிய செம்பஞ்சுக் குழம்புபொருந்தாத கேசம் இல்லை. (மஞ்சு-மேகம்; பொதும்பர்-சோலை. புரிசை-மதில், நளினம்-தாமரை, குஞ்சி-கேசம், (தலைமயிர், பைதிரம்-நாடு.) (31)

தொடுநரும், அலத்தோடு ஏற்றை உழுநரும், தொய்யற் செய்யின்
அடுநரும், களையிற் காவி நவிநரும், நவிந்த கூலி
கொடுநரும், பசும்பொற் செந்நெற் குவிநரும், கொழுந்தீம் கன்னல்
அடுநரும் ஆய மள்ளர் அதிர்ப்பு,வான் அதிர்க்கும் மாதோ.

**பொழிப்புரை:** ஏரில் கடாக்களைப் பூட்டுகின்றவர்களும், உழுகின்றவர்களும், சேறுள்ள கழனியில் நாறு நடுகின்றவர்களும், களையில் குவளை மலர்களைப் பறிப்பவர்களும், களைபறித்த கூலி கொடுப்பவர்களும், மாற்றுயர்ந்த பொன்னிறமுள்ள சம்பா நெல்லைக் கவிப்பவர்களும், செழுமையும் இனிமையுமுள்ள கருப்பஞ்சாற்றினைக் காய்ச்சுகின்றவர்களும், ஆகிய மள்ளர்களுடைய ஆரவாரம் வானளாவ ஒலிக்கும். (தொய்யல்—சேறு. செய்—வயல்) (32)

தலையொடு நெடுந்தாள் நீக்கித் தரளங்கள் தெறிப்ப, மள்ளர்
இலைவயக் கூன் குயத்தால் எறிந்தெடுத்து, ஆட்டி ஆட்டி
அலைஎறி கருப்பந் தீஞ்சாறு அடும்புகை பொதும்பின் மூடி,
மலைகளும் முகிலும் ஏய்ப்ப வயின்வயின் வயங்கும் மன்னோ!

**பொழிப்புரை:** கொழுந்தாகிய ஆடைகளையும், நீண்ட அடிக் கட்டைகளையும் நீக்கிவிட்டு, முத்துகள் சிதறும்படி, தகடாகிய வளைந்த வெற்றி பொருந்திய கொடுவாள்களினால் கரும்பை வெட்டி வெட்டி, அந்தத் துண்டுகளை எடுத்துப் பலதரம் ஆலையில் ஆட்டுதலால் சால்களில் நிறைந்து கொண்டிருக்கும்படி, சுவை மிகுந்த கருப்பஞ் சாற்றினைக் காய்ச்சுவதால், உண்டாகும் புகையானது சோலைகளில் மூடி, மலைகளையும், அவைகளைச் சூழ்ந்த மேகங்களையும்போல, இடங்கள் தோறும் விளங்கும். (33)

அயலிடைக் கிடந்த யாமை முதுகிடை அரிவாள் தீட்டி
வயலிடைக் கொய்து கொய்து வான்தொட அடுக்கி, மள்ளர்
செயலுடைக் கடா விடுக்கும் செந்நெல்அம் செழும்போர் ஈட்டம்,
புயல்உடைத் தாய சாரற் பொன்மலை மலைக்கும் அன்றே.

**பொழிப்புரை:** அயலில் உறங்கிக் கிடக்கும் ஆமைகளின் முதுகில் அரிவாள்களைத் தீட்டிக் கொண்டு, வயல்களில் கதிர்களை அரி அரியாக அறுத்து, வானத்தைத் தொடும்படி அடித்து மள்ளர்கள் கடாக்களைப் புணைகட்டி அடிக்கின்ற செந்நெல்லின் போர்க் கூட்டம், மேகங்கள் சூழ்ந்த சாரலையுடைய பொன்மலையைப் போலத் திகழும். (34)

உழவர்க்கும் உழத்தி மார்க்கும், ஒலிதரு கருப்பஞ் சாற்றிற்
பழனத்து விளைந்த செந்நெற் பசியதாள் அரிந்தும் சேர்த்தும்,
குழைவுற்ற தடக்கை நாற்றம் விரும்பிய சுரும்பின் கொள்ளை
இழைபொற்கை நளின மென்கை தெருட்டுகை ஏய்க்கும் மன்னோ.

**பொழிப்புரை:** உழவர்களுக்கும் உழத்தியர்களுக்கும், ஓசையுடன் ஆலையிலிருந்து பாய்கின்ற கருப்பஞ் சாற்றினால் வயல்களில் விளைந்துள்ள செந்நெற் பயிர்களின் பசுமையான தாளை அரிவதினாலும், பின்பு அவைகளைக் கட்டிச் சேர்ப்பதினாலும், குழைவு பொருந்திய பெரிய கைகளில் பற்றிய நறுமணத்தை விரும்பி மொய்க்கும் வண்டினங்கள், அவர்களுடைய கைகளைத் தாமரை மலர்கள் என்று தெரிவிப்பனபோலும். (35)

படுசுடர்ப் பசும்பொற் செப்புப் பதித்த நீலத்தி னேடும்,
கொடியுறத் திரண்டு கொண்டு கோடிசென் றுலாய தென்ன,
அடுவிழிக் கடைசி மார்தம் அலர்முலைத் திதலை மீது
நடுவயல் தெறித்த சேற்றுத் தெறியொடு நடத்தல் செய்வார்.

பொழிப்புரை: அளவற்ற கொடிகள், நீலமணிகள் பதித்துள்ளவையாய், ஒளி பெருந்திய இரண்டு பொற்செப்பினை வைத்துக் கொண்டு உலவுவதுபோல, ஆடவர்க்கு வருத்தம் செய்யத்தக்க கண்களையுடைய உழத்தியர்கள், தங்களுடைய அடி பரந்து எழுகின்ற தனங்களில் பரந்த தேமலின்மேல், நாறுகள் நடுகின்ற வயலில் இருந்து தெறித்திருக்கிற சேற்றுத்துளியுடன் உலாவுவார்கள். (தனங்கள்-செப்பு; சேற்றுத்துளி—நீலமணிகள். கொடிகள்—பெண்கள்) (36)

இல்லுன்மழக் குழவி உள்ளி உள்ளிப்போம் எருமை ஈட்டம்,
செல்லுழிப் பொழிந்த பாலைத் தொடர்ந்துபோம் செங்கால் அன்னம்,
மல்லலம் தீம்பால் ஆழி மடுத்தெழும் மழைக்கார்ப் பின்னர்
நல்லெழிற் பனிவெண் திங்கள் நடப்பதே கடுப்ப தம்மா

பொழிப்புரை: வீட்டினிடத்திருக்கின்ற கன்றுகளை அடிக்கடி நினைத்துக் கொண்டு செல்லுகின்ற எருமைக் கூட்டம் பொழிந்த பாலை, உண்ணத் தொடர்ந்து போகின்ற செங்கால் அன்னங்கள், வளப்பம் பொருந்தியதாய் அழகும் சுவையும் மிக்க பாற்கடலில் பாலையுண்டு மேலே எழுகின்ற மேகத்தின் பின்னர், நல்ல அழகும் குளிர்ச்சியும் வெண்மை நிறமுமுள்ள சந்திரன் நடப்பதை ஒக்கும். (எருமைகள் மேகமும், அன்னங்கள் சந்திரனும் போன்றன) (37)

கொய்தன உகுத்த மெல்லென் கொழுமலர்க் குப்பை நாப்பண்
பெய்தன கவரிப் பாலும், பிரசமுப் பழத்தின் சேறும்,
மொய்தரத் தொண்டை நாட்டு முதுகுடிப் பிறந்த சான்றேர்,
எய்திய விருந்தை யூட்டும் இல்லெனப் பொலிந்த சோலை.

பொழிப்புரை: கொய்தற்குரிய முல்லைக் கொடிகள் உதிர்த்த மென்மையும் செழுமையும் மிக்க மலர்க்குவியல்களின் நடுவில், கவரிமான்கள் சொரிந்த பாலும், மலர்களின் தேனும், மா பலா வாழை ஆகிய முக்கனிகளின் சாறும் நிரம்பி நிற்கும் சோலைகள் எல்லாம், தொண்டை நாட்டில் வாழ்கின்ற பழமையான குடில்களில் பிறந்த சான்றேர்கள், தங்கள்பால் வந்த விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கும் வீடுகள்போல விளங்குகின்றன. (தளவு-முல்லைமலர். குப்பை-குவியல். பிரசம்-தேன். முல்லை மலர்க்குவியல் சோற்றுக் குவியல்போல விளங்க, கவரிமானின் பாலும், தேனும் முப்பழங்களின் சாறும் விருந்தோம்பும் உணவுப் பொருள்கள் போல விளங்கின என்பது கருத்து.) (38)

பழக்குவை தழைக்கும் தாழைப் பாகுஅட்ட கட்டிக் குப்பை,
எழக்குவி கன்னற் குன்றம், இடும்மலர்க் குவால்,மற் றெல்லாம்
முழக்கிய அறுகால் மொய்ப்ப, மருதத்து முதல்வன் காய்ந்த
வழக்கமது அஞ்சி, நீல வரைபுரி வணக்கம் ஏய்க்கும்.

பொழிப்புரை: முப்பழக் குவியல்களும், தழைகின்ற தென்னஞ்சாறு கருப்பஞ்சாறு காய்ச்சுதலால் உண்டாகின்ற வெல்லக்கட்டியின் குவியல்களும், கீழே சிதறியிருக்கும் மலர்க்குவியல்களும் ஆகிய பலவற்றிலும் வண்டுகள் மொய்த்துக் கொண்டிருத்தல், மருதநிலத்துக் கடவுளாகிய தேவேந்திரன், மூன்று மலைகளின் சிறகுகளை அரிந்த முறைமைக்கு அஞ்சி, அவ்விந்திரனை நீல மலை வணக்கஞ் செய்தலை ஒக்கும். (மேற்கூறிய பழம் முதலிய பொருள்கள் மலை போல் குவிந்து கிடக்க, அவைகள் மறையும்படி வண்டுகள் மொய்த்து ஒலித்துக் கொண்டிருத்தலால், வண்டுகளை நீல மலை என ஆசிரியர் உருவகம் செய்தார்.) (39

கொம்புடைப் பொதும்பர் தோறும் கொண்டல்கள் துயின்று, வாசம்
தம்புடைக் கொண்டு மீண்டு, தரையிடைச் சொரியும் ஆற்ருல்,
அம்புடைப் போதும் அன்றி, அளப்பில் உய்யானம் பூத்த
வம்புடைப் போதும் நாறும் வாவிகள் நதிகள் யாவும்.

பொழிப்புரை: கொம்புகளையுடைய சோலைகள்தோறும், மேகங்கள் தங்கியிருந்து, அந்தச் சோலை மலர்களிலுள்ள வாசனையைத் தம்மிடத்தில் பொருந்தக் கொண்டு, அங்கிருந்து நீங்கிப் பூமியினிடத்தில் மழை பொழியும் முறைமையால், அந்நீரிலுள்ள மலர்களின் வாசனை மட்டுமே அல்லாமல், அளவில்லாத நந்தனவனங்களிற் பூத்த மலர்களின் வாசனைகளையும், தடாகங்களும் நதிகளும் கமழ்ந்து கொண்டிருக்கும். (40)

மாந்தளிர் நிறத்தி ஞரும், மதன்ஒத்த வடிவத் தாரும்,
போந்திளம் பிடிக ளோடு பொருகளிறு ஆடி யாங்குத்,
தேந்தடம் குடையச் சிந்திச் சிதைந்தமான் மதத்தின் சேறும்,
சாந்தமும் கமழ்ந்து வாளை தலைத்தலை உகளும் மாதோ

பொழிப்புரை: மாந்தளிர் போன்ற நிறமுள்ள மாதர்களும், மன்மதனை யொத்த அழகுள்ள ஆடவர்களும், இளம் பருவமுள்ள பெண் யானைகளுடன் ஆண்யானைகள் சென்று விளையாடுவது போல், இனிமைமிக்க நீர்த்தடாகங்களில் விளையாடுதலால் சிந்திக் கலங்கியிருக்கும் மான்மதம் என்னும் கத்தூரிக் குழம்பின் வாசனையும், சந்தன வாசனையுமாகக் கமழ்ந்து கொண்டு வாளை மீன்கள் இடங்கள்தோறும் தாவிக் கொண்டிருக்கும். (41)

காவியும், கமலப் போதும், கயிரவத் திரளும், கான்ற
வாவியின் மதுவுண்டு, உம்பர் வாவிய வாளைக் கொள்ளை,
ஓவியத் தினியோர் கண்டத்து உகும்முத்து நீலம் போலத்,
தீவிய கமுகிற் பாளை அளியொடு சிதறும் அன்றே

பொழிப்புரை: நீலோற்பல மலர்களும், அழகிய தாமரைமலர்களும், செவ்வல்லிமலர்களும் சொரிந்த தடாகங்களிலிருக்குந் தேனையருந்தி, வானகத்தில் தாவிய வாளைக்கூட்டங்கள், ஓவியம் போல் அழகுள்ள மாதர்களுடைய கழுத்திலிருந்து உண்டாகும் முத்துக்கள் போலவும் அவர்கள் கழுத்தினில் அணிந்திருக்கும் நீலமணிகள் போலவும், சுவைமிகுந்த கமுகமரங்களின் பாளைகளை அவைகளில் மொய்த்துக் கொண்டிருக்கும் வண்டுகளுடன் சிதறிவிடும்.

(கமுக மரத்தின் கழுத்து மாதர்களுடைய கழுத்துக்கு ஒப்பாகச் சொல்லப்படுவதாதலால், அம்மரத்திலிருந்து உதிருகிற பாளைப்பூக்களை, மாதர்களுடைய கண்டத்திலிருந்து உதிருகின்ற முத்தெனக் கூறினர்.) (42)

பங்கயப் பவளச் சேக்கைப் பள்ளிகொண் டெழுந்த அன்னம்,
கொங்கொளிர் சிறையின் பின்போம் கொழும்சுரும்பு ஒழுங்கின் கோலம்,
செங்கையிற் கருங்க யிற்ருல் செழுந்துகிற் கதலி விட்டான்
மங்குலின் வருணன் என்ன வைகுவ பொய்கை எல்லாம்.

பொழிப்புரை: தாமரை மலர்களாகிய செம்மை நிறமுள்ள சேக்கையினிடத்துப், பள்ளி கொண்டிருந்து எழுந்த அன்னப் பறவைகளினுடைய, வாசனை வீசுகின்ற சிறகின் பின்செல்லும் செழுமையுள்ள வண்டொழுங்கின் கோலமானது, சிவந்த கையிற் பற்றிக் கொண்டிருக்குங் கருமை நிறமுள்ள கயிற்றினுலே, செழுமைமிக்க ஆடையாகிய காற்றுடியை, வருணன் மேக மண்டலத்தில் விடுவது போல், தடாகங்கள் எங்கும் பொருந்தியிருக்கும்.

(வண்டொழுங்கு கருங்கயிருகவும், அன்னங்கள் ஆடைக் காற்றுடியாகவும், தாமரை இலைகள் மேகமாகவும், தடாகத்து நீர் வருணனுகவும், அத்தடாகத்திலிருக்குஞ் செந்தாமரை மலர்கள் வருணனுடைய கையாகவுங் கொள்க). (43)

ஆங்குலகு அனைத்தும் நோக்கி, அவாவினுக்கு அமைத ராவாய்
நீங்குபன் னிருவர் கண்கள் அறுநான்கும் நிரம்ப நோக்க,
ஓங்கும்இத் திருநாட் டெல்லை உட்படு கோட்டம் எண்மூன்று,
ஈங்குநல் வளத்தி னோடு, மயன்வைத்த தெனலாம் அன்றே

பொழிப்புரை : உலகங்களை எல்லாம் பார்த்துப் பார்த்து, ஆசைக்கு அமைவு பெருமல், அவை களை விட்டு நீங்குகின்ற பன்னிரண்டு சூரியர்களுடைய இருபத்து நான்கு கண்களாலும் நிறையக் காணும்படி, ஓங்கியிருக்கிற இந்தத் தொண்டை நாட்டு எல்லைக்கு உட்பட்ட இருபத்து நான்கு கோட்டங்களையும், நல்ல வளப்பத்துடன் மயன் என்று பெயருள்ள தேவதச்சன் ஏற்படுத்தி வைத்தாற் போன்றன என்று சொல்லலாம். (44)

அன்ன கோட்டம்எண் மூன்றினும் ஆன்றமை
நன்னர் வான்குடி நாதரும் மாதரும்
முன்னை மாலும் அளப்பிலன் முண்டகப்
பொன் அனுளும் அளப்பிலள் போல்வரால்

பொழிப்புரை : அத்தன்மையாகிய இருபத்து நான்கு கோட்டங்களிலும், நிறைந்தமைந்திருக்கும் நன்மையுஞ் சிறப்புமுள்ள குடிகளாகிய ஆடவர்களும் மாதர்களும், (செல்வத்தினலும் அழகின லும்) அளவில்லாத திருமால்களையும், தாமரைப்பூவில் வீற்றிருக்கும் அளவில்லாத இலக்குமிகளை யும், ஒப்பாவர்கள். (45)

கடிய நாமத்த, காப்பும் வதுவையும்
வடிவுமே அல்லது இல்லை, அவ் வைப்பெலாம்;
கொடிய, வானவன் குன்றமும் மாடமும்
நெடிய கானும் நிகழ்த்தலும் ஆமரோ.

பொழிப்புரை : கடியவென்னும் பெயரை உடையவை, காவலும் கலியாணமும் நிதம்பமுமே அல்லது அந்த நாடெங்கும், வேறேயில்லை. கொடிய வென்னுஞ் சொல்லை அங்கிருக்கும் பரம சிவத்தின் மலைக்கும் வீடுகளுக்கும் நீண்ட காடுகளுக்குமே, ஒரு வகையிற் சொல்லலாகும் (கடி—காவல், திருமணம், அல்குல்; கொடிய—கொடிகளையுடையவை.) (46)

ஊடும் போதும் வழாத உரையினர்
நீடும் கேள்வர் செயற்கு நிழல் அனர்
சூடும் மாமுல்லைத் தோகையர் மண்ணிடைக்
கோடி சாலி பிறந்தன்ன கொள்கையார்.

பொழிப்புரை : தம் தம் கணவர்களுடன் ஊடுகிற காலத்திலும், தவறுதலில்லாத சொல்லையே பேசுபவர்கள், நீடிய கணவர்கள் செய்யும் அறங்கட்கு அவர்களின் நிழலை ஒத்தவர்கள், தம் கற்பிற்கு அடையாளமாக முல்லைப்பூமாலை சூடிக் கொண்டிருக்கும் அந்த மாதர்கள், இவ் வுலகத்தில் அநேகம் அருந்ததிகள் பிறந்திருத்தலை யொத்தவர்கள்.

(தத்தங் கணவர்களின் செய்கைகளுக்கு ஒத்து நடப்பதனல், "நிழலனர்" என்றும், கற்புள்ளவர்கள் என்பதற்கு அடையாளமாக "முல்லைத் தோகையர்" என்றுங் கூறினர். முல்லை என்னுஞ் சொல், முல்லை மலருக்கும், பதிவிரதா தருமத்துக்கும் பொருள்படும். சாலி—அருந்ததி.) (47)

கொழிக்கும் நூலினர், கோட்டம்இல் சிந்தையர்,
பழிக்கு மாநிலம் நல்கினும் பற்றிலார்,
மழிக்க நீட்ட எனச்செயும் வன்மையை
ஒழிக்க மாதவர் ஒத்துளர் மாந்தரே

பொழிப்புரை : அனேகம் நூல்களை ஆராய்ச்சி செய்திருப்பவர்கள், மாறு படாத சிந்தையுள்ளவர்கள், பெரிய உலகைக் கொடுத்தாலும் பழித்தற்குரிய செயலைச் செய்யமாட்டார்கள். தலையை மூண்டிதமாக மழித்தலும், சடைமுடியாக நீட்டலுமாகிய வன்மையை ஒழிக்கத் தக்க மாதவர்களை ஒத்திருப்பவர்கள் அந்த நாட்டின் மாந்தர்கள். (48)

விரவு வண்மையர், மெய்ம்மொழிக்கு இன்னுயிர்
உரவு நீர்எனத் தீப்புக்கு உதவினர்,
அரவின் வாயிற் கவர்ந்த அரதனம்
இரவின் ஈந்தவர், என்பிற ஈகலார்?

பொழிப்புரை : பொருந்திய வள்ளன்மை உள்ளவர்கள், தாங்கள் கூறிய சத்திய வார்த்தையின் பொருட்டு நீரிற் புகுவதுபோலத் தீக்குழியிற் புகுந்து தங்களின் இனிய உயிரைக் கொடுத்தவர்கள், பாம்பின் வாயிலிருந்து பெற்ற மாணிக்கத்தை இரந்துவந்த புலவருக்குக் கொடுத்தவர்கள், இத்தகைய சிறந்த தன்மையுடையவர்கள், மற்ற எப்பொருளைத்தான் கொடுக்கமாட்டார்கள் ?

(தீப்புக்கு உயிரைக் கொடுத்தது, திருவாலங்காட்டுப்பழையனூரில் ஒரு வணிகன் பொருட்டு. பாம்பின் வாயிற் கவர்ந்த மாணிக்கத்தைப் புலவருக்கு ஈந்தவர், அயனம்பாக்கம் சடையப்பமுதலியார் என்பர்.) (49)

நிறையும் கல்விக்கு அகன்கடல் நேர்பவர்,
பொறையும் ஆற்றலும் பூமகள் போல்பவர்,
மறையும் ஊழியும் அன்னதோர் வாய்மையர்,
உறையும் மன்னுயிர்க்கு அன்னையர் ஒத்துளார்.

பொழிப்புரை : நிறைந்த கல்வி கேள்விகளால் விரிந்த கடலைப் போன்றவர்கள், தாங்கும் தன்மையினாலும் பொறுமையினாலும் பூமிதேவிக்கு ஒப்பானவர்கள், வேதத்தையும் ஊழிக் காலத்தையும் போன்று மாருத உண்மையினை உடையவர்கள், உலகத்தில் வாழும் உயிர்களுக்குத் தாயர்களை ஒத்தவர்கள். (50)

சிந்து மாநிலம் காக்கும் திறநெறிப்
புந்தி யார்க்கு, ஒரு தாயம் புறந்தரா
வந்து, சாலிக் களத்து வகுத்துள
ஐந்து தாயத்தும் ஐந்துஅறம் ஆக்குவார்

பொழிப்புரை : கடல் சூழ்ந்த இவ்வுலகத்தைக் காக்கும் நல்ல நீதியை மறவாத அறிவுள்ள அரசனுக்கு, ஆறிலொரு கடமை கொடுத்துவிட்டு வந்து, நெற்களத்து வகுக்கப்பட்டிருக்கிற மற்றக் கடமை ஐந்தினாலும், ஐந்து அறமுஞ் செய்வார்கள்.

அரசன் கடமையொன்று போக, மிகுந்த ஐந்து பங்கு நெற்களைக் கொண்டு, பிதிரர் தெய்வம் விருந்துடன் சுற்றத்தாருக்கும் தமக்குமாகப் பகுத்துண்பவர்கள், ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை'' என்னுந் திருக்குறளானுமுணர்க.

செறுப்பம் என்றொரு சிந்தைசெய் வாரையும்,
கறுப்பம் என்னக் கனவிலும் சிந்தியார் ;
மறுப்பயின்று உயிர் வைகலின், வைகலும்
வெறுப்பர் திங்களை ; வேறுஎன்கொல் கூறுவேன் ?

பொழிப்புரை : தங்களைக் கொல்லுவோம் என்று ஒரு எண்ணங் கொண்டிருப்பவர்களையும், கோபிப்போம் என்று கனவிலும் எண்ணாதவர்கள், களங்கத்தைப் பொருந்தி உயிருடன் வாழ்தலினால் சந்திரனை நாள்தோறும் வெறுப்பவர்கள், ஆதலால், அந்த நாட்டு மாந்தர் தன்மை பற்றி வேறே யாது சொல்வாம்,

காணில் துன்னென்று எழுந்து கலந்தெதிர்
பேணிச் சென்று,பைந் தேன்உகப் பேசிப்பின்
பாணிக்கு ஏய்ந்தன ஏந்து, பழிச்சுமை
நாணித் தாழ்வர் அந் நாட்டுறை மாந்தரே

பொழிப்புரை: இரவலர்கள் வரக்கண்டால் விரைவில் எழுந்து எதிர்சென்று, விரும்பித் தேன் சிந்துவதுபோல உபசார வார்த்தை சொல்லிப் பின்பு தங்கள் கையிலுள்ள, பொருளைக் கொடுத் பழியாகிய சுமைக்கு உள்ளத்தில் நாணித் தாழ்வார்கள் அந்த நாட்டு வாழுமாந்தர்கள்,

கங்க ணத்தர வன்சடைக் கானமும்,
பொங்கு அர்த்த விழியன் புயங்களும்;
தங்கள் நற்குலத் தாய்மனை யாய் உளசர்
எங்கு இவர்க்கு எதிர்எனப் இனசப்பதே

பொழிப்புரை: பாம்பு ஆகிய கங்கணம் அணிந்திருக்கும் பரமசிவனது சடைக் காடும், விளங்கு கின்ற செங்கணான் என்னும் பெயருள்ள ஒரு சோழ மகாராசனுடைய புயங்களும், தங்கள் நற்குலத் தாயாராகிய கங்காதேவியிடமாகவும், பூமி தேவியின் இடமாகவும் உள்ள இத்தன்மை பொருந்திய இவர்களுக்கு ஒப்பு, எவ்விடத்துண்டென்று சொல்லலாமென்று பெரியோர்கள் சொல்வார்கள்.

செங்கணான் என்னும் அரசன், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய கோச் செங்கட் சோழநாயனார்.

இத்தி றத்தவர் யாரும் இடந்தொறும்
மொய்த்த தொண்டைநல் நாட்டிடை முக்கணன்
மெய்த் தவர்க்கு வெளிப்படு கின்றதோர்
உத்தமப் பதியுண்டு அது இயம்புவாம்.

பொழிப்புரை: இத்தன்மையை உடைய எல்லாரும் தத்தம் பதிகள்தோறும் நெருங்கியிருக்கும், நல்ல தொண்டை நாட்டினிடத்தில், மூன்றுகண்களையுடைய சிவபிரான் உண்மையான தவமுள் ளவர்களுக்கு வெளிப்பட்டுக் காட்சி கொடுக்கும்படியான உத்தமத் தலம் ஒன்றுண்டு. அதன் சிறப்பினை இனிச் சொல்லுகிறோம்.

நாட்டுப் படலம் முற்றியது.

## நகரச் சருக்கம்.

வடகலையின் எடுத்தகங்கா சலபுரியைத் தென்நூலின் வகுத்துத் தொல்லோர்
இடனுடைய கழுக்குன்ற நகரம்எனக் கடையுகத்தின் இசைப்பர்; இவ்வூர்
கடவுளரும் அருந்தவரும் மால்அயன்இந் திரன்ஆதிக் கணத்து ளோரும்
தடவிசும்பின் உழிநின்று காண்தொறும்பூ மழைபொழிந்து தாழ்வ தம்மா

பொழிப்புரை: வடமொழியிற் கூறிய கங்காசலம் என்னும் தலத்தைக், கலியுகத்தில் தமிழ் நூலால் முன்னோர்கள் வகுத்துத் திருக்கழுக்குன்றம் என்னும் பெயர் கூறினர். இத்தன்மை யுள்ள இப்பதியானது, தேவர்களும் முனிவர்களும், திருமால் பிரமதேவன் தேவேந்திரன் முதலான கூட்டத்தாரும், பெரியவானத்திலிருந்து தரிசிக்குந்தோறும் பூமாரி பொழிந்து பணி யப்படுவது ஆகும். (56)

(வேறு)

தணி வலம்புரி, அன்ன சாலம் மேற் கலந்து
அணிநகர் வலம்புரிந் தருளும் கங்கைபோற்
பணியகம் தெரிதரும் கிடங்கு, பாங்கர்சூழ்
மணிமதில் உடுத்தன மறுகும் கோடியே

பொழிப்புரை : தணிவுள்ள வலம்புரிச் சங்குகளையும், அன்னப்பறவைக் கூட்டங்களையும், தன்னிடத்திற் பொருந்தி. அழகிய நகரத்தை வலஞ்செய்கின்ற கங்கையைப் போல, நாகலோகந் தெரியும்படியான ஆழமுள்ள அகழியானது பக்கத்திற் சூழ்ந்த, மணிகள் பதித்த மதில்களாற் சூழப்பட்டனவாகிய வீதிகளும், அங்கே அளவில்லாதன இருக்கின்றன. (57)

பளிக்கினத் தினும், இந்து பரிதிக் காந்தத்தும்,
குளிக்கும் நித் திலம்முதல் மணிக் குழாத்தினும்,
ஒளிக்கிருள் இரிதரும் ஒண்பொன் ஈட்டினும்,
தெளிக்கும்நூல் விதிசெய்த திருவிற் கோடியே

பொழிப்புரை : பளிங்குக் கற்கூட்டத்தினாலும், சந்திரகாந்தக் கற்களினாலும், சூரியகாந்தக் கற்களினாலும், கடலில் மூழ்கி எடுக்கும்படியாகிய முத்து முதலிய இரத்தினக் கூட்டத்தினாலும் தன் ஒளியினால் இருள் நீங்கச்செய்யும் பொன்னின் கூட்டத்தினாலும், தெளிவுள்ள சிற்ப சாத்திர விதிப்படி அமைத்திருக்கிற செல்வமுள்ள வீடுகள் அங்கே அளவற்றனவாக உள்ளன. (58)

வேசவெற்பு என்பது வெற்பு அனந்தமாய்த்
தீதறக் கொழுந்துவிட் டெழுந்து தேவரைப்
பாதகத் திடர்துடைக் கின்ற பான்மையே
ஆதல்ஒத் தனகொடி ஆடும் மாடமே

பொழிப்புரை : வேதகிரி என்று சொல்லப்படும் ஒரு மலையானது, பற்பல மலைகளாய்க் குற்றமறக் கொழுந்து விட்டெழுந்து, தேவர்களுடைய பாவமாகிய துன்பத்தைத் துடைத்து நீக்கிவிடுந் தன்மைபோல, மாடங்களின் மேல் பெரியகொடிகள் ஆடிக் கொண்டிருக்கும். (59)

பத்தி நீலத்தினும் பவளம் தன்னினும்
ஒத்து வேறுஇரு திறத்தொளிரும் மாடங்கள்,
முத்தின் மாளிகை ஒளிமூழ்க நீறுதோய்
சத்தி பாகன் எனத்தயங்கும் எங்குமே

பொழிப்புரை: வரிசை வரிசையாக நீலரத்தினங்களினாலும், பவளங்களினாலும் அமைக்கப்பட்டு, வெவ்வேறு இரண்டுவகையாக ஒளி வீசுகின்ற வீடுகள், முத்துக்கள் பதித்த வீடுகளின் ஒளியில் மூழ்கிப், பார்வதியை இடப்பாகத்திலுடைய பரமசிவனைப் போல, எங்கும் விளங்கிக் கொண்டு இருக்கும்.

(ஒருபுறம் நீல ரத்தினங்களினாலும், மற்றொரு புறம் பவளங்களினாலும் செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டின்மேலும், வேறே ஒவ்வொரு வீடுமுழுவதும் பதிக்கப்பட்டிருக்கிற முத்துக்களின் ஒளி பாய்வதினால், அர்த்தநாரீசுவர மூர்த்தம் போல் அந்தவீடுகள் முழுமையும் விளங்குகின்றன என்பது கருத்து. நீலம்—அம்மை. பவளம்—சிவபிரான் என்க) (60)

முழுநிலாப் பளிக்கறை முன்றில் எங்கணும்
கொழுவிய மரகதக் குட்டி யத்துவாய்
விழுமிய மாணிக்கத்து இயன்ற வேதிகை
தெழிகடல் அரியுரத் திருவை மானுமால்

பொழிப்புரை : முழு நிலாவின் ஒளியுள்ள பளிக்கறை முற்றங்களிலெல்லாம், அழகிய பச்சை நிறம் உள்ள மரகத மணிகள் பதித்திருக்கிற இடங்களில், மேன்மை பொருந்திய மாணிக்கங் களினுற் செய்யப்பட்டுள்ள வேதிகைகள், அலைகளை வீசுகின்ற திருப்பாற் கடலிற் பள்ளிகொண் டிருக்கும் திருமாலின் மார்பினிடத்தில் வீற்றிருக்கின்ற திருமகளுக்கு ஒப்பாகும். (பளிக்கறை பாற்கடலாகவும், மரகதம் பதித்த இடம் திருமாலாகவும், அதன் நடுவிலிருக்கும் மாணிக்க வேதிகை திருமகளாகவும் உருவகம் செய்யப்பெற்றது. குட்டியம்—சுவர். "குட்டியம் இன்றி நற்கோலம் எழுதுதல்" என்பர் சங்கற்ப நிராகரணத்தில் உமாபதி சிவம்) (61)

வெண்நிறச் சுதைபொதி மேற்றளந் தோறும்
பண்நிறப் பவளத்துப் பகுத்த தூவிகள்
கண்ணகன் விசும்பிடைக் கங்கை பூத்தெழும்
அண்ணல்அம் கமலங்கள் அனந்தம் ஒத்தவே

பொழிப்புரை : வெண்மை நிறமுள்ள சுண்ணும்பு தீட்டிய மேன்மாளிகைகள் எங்கும், நல்ல நிறமுள்ள பவளங்களினுலே செய்து வைத்திருக்கிற கலசங்கள், இடமகன்ற வானத்தினிடத்திற் செல்லும் கங்கா நதியினிடத்திற் பூத்து விளங்குகின்ற, பெருமை பொருந்திய எண்ணற்ற செந் தாமரை மலர்கள் போல இருக்கின்றன. (62)

பேதையர் மரகதம் பிறங்கு பாசறை
மீதமர் வண்டலின் வீழ்த்த நித்திலம்
தாதவிழ் பங்கயத்து இலையில் தங்கிய
ஓதவெண் புனல்துளி ஒளிர்வது ஒக்குமால்

பொழிப்புரை : சிறு பெண்கள், மரகத மணியினுல் அமைந்திருக்கிற பசிய நிறமுள்ள சிறு வீடுகளில் பொருந்திய விளையாட்டில் விழுத்திய முத்துக்கள், மகரந்தங்களோடு மலருகின்ற மலர்களையுடைய தாமரையிலையிற் பொருந்திய வெண்மை நிறமுள்ள அலைநீர்த்துளிகள், ஒளி வீசுதல் போல உள்ளன. (63)

கூட்டுறும் பூவைகள் கூறும் ஆகமம்
வேட்டு எகினமும் மகிழ்தூங்கும் வேட்கையில்
பேட்டொடும் உருகலைப் பிரிந்து பைங்கிளிப்
பாட்டொடும் உருகுப கபோதப் பந்தியே

பொழிப்புரை: கூடுகளில் பொருந்திய நாகணவாய்ப் பறவைகள், ஆகமவாக்கியங்களைச் சொல்லும் ; அந்த வாக்கியங்களை விருப்பமுடன் கேட்டு அன்னப் பறவைகள் மகிழ்ச்சி அடையும். தங்கள் தங்கள் பெட்டைகளிடத்தில் விருப்பமுற்று மனமுருகிக் கொண்டிருப்பதை விட்டு நீங்கிப், புருக்கூட்டங்கள் பசுமைநிறம் வாய்ந்த கிளிப்பிள்ளைகள் பண்ணுடன் பாடும் தேவாரமாகிய பாடலைக் கேட்டு மனம் உருகி நிற்கும். (64)

உருத்திர கோடியர் நந்தி உம்பரோடு
அருத்தியிற் பணிந்தமை அறையும் ஆற்றினும்
கிருத்திரன் தொழுவதே கிளிபல் காற்சொலும்
தரித்தெழும் அண்டசம் தாமும் என்பவே

பொழிப்புரை : கோடி உருத்திரர்களும், நந்திதேவரும், தேவர்களும் அன்புடன் வந்து பணிந்த சரிதத்தைச் சொல்லும் முறைமையைப் பார்க்கிலும், கிருத்திரன் என்பவன் தொழுத சரிதத் தையே கிளிப்பிள்ளைகள் பலமுறை சொல்லும். அதைக் கேட்டுக் கொண்டிருந்த பறவைகள், அந்தச் சரித்திரங்களை மனத்திலே பதித்துக்கொண்டுபோகும் என்று சொல்லுவார்கள் பெரியோர்கள், (அண்டசம்—முட்டையிற் பிறக்கும் பறவைகள்). (65)

மாளிகை மேற்கொடி மருங்கு போம்முகில்
நீளிய மெய்புடைத்து உகுத்த நித்திலம்
தோள்இணைத் தொடியினுர் தொகுதி போதரும்
தாள்இணை மெலிதரத் ததையும் வீதியே.

**பொழிப்புரை:** மாளிகைகளின்மேற் கட்டியிருக்கிற கொடிகளின் பக்கமாகச் செல்லுகின்ற மேகங்களின் பெரிய உடல், அக்கொடிகளால் அடிபட்டுச் சிந்திய முத்துக்கள், வளையல்கள் அணிந்த கைகளையுடைய மாதர்களின் கூட்டஞ் செல்லுகின்ற வீதிகளில், அவர்களுடைய பாதங்கள் வருந்தும்படி குவிந்து நெருங்கியிருக்கும். (66)

கொடியொடு தருவும்மின் னுடுபொற் கொண்டலும்
பிடியொடு களிறுமே பிணைத்த வாறென
வடியொடு பொருங்கணுர் வதுவைப் பல்லியத்து
இடியொடும் திரிவரால் எண்ணில் மாந்தரே.

**பொழிப்புரை:** காமவல்லி என்னும் கொடிகளுடனே, கற்பக மரங்களும், மின்னலுடனே பொலிவுள்ள மேகங்களும், பெண் யானைகளுடன் ஆண் யானைகளும் சேர்ந்து செல்லும் முறைமைபோல, மாவடுவின் பிளவினை ஒத்த கண்களுள்ள தத்தம் மனைவியருடன், அளவற்ற ஆடவர்கள், பல வகை வாத்திய முழக்கங்களுடன் வீதிகளில் மணக்கோலமாகச் செல்வார்கள். (வடி—மாவடு) (67)

முழாவொலி யாழொலி முக்கண் நாயகன்
விழாவொலி மணத்தொலி வேள்வி யாவையும்
வழாவொலி மறையொலி வானை யும்கடந்து
எழா ஒலி கடல்கிளர்ந் தென ஒலிக்குமால்

**பொழிப்புரை:** முழவின் ஒலியும், வீணையின் ஒலியும், சிவபெருமான் திருவிழாக் கொண்டருளுதலால் உண்டாகும் வாத்தியங்களின் ஒலியும், திருமண வாத்தியங்களின் மங்கல ஒலியும், யாகங்கள் செய்யுமிடம் எங்கும் வழுவாத சடங்குகளின் ஒலியும், வேத பாராயண ஓசையும், தெய்வலோகத்தையுங் கடந்து எழுந்து, ஆரவாரிக்கின்ற கடல் மேலோங்கினதுபோல் ஒலிக்கும். (68)

மன்னுயிர் பவம்தொறும் வந்து வந்துபோம்
முன்னைய வினைஎன, முத்த மேடைவாய்
மின்னிய உறுப்பெலாம் அடைந்து, மீண்டெழக்
கன்னியர் புடைப்பர் பொற்கந் துகங்களே

**பொழிப்புரை:** நிலைபெற்ற உயிர்கள். பிறவிதோறும் வந்து வந்து செல்வதற்குக் காரணமான பழவினைகளைப் போல, முத்தங்களாலாகிய மேடைகளிடத்தில், விளங்குகின்ற உறுப்புகளை எல்லாம் அடைந்து, மறுபடி மேலேயெழும்பும்படி மாதர்கள் அழகிய பந்துகளை அடிப்பார்கள். (கந்துகம்—பந்து). (69)

வெண்மணிச் சந்திர காந்த மேல்நிலைத்
தண்மணித் தூணிடைத் தொடுத்துத் தையலார்
வண்மணி ஊசலும் மழவ ராயவர்
உண்மணி ஊசலும் உடன்கொண்டு ஆடுவார்

**பொழிப்புரை:** வெண்மணியாகிய சந்திரகாந்தக் கல்லினுற் செய்யப்பட்ட மேன்மாளிகையில், குளிர்ச்சி பொருந்திய முத்துக்களால் ஆகிய தூண்களிடத்தில், கட்டப்பெற்றுள்ள மணி ஊசலையும், தத்தம் கணவர்களுடைய உள்ளமாகிய மணி ஊசலையும், ஒருங்காகக் கொண்டு மாதர்கள் ஆடுவார்கள். (ஊசலிடத்திலிருந்து ஆடினுலும் தத்தங் கணவர்களின் உள்ளத்தை விட்டு

நீங்காமல் இருக்கின்றார்கள் என்பது தோன்ற "உண்மணிஊசலும் உடன்கொண்டாடுவார்" என்று கூறினார். 'மழவர்ஆயவர்' என்பது, இளமைப் பருவமுள்ளவர்கள் எனப் பொருள் படுமாறு உணர்க). (70)

அறங்கள் எண் நான்கும் ஓம்பும் அறப்பெருஞ் சாலை யாலும்,
நிறம்கிளர் வெறுக்கை யாலும், நிகழும்நூற் கழகத் தாலும்;
திறம்கெழும் இமயம் என்னும் சிலம்பும்செங் கமலப் போதும்
மறம்கடி கடவுள் வெண்டா மரையுமே மனைகள் எல்லாம்

பொழிப்புரை: முப்பத்திரண்டு அறங்களையுஞ் செய்யும்படி அமைந்த அறப்பெருஞ் சாலைகளினாலும், ஒளிவிளங்கும் பொன்னினாலும், வழங்குகின்ற நூல்களைப் பயிற்றும் கல்விக் கழகங்களினாலும், நன்மை பொருந்திய இமயம் என்னும் மலையும், செந்தாமரை மலரும், பாபத்தை நீக்கிய தெய்வத்தன்மையுள்ள வெண்டாமரை மலரும் போன்றுள்ளன. (அழகிய வீடுகள் எல்லாம், முப்பத்திரண்டு அறங்களும் வளர்த்த பார்வதி தேவியார் வளர்ந்த இடமாதலால் இமயமலை என்றும்; பொன் தருந் திருமகளுக்கு இடமாதலால் செந்தாமரை மலர் என்றும்; கல்வியைத் தரும் சரசுவதிக்கு இடமாதலால் வெண்டாமரை மலர் என்றும், திருக்கழுக்குன்றத்தில் உள்ள வீடுகளைப் புகழ்ந்து கூறினார்.) (71)

முப்பழம் பொதிந்த வாவி மூவகைத் தலைத்தெண் நீரைத்
தப்பற நறைகொண்டு ஊட்டிச் சந்தனப் பந்தர் ஈட்டி
வெப்பொழி தரப்பெய் வாரும், விருந்தயல் வைகத் தேவர்
துய்ப்பதும் கரந்துண் ணாரும், ஆயினர் தொலைவி லாரே.

பொழிப்புரை: முப்பழங்கள் நிறைந்துள்ள, குளங்கள் முதலிய மூன்று வகை இடத்திலுள்ள தெளிவான நீரைக், குற்றம் அற வாசனை சேர்த்துக் கலந்து, சந்தனப் பந்தர்கள் அமைத்துத், தாகவெப்பம் நீங்கும்படி உண்பவர்களுக்குக் கொடுப்பவர்களும்; விருந்தினர் அயலில் வந்திருக்கத் தாங்களுண்பது தேவர்களுண்ணும் அமுதம்போல்வதே யானாலும், அவ்விருந்தினரை நீக்கி உண்ணாதவர்களும் ஆக, அந்நகரத்தில் இருக்கும் அளவில்லாத மாந்தர்கள் அனைவரும் இருப்பர்.

(ஈண்டுக் கூறிய முப்பழமாவது கடுக்காய்ப்பழம், நெல்லிப்பழம், தான்றிப்பழம் என்று உணர்க. இம்முப்பழத்துக்கும் திரிபலை அல்லது திரிபலம் என்பது ஒரு குழூஉக்குறிப் பெயர். சூத்திரம். "திரிபலையாவது, கடு—நெல்லி—தான்றி". உண்பவர்களுடைய உடல் நலத்தின் பொருட்டு மேற் கூறிய முப்பழ நீரைவார்ப்பதுமன்றித், தேவர் அமுதத்துக்கு ஒப்பாகிய பண்டங்களேயானாலும் விருந்தினருக்கு முன் ஊட்டியே மிகுதியைத் தாங்கள் உண்பார்கள் என்பது கருத்து. முப்பழம் என்பதனை,

"விலக்கில் சாலை யாவர்க்கும் வெப்பின் முப்பழச் சுனைத்
தலைத்தணீர் மலரணிந்து சந்தனஞ் செய்பந்தரும்"

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளில் "வெப்பில் முப்பழச் சுனைத்தலைத் தணீர்" என்பதற்கு "நோயறுத்தற்குக் கடு—நெல்லி—தான்றி—சூழவளர்ப்பர்" என்னும் நச்சினார்க்கினியர் உரையானும் உணர்க. மூவகையிடமாவது, சுனை, குளம், ஆறு.) (72)

எம்பிரான் திருவுலா இன்று ஏற்றெடு வரும்என் பாரும்,
செம்பொனின் தேர்என் பாரும், திவ்விய சாந்தம் சாத்தி,
உம்பர்சூழ்ந் தெழும்என் பாரும், ஒண்பளி தத்தூள் மாற்றி
வெம்பனி நீர்பெய் வாரும், அளப்பிலர் வீதி எல்லாம்.

**பொழிப்புரை:** எம்முடைய கடவுளாகிய வேதகிரீசுவரர், இன்றைய தினம் எருதூர்தி விழாக் கொண்டருளுவர் என்று சொல்லுகின்றவர்களும், இந்தத் தினம் செம்பொன்னால் ஆகிய திருத் தேர்விழா என்று சொல்லுகின்றவர்களும், திவ்வியமாகிய சாந்தஞ்சாத்திக் கொண்டு தேவர்கள் சூழ்ந்துவர இன்று விழாக் கொண்டருளுவர் என்று சொல்லுகின்றவர்களும், ஒளியுள்ள பச்சைக் கர்ப்பூரத்தூளை மாற்றி விருப்பந்தரும் படியான பனிநீரைத் தெளிக்கின்றவர்களுமாக அளவில்லா தவர்கள் வீதிகளெங்கும் இருப்பார்கள். (73)

கைதிகழ் களிநல் யானைக் கார்உரி அரன்போர்த் தென்னச்
செய்தியிற் பவள மாடம் தீவிய தூமம் போர்ப்ப
வைதிகச் சைவ வேத மாந்தர்கள் மகங்கள் யாவும்
எய்திய விதியிற் செய்துஆங்கு எண்ணிய முடிப்பர் மன்னோ

**பொழிப்புரை:** துதிக்கையுடன் விளங்குகின்ற, களிப்புள்ள நல்ல யானையின் கரிய தோலைச் சிவ பெருமான் போர்த்துக் கொண்டதுபோல், அழகுறச் செய்யப்பட்ட பவளங்களினால் ஆகிய மாடங்கள் எங்கும், இனிமையுள்ள புகைகள் மூடும்படி வைதிகச் சைவ நெறியுள்ள அந்தணர்கள், வேள்விகளை எல்லாம் பொருந்திய விதிப்படி செய்து, தாங்கள் எண்ணிய செயல்களையெல்லாம் நிறைவேற்றிக் கொள்வார்கள். (ஆங்கு என்பது அசைநிலை). (74)

வேதத்திற் பொருப்பை யன்னார், ஆகம வேலைக்கு ஒப்பார்,
போதத்திற் பரிதி நேர்வார், புனிதத்திற் கங்கை போல்வார்,
சாதத்தின் அரனை ஒப்பர், தானத்தில் முகில் கடுப்பார்,
நாதத்திற் கடந்த சைவக் குரவர் அந்நகரின் மிகோர்

**பொழிப்புரை:** வேதப் பயிற்சியினால் அந்தத் தலத்திலுள்ள மலைக்கு ஒப்பாவர்கள். ஆகமப் பயிற்சியால் கடலுக்கு ஒப்பாவர்கள். ஞானத்தினாற் சூரியனையும், தூய்மையினால் கங்கை நதியினையும் போல்வார்கள். உண்மையினாற் சிவபெருமானுக்கு ஒப்பாவர்கள் தானங் கொடுப்பதினால் மேகத்துக்கு ஒப்பாவர்கள்; அந்த நகரிலிருக்குஞ் சான்றோர்கள் ஆகிய, நாத தத்துவத்தையுங் கடந்த சைவாசாரியர்கள். (ஆகம வேலையில் தமக்குத் தாமே ஒப்பாவர்கள் எனினும் அமையும்), (75)

சரியை ஆதிய அந்நான்கில் சாலோகம் ஆதி நான்கும்
கருதிய திறனே அன்பர்க்கு அருளிய கடைக்கண் நல்லோர்
திருவுருத் தேடிக் காணாச் செங்கண்மால் அயனும் தங்கள்
இருகையாய்த் தோன்றும் தோற்றம் இச்சிப்ப அருச்சிப் பாரே.

**பொழிப்புரை:** சரியை முதலாகிய நான்கினாலும், சாலோகம் முதலாகிய நான்கு பதவிகளையும், அவரவர்கள் விரும்பிய தன்மைப்படி, அன்பர்களுக்குக் கிடைக்கச் செய்த அருள் நோக்கமுள்ள பெரியோர்கள், சிவபிரானுடைய திருமேனியைத் தேடிக் காணாத திருமாலும், பிரமதேவனும் தாங்கள் இரண்டு கைகளுமாகப் பிறக்கத் தக்க பிறவியை விரும்பும்படி, சிவபெருமானை அருச்சிப்பார்கள். (76)

(பெரியோர்கள் அருச்சிப்பார்கள் எனக் கூட்டுக. பெரியோர்கள், தங்கள் உடைய இரண்டு கைகளுமாகப் பிரமவிட்டுணுக்கள் பிறக்கவேண்டும் என்று விரும்பும்படி அருச்சிப்பார் கள் என்பது கருத்து. சரியையாதி என்பவை, சரியை, கிரியை யோகம், ஞானம் என்பவை களாகும். சாலோகம் ஆதி நான்காவன, சாலோகம் சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பவை களாம். சாலோகம், சிவலோகத்திலிருப்பது. சாமீபம், சிவபிரானுக்குச் சமீபத்திலிருப்பது, சாரூபம், சிவபிரான்போல் திருமேனி பெற்றிருப்பது. சாயுச்சியம், சிவபிரான் திருவடியிற் கலப்பது. "தன்னுலகு தன்னருகு தன னுருவம் தன்னுள்ளே" என்பதினாலும் உணர்க. இது சிவானந்தமாலை.) (77)

அண்டர்தம் பெருமான் பாதத்து ஆனைந்தும் கரும்பும் தேனும்
விண்டமுக் கனியும் நாளி கேரமும் விரையின் சாந்தும்
கொண்டினிது ஆடும் தோறும் அஞ்சனம் குதித்த சேறு
வண்டொலி அருது மொய்க்கும் மாதவர் மடங்கள் மாதோ

பொழிப்புரை: தேவர்களின் பெருமானுகிய வேதகிரீசுவரருடைய திருவடிகளினிடத்தில், பஞ்ச கௌவியமும், கருப்பஞ்சாறும் தேனும் கனிந்து வெடித்த முப்பழச்சாறும், இளநீரும் வாசனைத் திரவியம் கலந்த சந்தனக் குழம்புமாகிய இவைகளால் இனிதாக அபிடேகஞ் செய்யுந்தோறும், அந்தத் திருமஞ்சனக் குழம்பு சிந்தின இடத்தில் ஓசைமாருமல் வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கும், மாதவர் மடங்களில் எல்லாம். (ஆனைந்து—பஞ்ச கவ்வியம். அவையாவன பால், தயிர், நெய், சாணம், கோசலம், என்பவை. பசுக்களினிடமாக உண்டாவதினுல் ஆன் ஐந்து எனக் கூறப்படுகின்றன). (78)

இந்திரன் பதத்திற் கேனும், எண்கணுன் உலகிற் கேனும்,
சுந்தரப் புவிஓர் ஏழும் தொழுதெழும் அரசிற் கேனும்,
செந்திருக் கடைக்க ணேடும் செங்கைஎட் காறும் நீறு
தந்தருள் செயிற் போதும் எனத்தக்கோர் தவத்தின் மிக்கார்

பொழிப்புரை: தேவேந்திரனுடைய பதவி கிடைப்பதைப் பார்க்கிலும், பிரமதேவனுடைய பதவி கிடைப்பதைப் பார்க்கிலும், அழகுள்ள ஏழுலகத்தாருந் தொழும்படியாகிய அரசாட்சி கிடைப்பதைப் பார்க்கிலும், அருள் நோக்கத்துடன் இவர்கள் கைகளால் எள்ளளவு விபூதி கொடுத்தருளினுல், இதுவே போதுமான செல்வமென்று யாவரும் மதிக்கத்தக்கவர்கள், அங்கிருக்குந் தவத்தால் மேலானவர்கள். (79)

கவளமால் கரித்தோல் போர்த்தோன் அனையவர் கடிஞை ஏந்தித்,
துவளவான் பசியுற் றெய்தக் கன்றுகாண் சுரபி போன்று
பவளமா தவ்வி மீதற் பரிதியின் பிரதியின் தென்னத்
தவள ஓதனம்இட்டு ஈவார் கணிப்பிலர் சைவ மின்னுர்

பொழிப்புரை: கவளங் கொள்ளும்படியான பெரிய யானையின் தோலைப் போர்த்த சிவபிரானுக்கு ஒப்பாகிய சிவயோகிகள், பலிப்பாத்திரத்தைக் கையிலேந்திக் கொண்டு, திருமேனி வாடும்படி மிகுந்த பசியடைந்தவர்களாய்த் தங்களிடத்தில் வந்தால், பிரிந்த கன்றினைக் கண்ட பசுவினையொத்து, மிகவும் பரிவுள்ளவர்களாய்ச் சூரியபிம்பத்தில் சந்திரன் பொருந்தியதுபோல், பவளத்தாலாகிய பெரிய சட்டுவத்தினிடத்தில், வெண்மைநிறமுள்ள சோற்றை வைத்துக் கொண்டு வந்து இடுவார்கள், அளவில்லாத சைவ மாதர்கள். (தவ்வி என்பது சட்டுவம்). (80)

நறுநெய்பால் தயிர் கருப்பஞ்சாறு எனும் நரலைப் பானம்
பெறுமுகில் வெள்ளிக் குன்றிற் பெய்தென அயினிக் குப்பை
செறியவிட் டவையும் பெய்து சிவன்திருத் தொண்டர் யார்க்கும்
நெறிவழாது அமுது செய்வித்து அறம்செய்வார் நியமம் எல்லாம்

பொழிப்புரை: நல்ல நெய் பால் தயிர் கருப்பஞ்சாறு என்னுஞ் சமுத்திரங்களில் பானஞ்செய்த மேகமானது, வெள்ளிமலையினிடத்தில் அந்நெய் முதலானவைகளைப் பொழிவதுபோல, மிகுந்த சாதம் பரிகலத்திற் பொருந்தும்படி படைத்து, அதன்மேல் நெய்முதலாகிய பொருள்களையும் படைத்துச், சிவனடியார்கள் யாவர்க்கும் முறைமை வழுவாமல் அமுது செய்வித்து, வீடுகள் எங்கும் தருமஞ் செய்வார்கள். (81)

எய்த்தநீர் யாண்டை யுள்ளீர்? ஈண்டு எய்தப் பெற்றது எங்கள்
மெய்த்தவம்; கிளையோடு உய்ந்தோம்; விழுமிது இந் நாள்என் றேத்திக்,
கைத்தலம் தழீஇக்கொண் டேகிக் கருத்தறிந்து ஆர ஆர்த்தி
வைத்திருந்து, அகன்றால் மீட்சி வேட்குநர் மாக்கள் எல்லாம்.

**பொழிப்புரை:** சிவனடியார்களைக் கண்ட அளவில், இளைத்திருக்கின்ற நீங்கள் எவ்விடத்திருப்பவர்கள்? நீங்கள் இங்கு வரப்பெற்றது எங்களுடைய சிறந்த தவமே! மேலும் தங்கள் வருகையால், நாங்கள் எங்கள் சுற்றத்தாருடன் கடைத்தேறினோம்; இந்நாள் நன்னாள் என்று துதிசெய்து, கைகளால் தழுவிக்கொண்டு மாளிகைக்குட் சென்று, அவர்கள் கருத்தறிந்து உபசாரத்துடன் அமுது உண்ணும்படியுண்பித்துச், சிலநாள் தங்கள் மாளிகையில் தங்கவைத்துக் கொண்டிருந்து, விருந்தினர்கள் செல்லுவார்களானால், மறுபடியும் மறுபடியும் அவர்கள் வருவதை விரும்புவார்கள், அவ்விடத்திலிருக்கும் மாந்தர்கள் எல்லாரும். (82)

மதில் முதற் கோயில் ஈட்ட வரைகள்ஓர் ஏழும் ஆட்ட,
மூதுபெருங் கடல்ஓர் ஐந்தும், முதல்வர்பூண் செயல்பொற் குன்றும்,
புதிது அமுது அருத்த அன்ன புவனமும் நினைந்தவ் வாறே
விதியுடன் முடிக்கும் சைவ விழுத்தவர் பலர்உண்டு அங்கே

**பொழிப்புரை:** திருமதில் முதலாகிய கோயில் அமைப்பதற்குச் சத்தகுல பர்வதங்களையும், திருமஞ்சனஞ் செய்யப் பழமையாகிய ஏழு சமுத்திரங்களுக்குள் ஐந்து சமுத்திரங்களையும், திருவாபரணங்கள் தரிக்கப் பொன்மலையினையும், புதிய திருவமுது நிவேதிப்பதற்கு அன்ன புவனத்தையும் பாவகஞ்செய்து, அவ்வாறே ஆகம விதியுடன் சிவபூசை நிறைவேற்றுகின்ற மேன்மைபொருந்திய சைவமுனிவர்கள் அந்தத் தலத்திற் பலபேர் உண்டு. (திருமஞ்சனத்துக்கு உரிய ஐந்து சமுத்திரமாவன. நெய், பால், தயிர், கருப்பஞ்சாறு, தேன் என்பவைகளாம்). (83)

படிதொழச் செல்லும் செல்வம், பதுமைதாழ் இல்லம், மீனக்
கொடியனும் வெள்கும் மக்கள், பகைஎனக் கூசி நீக்கி
முடிவறு வாழ்க்கை நச்சி முக்கணன் தொண்டர் பாதப்
பொடியணிந்து, அலக்கண் தீர்ந்த புனிதர்அம் மூதூர் எல்லாம்

**பொழிப்புரை:** உலகத்தார் எல்லாந் தொழும்படி வளரும் செல்வமும், திருமகளும் தாழ்ச்சியடையத்தக்க அழகுடைய மனைவியும், மீனக்கொடியுள்ள மன்மதனும் வெட்கும்படியான அழகுள்ள புதல்வர்களும், பகையென்று கருதி மனங்கூசி அவர்களை ஒழித்துவிட்டு, முடிவில்லாத பேரின்பவாழ்வை விரும்பிச் சிவனடியார்களுடைய பாததூளியைப் பணிந்துகொண்டு, துன்பம் நீங்கிய புனிதர்களே, பழமையாகிய அந்தத் தலத்தில் வாழ்கின்றவர்கள் எல்லோரும் ஆவர். (84)

வளங்கள்இத் தகைத்தாம் இவ்வூர் மாதவர் சைவ வேதர்,
விளங்கும்எம் கழுக்குன் றத்து விழுக்கதை, ஒழுக்கம் தோன்றக்
களங்குஅறக் கூறுக என்னத், தமியனேன் கருக்கள் தோறும்
உளம்கவன்று உழலும் ஆறு மாறும்என் றுரைக்கப் புக்கேன்

(பொழிப்புரை:) இத்தகைமை வாய்ந்த வளப்பத்தையுடைய இந்தத் தலத்தில் வாழுந் தவமுனிவர்களும், சைவத் சமயத்துக்குரிய அந்தணர்களும், விளங்குகின்ற எங்கள் திருக்கழுக்குன்றத்தினுடைய, மேன்மை பொருந்திய சரிதத்தைச் சைவசமய ஆசாரமுறைமையும் தெரியும்படி குற்றமறச் சொல்லுக என்றதனால், தமியேனாகிய நான் பிறவிகள்தோறும் மனங்கவன்று உழலும் முறைமை நீங்கும் என்று துணிந்து, சொல்லத் தொடங்கினேன். (85)

நகரச் சருக்கம் முற்றிற்று.

JL
Q2mm2Mn59TK
N73.15.6
148707



## 4. திருக்கயிலாயச் சுருக்கம்

நன்றி மாதவர், நைமிசா ரணியத்திற் சூதன்
வென்றி மாமுகம் நோக்கி,நீ முன்னரும் விதித்தாய்:
இன்றும் இன்னமும் கழுக்குன்றின் பெருமையை, இன்பம்
துன்றும் உன்சொல்லால் கேட்பதெம் விருப்பெனச், சொன்னர்

பொழிப்புரை: நைமிசாரணியத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கும் நல்ல முனிவர்கள், ஐம்பொறியாகிய பகையை ஒடுக்கி வெற்றிபெற்ற சூதமகா முனிவரின் திருமுகத்தை நோக்கிச், சுவாமி நீர் திருக்கழுக்குன்றின் மாட்சியினை முன்னம் எங்களுக்கு அருளிச் செய்தீர். இப்போதும் அதன் மாட்சியிமையைத் தாங்கள் திருவாக்கினுற் கேட்டல் வேண்டுமென்பதே எங்களுக்கு விருப்பம் என்று சொன்னர்கள். (86)

எனலும் வேதவெற்பு இறைவனைத் தனதகத்து எண்ணிக்
கனலும் கண்ணனே கடவுளே சரண்எனக் கசிந்து,
புனலும் நாட்டங்கள் தர,நெடும் பொழுதயர்ந் துருகி,
அனலும் வேள்விமா முனிவரீர் கேண்மின்என் றறைந்தான்

பொழிப்புரை: நைமிசாரண்ணிய மூனிவர்கள் இவ்வாறு சொன்ன அளவில், சூதமுனிவரானவர் வேதகிரீசுவரரைத் தம்முடைய உள்ளத்தில் தியானித்துக், காமதகனஞ் செய்த நெற்றிக் கண்ணனே! முதற்கடவுளே! நீயே அடியேங்களுக்குப் புகலிடம் என்று துதி செய்து, மனங் கரைந்து, கண்கள் ஆனந்தக் கண்ணீர் பொழிய, நெடும்பொழுது பரவசமடைந்து உருகித், தீச்சுடர் விட்டெழும்படியான வேள்விகள் செய்யும் முனிவர்களே! திருக்கழுக்குன்றத்தின் மாண்பினைச் சொல்லுகின்றேன் கேளுங்கள் என்று சொன்னர். (87)

ஆழ்படக் கிடந்தகன் கடல்அனைத் துலகினையும்
சூழ்படத் தழீஇநின்ற பேரண்டத் தின்சூழல்
ஊழ்படுத்த செம்பொன்னை யும்வெள்ளியது ஒளியாகக்
கேழ்படுப் பதுவட புலக்கயிலையங் கிரியே

பொழிப்புரை: ஆழம்படப் பொருந்தி விசாலமாகிய கடல்சூழ்ந்த, உலகங்களை எல்லாஞ் சூழும் படித் தழுவிநின்ற பேரண்டத் தொகுதியில், முறைமையாகப் பொருந்திய பொன்னிறத்தையும், வெள்ளியின் ஒள்ளிய நிறம் பொருந்தச் செய்வது, வட திசையிலிருக்கும் திருக்கயிலாயமலை. (88)

புணைந்த தம்மறுத் துறந்து.அமுது அளப்பில பொதிந்து
துணைந்த தண்கதிர் திசைதொறும் திசைதொறும் துளக்கி
நனந்த லைப்புவி அகத்திருள் புறத்திருள் நீக்கி
அனந்த வெண்மதி கலந்து உதித் தனையதுஅவ் அசலம்

பொழிப்புரை: எண் இல்லாத சந்திரர்கள், தம்முடைய களங்கம் நீங்கி, அளவில்லாத அமுதில் நிறைந்து, கற்றைகற்றையாய்க் குளிர்ச்சி பொருந்திய கதிர்களைத் திசைகள் தோறும் பரப்பிப் பிரகாசித்து, இவ்வுலகத்திலிருப்பவர்களுடைய அகத்திருளாகிய அஞ்ஞானத்தையும், புறத் திருளாகிய பூத இருளையும் நீக்கி, ஒருங்கு திரண்டு உதயமாகியது போல இருக்கின்றது அந்தத் திருக்கயிலாயமலை. (89)

தேவ ராயவர், இமகரன் கடுப்பர்;அத் தெய்வப்
பாவை மார்எலாம் பாமகள் பொருவுவர்; படிவாய்
யாவர் ஆயினும் நாரதர்க்கு எதிருவர்; இறைஞ்சப்
பூவர் சோலைஅக் கயிலையிற் புகுத்தஅப் பொழுதே

பொழிப்புரை: மலர்கள் நிறைந்த சோலை சூழ்ந்த அந்தக் கயிலைமலையில், சிவபெருமானைப் பணிவதற்காகச் சென்ற அப்போதே, அதினுடைய பேரொளியினுலே தேவர்களானவர்கள் யாவரும் சந்திரனுக்கு ஒப்பாவர்கள். அந்தத் தேவர் மாதர்கள் யாவரும் சரசுவதிக்கு ஒப்பா வார்கள். இவ்வுலகத்திலிருப்பவர்கள் எவர்களேயானுலும் நாரத முனிவருக்கு ஒப்பாவார்கள்.

(தொடரும்) (90)

—ஆசிரியர்



18—1—73 அன்று திருநெல்லிக்கா (வல்), திருநெல்லிவனநாதர் திருக்கோயில் திருப்பணிக் கால்கோள் விழாவில், கலந்துகொண்ட மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.மன்னை ப. நாராயணசாமி அவர்களும், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பர் அவர்களும் திருப்பணிக் குழுத் தலைவர் திரு. டி. எஸ். கல்யாணசுந்தரம் அவர்களும்.



18—1—73 அன்று திருநெல்லிக்கா (வல்) திருநெல்லிவனநாதர் திருக்கோயில் திருப்பணிக் கால்கோள் விழாவில், கால்கோள்விழாக் கல்வெட்டைத் திறந்து வைத்த மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களும், திருப்பணிக் குழுவின ரும். தஞ்சைத் துணை ஆணையர் திரு. வி. எஸ். கோதண்டபாணி. பி. எஸ். சி



18—1—73 அன்று திருநெல்லிக்கா(வல்) திருநெல்லிவனநாதர் திருக்கோயில் திருப்பணிக் கால்கோள் விழாவில், பயன்படுத்திய வெள்ளிக்கரண்டியை ரூ. 1001/—க்கு ஏலம் எடுத்த திருப்பணிக்குழுத் துணைத் தலைவர் திரு. க. கண்ணுசாமி நாயகருக்கு மாண்புமிகு அறநிலைய அமைச்சர் வழங்கும் காட்சி. (ரு 1001/)



18—1—73 அன்று திருநெல்லிக்கா(வல்) திருநெல்லிவனநாதர் திருக்கோயில் திருப்பணிக் கால்கோள் விழாவில், தலைமை வகித்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் உரை நிகழ்த்தும் காட்சி.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments